


பக்கம் 09 ↘ பக்கம் 11 ↘ பக்கம் 17 ↘ பக்கம் 24 ↘

விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 107

வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 29 திங்கட்கிழமை (12/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## வடக்கில் தாய், தந்தை இருவரையும் இழந்த சிறார் எண்ணிக்கை 2,087

### 10,404 சிறுவர் இருவரில் ஒருவரை இழந்துள்ளனர்

யாழ்ப்பாணம், மார்ச் 12

வட மாகாணத்தில் 2 ஆயிரத்து 87 சிறார்கள் தமது தாய், தந்தை இருவரையும் இழந்த நிலையில் உள்ளனர். 10 ஆயிரத்து 404 சிறார்கள் தாய் அல்லது தந்தை ஆகிய இருவரில் ஒருவரை இழந்த நிலையில் உள்ளனர்.

இந்தச் சிறார்களில் சிறுவர் இல்லங்களில் இருப்பவர்களை விட அதற்கு வெளியே உறவினர்களுடன் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது. இவ்வாறு 10 ஆயிரத்து 878 சிறார்கள் தங்கியுள்ளனர். அரச மற்றும் தனியார் சிறுவர் இல்லங்களில் ஆயிரத்து 613 சிறார்கள் தங்கியுள்ளனர்.

வடமாகாண நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள எண்ணிக்கையே இவை என அதன் ஆணையாளர் ரி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

உள்நாட்டுச் சண்டை காரண 27↘

## ஹட்டனில் எதிர்க்கட்சிகள் போராட்டம்

கொழும்பு, மார்ச் 12

அரசுக்கு எதிரான அடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஹட்டன் நகரில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மனோ கணேசன், விக்கிரமபாகு கருணாரத்ன, சிறிதுங்க ஜெயசூரிய, எஸ். 27↘

## இலங்கைக்கு ஆதரவாகப் பிரேரணை ஜெனிவாவில் கொண்டுவர சீனா முயற்சி

### கொழும்பு மண்டியிட்டதால் பீஜிங் தீவிர ஆலோசனை

ஜெனிவா, மார்ச் 12

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றிக்கொள்வதற்கு அமெரிக்கா தீவிரமாகக் களமிறங்கியுள்ள தற்போதைய சூழ்நிலையில், இலங்கைக்கு ஆதரவான பிரேரணையொன்றை சீனா முன்வைத்து அதை நிறைவேற்றுவதற்காக அவசர மந்திராலோசனைகளை நடத்திவருகிறது என நம்பத்தகுந்த வட்டாரங்களில்இருந்து நேற்றுமாலை 'உதயனு'க்குத் தகவல் கிடைத்தது.



ஜெனிவாவில் தமக்கு இக்கட்டானதொரு நிலைமை வரப்போகின்றது என்பதை உள்ளூர அறிந்து வைத்துள்ள இலங்கை அரசு, சீனாவிடம் மண்டியிட்டு விடுத்த அவசரவேண்டுகோளையடுத்தே இவ்வாறு இலங்கைக்கு ஆதரவான பிரேரணை ஒன்றை சீனா தாக்கல் செய்வதற்கு ஆலோசித்து வருகின்றது எனவும் அந்த வட்டாரங்களிலி 27↘

## பாலைதீவு உற்சவத்தில் திரண்ட பக்தர்கள்

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் நாடெங்கிலும் இருந்து 13 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் நேற்றுக் கலந்து கொண்டனர். நேற்றுக் காலை 7.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நாடெங்கிலும் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்ணாடி இழைப் படகுகளிலும், முன்னூறுக்கும் மேற்பட்ட றோலர்களிலும் யாத்திரிகர்கள் பாலைதீவுக்கு வந்திருந்தனர். குடிதண்ணீர், சுகாதாரம், மலசல கூட வசதிகளை வேலணை பிரதேச சபையினர் மேற்கொண்டிருந்தனர். (ஒ)

## கிளிநொச்சி புதிய செயலகம் அடிக்கல் நட்டார் பஸில்

### புனரமைக்கப்பட்ட கல்மடுக்குளமும் திறப்பு



கிளிநொச்சி, மார்ச் 12

கிளிநொச்சி மாவட்ட செயலக புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில் இதற்கென ஒதுக்கப்பட்டிருந்த காணியில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் 27↘

## மருத்துவ உதவியாளர்கள் நாளை முதல் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச். 12

சுகாதாரத்துறையின் கீழ் உள்ள நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தினர் நாடளாவிய ரீதியில் நாளை செவ்வாய்க்கிழமை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

இதன்படி வடக்கு வைத்தியசாலைகள் அடங்கலாக நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் பணி புரிகின்ற மருந்தாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், எக்ஸ் கதிரியக் 27↘

## முஸ்லிம் நாடுகளை நம்பியிருந்த இலங்கையின் தலையில் பேரிடி

### கைவிட்டுப் பறந்தது ஜோர்தான்; 6 நாடுகள் தொடர் மௌனம்

கொழும்பு, மார்ச்.12

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை எதிர்க்கும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட பிரபல முஸ்லிம் நாடான ஜோர்தான், தனது முடிவை மறுபரிசீலனைக்கு உட்படுத்தத் தீர்மானித்துள்ளது என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை அடுத்தும், இராஜதந்திர நடவடிக்கைகளாலும் இலங்கைக்கு எதிர்ப்பான நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், ஜோர்தானின் இந்த முடிவு இலங்கை அரசை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் 10 நாடுகள் முஸ்லிம் 27↘

## குடிசன மதிப்பீடு தகவல் பெற விசேட ஏற்பாடு

குடிசன மதிப்பீடு தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து உரிய தெளிவைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் விசேட தொலைபேசி இலக்கங்களை குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. 011 268 9595, 011 268 8383 மற்றும் 011 268 3737 ஆகிய இலங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## முன்னாள் போராளிகள் 500 பேர் சுற்றுலா

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் 500 பேர் கொண்ட அணி ஒன்று தென்பகுதிக்கான சுற்றுலாப் பயணம் ஒன்றை நேற்றுமுன்தினம் மேற்கொண்டுள்ளது. இவர்கள் முதற்கட்டமாக மஹியங்கனை, தம்பன்னாவைப் பிரதேசங்களைச் சென்று பார்வையிட்டுள்ளனர். முன்னாள் புலி உறுப்பினர்களைச் சமூகத்துடன் இணைத்துக் கொள்ளும் ஒரு முயற்சியாக சிறைச்சாலைகள் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் இந்தச் சுற்றுலா இடம்பெறுவதாகவும் தென்பகுதியின் முக்கியமான பகுதிகளுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சபாநாயகர் இன்று பாகிஸ்தான் பயணம்

பொதுநலவாய நாடுகள் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அடங்கிய குழுவினர் இன்று பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு பயணத்தை ஆரம்பிக்கின்றனர். ஆசிய வலய நாடுகள் பங்கு கொள்ளும் பொதுநலவாய கூட்டத் தொடர் நாளை 13ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை மூன்று நாள்களுக்கு இடம்பெறவுள்ளது. இந்த வலய நாடுகள் எதிர்நோக்கும் தீவிரவாதம், பொருளாதாரப் பிரச்சினை, பெண்கள் எதிர்நோக்கும் சித்திரவதைகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளன.

## வர்த்தகரைக் கடத்திய நால்வர் கைது

வர்த்தகர் ஒருவரை கடத்தி 30 லட்சம் ரூபா கப்பம் பெற முயன்ற நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். தங்கல்லை பிரதேசத்தில் குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து ஏனைய இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தப்பட்ட வர்த்தகர் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்

## புலிகளின் சீருடை முல்லையில் மீட்பு

முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் வோக்கி டோக்கிகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். விசேட பொலிஸ் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இரண்டு சீருடைகளும், நான்கு வோக்கி டோக்கிகளும் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவிடோம் ஜெனிவா மாநாடு முடிந்ததும் போராட்டம்

### தயாராகின்றனர் இனவாதிகளும் பங்காளிக் கட்சிகளைச் சார்ந்தோரும்

கொழும்பு, மார்ச் 12

நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் முன்மொழிந்துள்ள அதிகாரப் பரவலாக்கல் உள்ளிட்ட முக்கியமான பல பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக்கூடாது என வலியுறுத்தியும், அது தொடர்பில் சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களின் ஆதரவைத் திரட்டும் முனைப்புடன் நாடளாவிய ரீதியில் பெரும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு கடும் போக்குடைய அரசின் பங்காளிக்கட்சிகளும், இனவாதப் போக்குடைய சிங்கள அமைப்புகளும் தீர்மானித்துள்ளன என நம்பகரமாக நேற்று 'உதயனு'க்குத் தெரியவந்தது.

ஜெனிவா மாநாடு நிறைவடையும் கையோடு இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ள மேற்கூறப்பட்ட அமைப்புகளும், அரசியல் கட்சிகளும், இதற்கான நடவடிக்கைகளை முழுவீச்சுடன் மிகவும் சூட்சுமமான முறையில் முன்னெடுத்து வருகின்றன என்றும் அறியமுடிகின்றது.

அதேவேளை, இலங்கைக்கு எதிரானது எனக் 27↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமெரிக்க பிரேரணையின் காலக்கெடுவுக்குள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமா இலங்கை?

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் என வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு கால அவகாசமொன்று வழங்கப்படும்.

இக்காலப்பகுதிக்குள் அரசு அதனை முழுமையாகச் செய்து முடிக்குமா அல்லது முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஏதாவது சிக்கல்கள் உள்ளனவா என்பது குறித்து அரசியல் பிரமுகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவோம் என இலங்கை அரசு உறுதியளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு இனவாதத்தைத் தூண்டும்



ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் மின்சாரக் கதிரை என்ற போலிக் கதையைக் கட்டவிழ்த்துவிட்டு நாட்டில் இனவாதத்தைத் தூண்டிக் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கும்.

ஜெனிவாப் பிரேரணை சிங்கள மக்களுக்கு எதிரானது எனப் போலிக் காரணங்களைக் கூறி மக்களைத் திசைதிருப்புவதற்கும் அரசு முயற்சிக்கும். இதனை நாட்டுமக்கள் உணர்ந்து நல்வழியில் செயற்படவேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ள சிபாரிகளை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்துமா என்பது சந்தேகத்துக்கிடமாகவே உள்ளது எனத் தெரிவித்தார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய.

## சூழ்ச்சிக்கு இடமளியோம்



அரசு எவ்வாறான கருமங்களை முன்னெடுத்தாலும் பரவாயில்லை. ஆனால், நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம்.

அரசு நல்லிணக்கக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவோம் எனக் கருத்து வெளியிடுவது நாட்டுக்கு அபத்தமானது. வெள்ளையர்களின் சூழ்ச்சியின் முதற்கட்டமே இது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டிலுள்ள சிங்கள மக்களுக்கு இது தொடர்பில் நாம் தெளிவுபடுத்துவோம். - என்றுரைத்தார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர.

## கருணா, ஈ.பி.டி.பி.யால் சிக்கல்



நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதில் பாரிய சிக்கல்கள் உள்ளன.

கருணா அம்மான் 600 பொலிஸாரைக் கொலைசெய்தார் என நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் அரசின் பிரதியமைச்சர்.

அடுத்தபடியாக ஈ.பி.டி.பி. சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபடுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஈ.பி.டி.பி.யின் தலைவரோ அரசின் அமைச்சர். அப்படியாயின், அரசு இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமா? - எனக் கேட்டார் ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா.

## அதைச் செய்தே தீரவேண்டும்



நல்லிணக்க ஆண்ணக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவோம் என சர்வதேசத்திடம் உறுதி பூண்டுள்ளது அரசு. எனவே, அதனைச் செய்தே ஆகவேண்டும்.

எனினும், கடும் போக்குடைய அமைச்சர்களான விமல், சம்பிக்க ஆகியோர் இதனை எதிர்க்கின்றனர். மறுபுறம் பிக்குகளுடன் இணைந்து பேரினவாதி குணதாச இதற்குப் போர்க்கொடி தூக்கியுள்ளார். அப்படியாயின், இதனை எவ்வாறு முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும்? அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களே எதிர்க்கின்றனர். இதற்கெதிராக நடவடிக்கை எடுக்காது, ஜனாதிபதி மஹிந்த மௌனம் காப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. - எனக் கூறினார் நவசமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன. (ஒ-சி)

### 3 மாதக் குழந்தையின் நெஞ்சில் கத்தியை வைத்து

## நகைகள், பணத்தைச் சூறையாடிய இரு கொள்ளையருக்கு பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் கடந்த ஜனவரி மாதம் மூன்று மாதக் குழந்தையின் நெஞ்சில் கத்தியை வைத்து 13 பவுண் நகைகள் மற்றும் 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இருவருக்கும் பிணை நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்த போதும் நீதிவான் அதனை நிராகரித்து தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

நான்கு கொள்ளைச் சம்பவங்களில் சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் உடைமைகளைக் கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவரும், அவற்றைக் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவருமாக மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கச்சேரி நல்லூர் வீதியில் கடந்த ஜனவரி 3ஆம் திகதி இரவு 8மணிக்கு கறுப்புத் துணியினால் முகத்தை மறைத்தவண்ணம் வாள்கள், கத்திகளுடன் சென்ற 3 பேர் வீடு புகுந்து 3 மாதக் குழந்தையின் நெஞ்சில் கத்தியை வைத்து 13 பவுண் நகைகளையும் 2லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்தனர் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறு சூறையாடிய நகைகளில் ஒருபகுதி நகையை இரண்டாம் சந்தேக நபர் விற்றபோது அதனை நகைத் தொழிலாளியான ஏழாலை வடக்கைச் சேர்ந்த இராசதுரை ராகுலன் என்பவர் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டாவது சந்தேகநபரான யாழ். 5ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பத்மநாதன் சுமந்தன் சார்பில் வாதாடிய சட்டத்தரணி வி. தவபாலன் பிணை மனுக்கோரியிருந்தார். அதனைப் பரிசீலித்த நீதிவான் மூன்று வழக்குகளில் பிணை வழங்கிய போதும் மூன்று மாதக் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட வழக்கில் பிணை வழங்க அனுமதி மறுத்து தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

முதலாவது சந்தேகநபரான அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த துரைராஜா அன்ரன் அமலநேசன் சார்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் முன்னிலையாகியிருந்தார். முதலாவது சந்தேகநபருக்கு பிணை வழங்கப்படவில்லை.

வழக்குத் தொடுநர் சார்பில் யாழ். பொலிஸாருடன் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா முன்னிலையாகி பிணை வழங்குவதை ஆட்சேபித்திருந்தார். இந்த வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## இலங்கைக் கடற்படை அராஜகம் தமிழக மீனவர்கள் 16 பேர் காயம்

சென்னை, மார்ச் 12

நடுக்கடலில் இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 16 இராமேஸ்வரம் மீனவர்கள் காயமடைந்தனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வதேச கடல் எல்லைக்கு அருகே பாக் ஜலசந்தியில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைப் படையினர் தமிழக மீனவர்களைத் தாக்கியுள்ளனர்.

மரக் கட்டைகள், கற்கள், போத்தல்களைக் கொண்டு இலங்கைப் படையினர் இந்தத் தாக்குதலை தொடுத்ததாக கூறப்படுகிறது. இதன்போது 25 வயது மீனவர்களில் ஒருவரின் கால் முறிந்தது. மொத்தம் 16 பேர் படுகாயமடைந்தனர்.


கால் முறிவு ஏற்பட்டுள்ள மீனவர் மதியழகனை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மற்றவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மதியழகன் தாக்குதல் குறித்துக் கூறுகையில், இலங்கைக் கடற்படையினர் மிகக் கொடூரமாகத் தாக்கினர். எங்களது மீனவர்கள் 25 படகுகளில் இருந்தோம். எங்களைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர். இதில் பல படகுகள் சேதமடைந்தன. மீன்பிடி வலைகளையும் அறுத்தெறிந்தனர் - என்றார்.

இது அப்பட்டமான மனித உரிமை மீறல் என்று தமிழக மீன்வளத்துறை கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து வெறித்தனமாக தாக்கப்பட்டு வருவது குறித்து மத்திய அரசு கண்டு கொள்ளாமலேயே இருந்து வருவது தங்களை அதிக வேதனைக்குள்ளாக்கியுள்ளதாக இராமேஸ்வரம் மீனவர்கள் குமுறுகின்றனர். (ஒ-சி)

## பாவ நெருப்பை அணைக்க முடியுமா?




## போரின்போது கைவிடப்பட்ட வாகனங்களின் விவரம்

(நேற்றைய தொடர்ச்சி)

கைவிடப்பட்ட வாகன விவரம் வருமாறு:-

வாகன இலக்கம், இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம்

GZ-1669- FME360864- FME48135,28-2069-6BD1-333993- TXD45-1692242, GP-0343- YLH-169287-YLE 465685,42-0483-692-D01-5-24886,LC-6335-LME356990-LALG03887,HA-9759-DME 36 2692- DME124444, JC-0450-497SP27DV2882678-MAT37441649R, GR-6768-TF154916-WGE4T-150427, 28-7707- 4BB1-333035-KS21-7740012GJ-9076-R2-621344- SE28T-204072,JQ-9343- J08CUA 14523-FDIJLD-11076, 29-4776-6DR5-14975-D0360-01379, LA-1396-TDE-412299-SDE-55468, 26-1207- 692001-028768- 2.440 73E+11, JV-0237- T24931, 227-5842-6D14-786170- FK335E-553419, 26-9797- DA120-861101-16808080,43-0181-CTE-161412- CTE281173, BZE-274742- BZE-385476, EPJP-8340- T24366, EPJV-0187- T24938, LA-9882-697D41 KUZ8881 03-MAT39932 157R45523-41-9307- 692D01 8661997-34407381078,41-8522-692D01866591,CVE199433-ALEM217483, 227- 3238-4HF1-218776- NPR66L 7407915-LB-7152-4JG2-751D95 [illegible] PA-0560-NHS69E-741290 L 43-4371-4BE1-867843-NPR58L-702163, GK-2793-UBE-338285- UBE-457761, LA-6480-497SP 27FUZ85 7080-MAT37441659R29265, JL-8059-497SP271JV2921 492-226-9993-KSE-300167, GO-2926-2C-3212502-CM55-0043637,227-1802-4BE1-40 3608,GU-6408-4D56-HT 3472-P15-0021006,GV-9544-DMH2020 35-CME 486320, 41- 1806-4HG1-104559-KS22-[illegible]-GY-2481-XME 367930-ZMHO72154-GE-8012-3L-3244185-LY101-0002020, QA-9290-AEMS MD30497, 15AMWNH 34 909- H58-108594, 2L-1740 764-LH61V-0127144, LA-6683-NDE-415756,21-3423-M24DJ080753-F240J083715, 203-3009-24 MBCM78782-24FBCM 77895, 21-3528-M24DK-083094-F24DL088261,227-2654-2C-3067784-CM65-002S433,64-3153-CD20-327164X- SB14, 001554-07SRI 5297-RM-77611-48B233AD, MH56D-186337, 03SRI8671-15AM WNH 9861- AH58, 91468-227-2471-4BE1-533916-NKR58E 7409066,202-0984-24M9 6D91410- 24F96D90 282, HW-2106, OG1K320 25556, MD626AG1532K 26872, UB-4818- OG3N7250 8343- MD626 BG3072NO75 38,21-2699-M24DG-076604-F24DG0796632,15MWNH-34820-H58-107603,42-7260-4BC2-690707- NKR57L-0437026,36-4618-C258764-A342717,EPJV-0161-T24939, CPGZ-4312- AENBJJ77442-24FBJ J89600. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இன ஒடுக்கலின் மறுவடிவத்தை நாடிச் செல்கிறதா இலங்கை?

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் உள்ளிட்ட 31 கத்தோலிக்க குருமார் கையெழுத்திட்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தலைவருக்கும், மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பிய கடிதம் இனவாதிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது.

அரசில் உள்ள பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள், மக்களால் பெரிதும் மதிக்கப்படும் ஒரு மதத் தலைவருக்கு எதிராக சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை வெளியிட்டிருப்பது கண்டனத்துக்குரியதாகும்.

கத்தோலிக்க திருச்சபை இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது. அதில் தமிழ் மக்களும் இருக்கிறார்கள், சிங்கள மக்களும் இருக்கிறார்கள். ஆயர் இராயப்பு ஜோசப் ஒரு தமிழர் என்பதே அவர் விமர்சிக்கப்படுவதற்கு பிரதான காரணம். இதே நடவடிக்கையை ஒரு தென்னிலங்கை ஆயர் மேற்கொண்டிருந்தால் இந்த இனவாத அமைச்சர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பி இருப்பார்களா?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனி ஈழம் அமைத்தால் பேராயராகத் தாம் வரலாம் என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் நினைத்துக் கொண்டிருந்தார் என்று, மட்டக்குளியில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது, அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறி இருக்கிறார். அதற்கும் மோசமான வன்மத்துடன், மன்னார் மறைமாவட்ட ஆயரை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்கிறது ஹெல உறுமய.

மன்னார் மறைமாவட்ட ஆயர் நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் மத்தியில் சேவையாற்றி வருபவர். போர்க் காலத்தில் தமிழ் மக்களோடு மக்களாக இருந்து, அவர்களது துயரங்களில் முழு அளவில் பங்கு கொண்டவர். தமிழ் மக்களுக்காக மட்டும் அல்ல முஸ்லிம் மக்களுக்காகவும் குரல் கொடுத்து வருபவர். போர்க் காலத்தில் அவர் ஆற்றிய சேவைகள் மகத்தானவை. அவரைக் கொச்சைப்படுத்தும் அமைச்சரும் ஏனையோரும் தாம் ஒரு மதத்தையும் சேர்த்துக் கொச்சைப்படுத்துகிறார்கள் என்பதை மறந்துள்ளனர்.

கத்தோலிக்க குருமாரினால் கையெழுத்திடப்பட்டு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தலைவருக்கும் உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தில், போர்க் குற்றங்களுக்காக இலங்கையைத் தண்டிக்கும்படியோ, ஜனாதிபதியைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்துமாறோ கோரிக்கை முன்வைக்கப்படவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் கால வரம்பு நிர்ணயிக்கப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும். பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்றுவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு காலத்துக்குக் காலம் தெரியப்படுத்தவேண்டும். போரினால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும். இவையே கடிதத்தின் உள்ளடக்கம்.

இதில் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் பொருளடக்கம் எதுவும் இல்லை. நல்லிணக்க ஆணைக்குழு ஐ.தே.கவினாலோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலோ அமைக்கப்பட்ட ஒன்றல்ல. நாட்டின் உயர் அரசியல், ஆட்சித் தலைவரான ஜனாதிபதியே அதனை நியமித்தார். அதன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான கடப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு. மேலும் போரினால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குவதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. அதனை விரைந்து செயலாக்கினால் மட்டுமே அவர்கள் தமக்குள்ள இல்லாமைகளை, கஷ்டங்களை ஓரளவிலேனும் போக்க முடியும்.

ஆகவே, கத்தோலிக்க மதக்குருமாரினால் எழுதப்பட்ட கடிதம் நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டது என்று அர்த்தமற்ற வெற்றுக் கூச்சல் போடுவதில் அர்த்தம் இல்லை.

இறுதிப் போரின்போது மனிதாபிமானத்துக்கும் மக்கள் நேயத்துக்கும் விரோதமான, இனச் சகோதரத்தைத் தானும் மதிக்காத, கணக்கில் கொள்ளாத, சம்பவங்கள் இடம்பெற்றன. அப்போதெல்லாம் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் விதத்தில் மன்னார் ஆயரோ கத்தோலிக்க குருமாரோ அறிக்கை விடவில்லை.

இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச விசாரணை தேவை இல்லை. அது இலங்கையின் இறைமையில் அப்பட்டமான தலையீடு என்று கூறுவதற்கு கொழும்பு மாவட்ட பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு உரிமை உண்டென்றால், மன்னார் மாவட்டப் பேராயருக்கும் தாம் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்கள் சார்பாகக் குரல் கொடுக்கவும் செயற்படவும் உரிமை உண்டு. சகலதையுமே இனவாத, இன ஒடுக்கல் கண்களோடு பார்க்கும் அமைச்சர்களும் தெற்கின் அரசியல் தலைவர்களும் நியாயவழி நின்று, நீதிமுறை நின்று, செயற்படுவதற்கு மனம் கொள்ளக் கூடாதா?

ஒரு தனிமனிதனுக்குப் பாதிப்புகள் உண்டாக்கப்பட்டால் அல்லது அவனுக்குச் சட்டத்துக்கு அப்பாற்பட்டு, அதனையும் மீறி உரிமைகள் மறுக்கப்பட்டால், நீதிமன்றத்தை நாடும் தேவை உண்டாகிறது; அதற்கான உரிமையும் அவனுக்கு உண்டு. அது போன்றே, மக்கள் குழுமம் ஒன்றின் மீது இன்னொரு சாரார் ஆதிக்கம் செலுத்தினால் நியாயம் கேட்டுப் போராடுவதற்கும், அதனால் பயன் எதுவும் கிடைக்காத பட்சத்தில் நீதி வேண்டி வழக்குத் தொடரவும் உரிமை உண்டு.

இலங்கை அரசு போர் முடிவுற்ற பின்னரும், தமிழர்களின் உரிமைகளை வழங்காது அவர்களை அடக்கி ஒடுக்கி, இரண்டாம் தரப் பிரசைகளாக வைத்திருக்கவே முனைந்து நிற்பதால்-

தமக்கு நீதியுடன் கூடிய தீர்வு ஒன்றைப் பெறுவதற்குச் சர்வதேச சமூகத்தை நாடுவதில், கோருவதில் தவறு என்ன?

ஐ.நா.நிபுணர் குழுவின் சிபாரிசுகளைக் கண்டு கொள்ளாதிருப்பதற்காக அரசு, தானே முந்திக் கொண்டு நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளையேனும் நடைமுறைப்படுத்த முன்வராமல், காலத்தையும் வாங்கி, தனது அமைச்சர்களையும் அதிகாரிகளையும் வெளிநாடுகளுக்கு ஆதரவு தேடுவதற்காக மக்களின் பணத்தை அள்ளிச் செலவிடும் அரசு, இன்னும் வேறென்ன வழிகளில் தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்குவதற்கு, காலத்தை வாங்கப் போகிறது..?

**இன்றைய நெருக்கடியான நிலையில் விமல் வீரவன்ஸ மற்றும் ஹெல உறுமயத் தலைவர்கள் போன்றவர்களின் கருத்துகள் நாட்டுக்கு நன்மை அளிக்கமாட்டா. சர்வதேச அரங்கில் நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளவே உதவும் இதனை இத்தகையோர் எப்போது உணரப் போகிறார்கள்?**

**வெளிப்புறத் தோற்றத்துக்கு கனபரிமாணத்தோடு தென்படாவிடினும், ஒரு சகாப்தத்துக்கு முன்னர் ஆபிரிக்க நாடுகளில் வேர் கொண்டிருந்து இப்போது முற்றாக அற்றுப்போன இன ஒடுக்கலின் (*Apartheid*) மறுவடிவமே இலங்கையில் நடைமுறையில் உள்ளதெனக் கருதுவது ஒருவகையில் தப்பன்று!**

# பாடசாலைகளை நான்கு பிரிவுகளாக்கி சமூக விஞ்ஞானப் போட்டி நடத்த ஏற்பாடு

## அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதே நோக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

மாணவர்கள் தொகை குறைவாக இருக்கும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் பாடசாலைகளை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தி சமூக விஞ்ஞானப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

200 இற்கும் குறைவான மாணவர்கள் கற்கும் பாடசாலைகள், 201 தொடக்கம் 500வரை மாணவர்கள் கற்கும் பாடசாலைகள், 501 தொடக்கம் 1000வரை மாணவர்கள் கற்கும் பாடசாலைகள் 1000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கற்கும் பாடசாலைகள் என நான்கு வகையாக பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டு இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டி தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை வகுப்பு ரீதியாக நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகிய நிலைகளில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட்டு தெரிவானோர் விவரம் கோட்ட மட்டப் போட்டிக்கு அனுப்பப்படல் வேண்டும். கோட்ட மட்டப் போட்டி ஏப்ரல் 10 ஆம் திகதியும், வலய மட்டப் போட்டி மே மாதம் 30 ஆம் திகதியும் மாகாண மட்டப் போட்டி ஜூலை மாதம் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளது எனவும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-190)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சித்திரப் போட்டிகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஆரம்பப் பிரிவு வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சிறுவர் சித்திரப் போட்டியை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளில் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் போட்டிகளை நடத்துமாறு வட மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இந்த நிலையில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்ட மட்டப் போட்டியை ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்பும், வலயமட்டப் போட்டியை மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பும் நடத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்டப் போட்டி ஜூன் மாதம் 9 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

பாடசாலை மட்டப் போட்டியில் ஆரம்பப் பிரிவு வகுப்புக்களில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களையும் பங்குபெற வைத்து ஒவ்வொரு வகுப்பிலும் முதலாம் இடத்தைப் பெற்ற ஒரு மாணவரை கோட்ட மட்டத் தெரிவுக்கு அனுப்புதல் வேண்டும்.

கோட்ட மட்டப் போட்டியிலும் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் வலய மட்டப் போட்டியில் பங்கு பெற முடியும்.

வலய மட்டப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெறும் மாணவர் மாகாண மட்டப் போட்டியில் பங்குபெற அனுமதிக்கப்படுவார். இந்தப் போட்டி தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்கும் மாணவர்களுக்கு வகுப்பு ரீதியாக நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-190)

# புகையிலைச் செய்கையில் விவசாயிகளுக்கு குறைந்தது ஆர்வம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். குடாநாட்டில் விவசாயிகள் இம் முறை புகையிலைச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டவில்லை என்று செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சி மற்றும் தீவகப் பகுதிகளில் புகையிலைச் செய்கை இந்த முறை அதிகளவில் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது புகையிலைச் செய்கையில் ஈடுபட்டவர்கள் அதனை அறுவடை செய்து வெயிலில் காய வைக்கும் பணியில் ஈடுபட்டும் வருகின்றனர்.

கடந்த போகத்தில் புகையிலையின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்து காணப்பட்டதால் செய்கையாளர்கள் பெரும் நஷ்டம் அடைந்தனர்.

இதனை அடுத்துப் புகையிலை செய்கை குடாநாட்டில் இம்முறை அதிகளவில் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த காலங்களில் குடாநாட்டில் புகையிலைச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். முன்னர் புகையிலைச் செய்கையால் விவசாயிகள் அதிக வருமானத்தைப் பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-17)

# ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு காலை உடற்பயிற்சி அவசியம்

## வடமாகாணக் கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு அறிவிப்பு

பருத்தித்துறை, மார்ச் 12

பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு காலையில் உடற்கல்விச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் என வட மாகாணக் கல்வித்திணைக்களம் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

தினமும் ஆரம்பக்கல்வி மாணவர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து உடல் அப்பியாசங்களை செய்ய வேண்டும்.

ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கு 20 நிமிடங்களும் தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கு 25 நிமிடங்களும் காலையில் உடல் அப்பியாசப்பயிற்சிகள் வழங்க வேண்டும் எனவும் இதற்கான நடவடிக்கைகளை பாடசாலை சமூகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-190)

# நாகதம்பிரான் ஆலயத்தின் கட்டடப் பணிகள் மும்முரம்

பருத்தித்துறை, மார்ச் 12

நாகர்கோயில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் கட்டட வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தை ஜூன் மாதம் 4 ஆம் திகதி நடத்துவதற்கு ஆலய பரிபாலன சபை முடிவெடுத்துள்ளது.

இதனையடுத்தே இந்தப் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் விநாயகர், முருகப் பெருமான், மகா விஷ்ணு, நவக்கிரக தேவர்கள், வைரவப் பெருமான் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் பூர்வீக நாகதம்பிரானுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதுவரை 70 வீதமான கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தம்பமண்டபம், மடைப்பள்ளி, களஞ்சியம் போன்ற கட்டுமானப் பணிகள் குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளன என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ம-190)

# "பாஜ்" மிதவை மூலம் இரணைமடு தண்ணீரை நெடுந்தீவுக்கு எடுத்துவருவது சாத்தியமற்றது

## மக்கள் ஆட்சேபனை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

"பாஜ்" மிதவை மூலம் இரணைமடு தண்ணீரை நெடுந்தீவுக்கு எடுத்து வருவது சாத்தியமற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடலின் போது நெடுந்தீவு மக்கள் இவ்வாறு தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

இரணைமடு தண்ணீரை நெடுந்தீவுக்கு எடுத்த வருவது குறித்து கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. கிராமிய நீர் விநியோகத் திட்டம் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டதான பகுதிக்கு ஜப்பான் நன்கொடையாக வழங்கிய பணத்தில் இருந்து நெடுந்தீவுக்கு தண்ணீர் விநியோகிப்பது தொடர்பான இந்தக் கலந்துரையாடலிலேயே இவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

எந்திரி கே.பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் நெடுந்தீவு, மல்லாகம், வட்டக்கச்சி பகுதிகளுக்கென 2.417 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த திட்டம் 30 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவுத் துறைமுகத்தில் படகுகளை எடுத்து வருவதே சிரமம். அத்துடன் கடல் கொந்தளிப்புக் காலங்களில் 'பாஜ்' மிதவைகளில் தண்ணீரை எடுத்துவருவது என்பது பெரும் சிரமம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது கடல் நீரை நன்னீராக்கி வழங்கக் கூடியதான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என பிரதேச சபைத் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் அதுவும் சாத்தியமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரபட்ச இடமாற்றம்

## வேதனையில் வன்னி மாவட்ட ஆசிரியர்கள்

**வன்னி மாவட்டத்தில் இருந்து கல்வி வலயங்களினால் சேவை மூப்பின் அடிப்படையில் இடமாற்றம் வழங்கப்பட்ட 100இற்கும் மே பட்ட ஆசி ரியர்களுக்கு உரிய இட மாற்றக் கடிதங் களை மாகாண கல்வி அமைச்சு வழங்கவில்லை.**

வலி.வடக்கு, மார்ச் 12

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் அண்மையில் இடம்பெற்ற ஆசிரியர் இடமாற்றத்தில் சேவை மூப்பு கருத்தில் கொள்ளப்படாது பாரபட்சமான முறையில் இடமாற்றம் இடம்பெற்றுள்ளதாகப் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்ட ஆசிரியர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள்.

வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு மற்றும் தீவக கல்வி வலயங்களில் இருந்து சுமார் 335 ஆசிரியர்கள் இடமாற்றத்திட்டத்தின் கீழ் கல்வி வலயங்களினால் விடுவிக்கப்பட்டு இருந்தார்கள்.

இந்த இடங்களில் இருந்து இடமாற்றத்துக்கு உள்ளாகிய ஆசிரியர்களுக்கு பிரதியீடாக வலிகாமம், யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி கல்வி வலயங்களில் இருந்து சுமார் 288 ஆசிரியர்கள் வவுனியா தெற்கு,மன்னார் தவிர்ந்த ஏனைய கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை வன்னி மாவட்டத்தில் இருந்து கல்வி வலயங்களினால் சேவை மூப்பின் அடிப்படையில் இடமாற்றம் வழங்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய இடமாற்றக் கடிதங்களை மாகாண கல்வி அமைச்சு வழங்காமையினால் இந்த ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன்தொடர்புகொண்டு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கேட்ட போது, பாதிக்கப்பட்டவர்களின் பெயர்கள் முதல் பட்டியலில் வரவில்லையெனவும், இரண்டாம் பட்டியலில் பெயர் வந்தவர்கள் மேன் முறையீட்டின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தற்போது முதலாவது பட்டியலில் பெயர்கள் வந்தவர்களுக்கு மட்டுமே இடமாற்றம் வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

முதலாவது பட்டியலில் உள்ளவர்கள் மேன்முறையீடு உட்பட ஏனைய காரணங்களுக்காக இடமாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் பட்டியல் எனவும், உண்மை யான சேவை மூப்பு என்பவற்றின் அடிப் படையிலான ஆசிரியர்களின்பெயர்ப்பட்டியல்இரண்டாம் பட்டியலிலேயே உண்டெனவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர் கள் கூறுகின்றார்கள்.

2002 ஆம் ஆண்டு வன்னி மாவட்டத்தில் நியமனம் பெற்றவர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்து வலயங்கள் விடுவித்துள்ள போதிலும், மாகாண கல்வித்திணைக்களம் விடவில்லையெனவும், 2005 ஆம் ஆண்டு வன்னியில் நியமனம் பெற்றவர்களை மாகாண கல்வித் திணைக்களம் இடமாற்றம் செய்துள்ளதாகவும், இது பாரபட்சமான செல்வாக்குடன் கூடிய இடமாற்றமாக அமைந்துள்ள தாகவும் பாதிக்கப்பட்ட ஆசி ரியர் கள் மனவேதனையுடன் தெரிவிக்கின்றார்கள். (க-86)

## காத்திருந்து... காத்திருந்து...




அக்கராயன், மார்ச் 12

கிளிநொச்சி பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடத்துக்கு வெளியே சிலர் அவஸ்தையுடன் காத்திருப்பதைத் தினமும் காண முடிகின்றது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள மலசலகூடம் ஒரே நேரத்தில் பலரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட வில்லை. இதனால் ஒரு சிலர் உள்ளேயிருக்கச் சிலர் அவஸ்தையுடன் வெளியே காத்திருப்பதை அவதானிக்க முடி கின்றது. மக்கள் பலர் ஒரே நேரத் தில் அதிகளவு கூடும் இந்த இடத்தில் பலரின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் மலசலகூடம் அமைந்திருப்பது அவசிய மானதாகும்.

உரிய அதிகாரிகள் இத னைக் கவனத்தில் கொண்டு தமது அவஸ்தையைப் போக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

## கைவிட்டவர்கள் கண் திறப்பார்களா?



வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழான கறுப்பிக்குளம் தாம் போதி வேலைகள் இடை நடுவில் கைவிடப்பட்ட தால் இதனூடாகப் பயணிப்போர் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். துணுக்காயில் இருந்து கறுப்பிக்குளம் ஊடாகப் பாலையடி, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் பகுதியை இணைக்கும் சுமார் 75 மீற்றர் நீளம் கொண்ட இந்தத் தாம்போதியின் வேலைகள் துரிதகதியில் இடம்பெற்றுவந்தன. ஆனால் தற்போது ஒப்பந்தகாரர்களால் இந்த வேலைகள் கைவிடப்பட்டுள்ளன. எப்போது மீண்டும் வேலைகள் தொடங்கும் என்பதை மக்களின் ஏக்கமாக உள்ளது. (ங-க-415)

## கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம்

அக்கராயன், மார்ச் 12

முல்லைத்தீவு மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் முல்லைத்தீவு அரச செயலகத்தில் வட மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு அரச அதிபர்; மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் முல்லைத்தீவு துணுக்காய் வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் நலன்புரி நிலையங்களில் இயங்கும் பாடசாலைகளின் நிலவரம், கல்வி அபிவிருத்தி அமைக்கப்பட்டு வரும் கட்டடங்களின் முன்னேற்றம், ஆசிரியர் பற்றாக்குறை, பிற மாவட்டங்களிலிருந்து பணிக்கு வரும் ஆசிரியர்களின் பிரச்சினைகள், பாடசாலைகளில் காணப்படும்ஆசியர் பற்றாக்குறை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. (ங-18)

## துணுக்காய் பிரதேசத்தில் அபிவிருத்திச் சங்கங்கள்



**பாண்டியன்குளம், துணுக்காய்ப் பிரதேசங்களிலுள்ள சிறு சேமிப்புக் குழுக்களை ஒன்றிணைத்து இந்த அபிவிருத் திச் சங்கங்கள் உருவாக்கப்பட் டுள்ளன.**

துணுக்காய், மார்ச் 12

மாங்குளம் இலங்கை வங்கிக் கிளையால் துணுக்காய்ப் பிரதேசத்தில் அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பாண்டியன்குளம், துணுக்காய்ப் பிரதேசங்களிலுள்ள சிறு சேமிப்புக்குழுக்களை ஒன்றிணைத்து இந்த அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் கடந்த 3ஆம் திகதி பிற்பகல் 3.45 மணியளவில் அனிஞ்சியன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் இலங்கை வங்கியின் மாங்குளம் கிளை முகாமையாளர் க.மனோகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் போது அனிஞ்சியன்குளம் அதிசய விநாயகர் அபிவிருத்திச் சங்கத்தின் ஒன்பது உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டனர்.

அனிஞ்சியன்குளம் மக்கள் சிறு குழுக்களாக இணைந்து தாம் சேமிக்கும் சிறு தொகையை இலங்கை வங்கிகளில் சேமித்து வருகின்றனர். இவர்கள் வங்கியில் கடன்களைப் பெற்று தமது வாழ்வாதாரத்தை உயர்த்தியும் வருகின்றனர். (க-415)

## வீதிகளுக்கு விமோசனம் எப்போது கிடைக்கும்?

### வவுனியா மக்கள் கேள்வி

வவுனியா,மார்ச்.12

வவுனியா நகரப்பகுதியிலுள்ள பல வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பொது மக்கள் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

வவுனியா சிதம்பரபுரம் வீதியில் பல இடங்கள்குன்றும்குழியுமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக உமா மகேஸ் வரன் சிலை, பூங்கா ஆகியவற் றுக்கு முன்பாகக் குழி ஒன்று நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதைப்போன்று வைரவப் புளியங்குளம் புகையிரத நிலைய வீதி, வைரவர் கோயில் - பண்டாரிக்குளம் வீதி என்பனவும் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இந்த பகுதியிலேயே பெருமளவில் தனியார் கல்வி நிலையங்கள் காணப்படுகின்றன. மேலும் இந்த வீதியினூடாக வவுனியா நகரப் பகுதியில் காணப்படும் பாடசாலைகளுக்கும் அரச அலுவலகங்களுக்கும் மக்கள் சென்று வருகின்றனர். குறிப்பாக இந்த வீதியினூடாகவே உக்குளாங்குளம், பண்டாரிக்குளம், கூமாங்குளம் போன்ற பகுதிகளுக்கான இ.போ.ச சேவைகளும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை வவுனியா நகர எல்லைக்குட்பட்ட மக்கள் நடமாற்றம் குறைந்த சில வீதிகள் உயரதிகாரிகள் சிலரின் பணிப்புரைக்கமைவாகச் செப்பனிடப்பட்டுக் காப்பெற் வீதிகளாக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## 114 பேர் நாய்களிடம் கடிவாங்கினர்

துணுக்காய்,மார்ச்12

கட்டாக்காலி நாய்களால் கடியுண்ட 114 பேர் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த மூன்று மாத காலப் பகுதியிலேயே இவர்கள் அனைவரும் சிகிச்சை பெற்றுள்ளனர். ஜனவரி மாதம் 50 பேரும், பெப்ரவரியில் 54 பேரும், இந்த மாதம் 7 ஆம் திகதிவரை பத்துப் பேரும் இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களுள் 80 வீதமானவர்கள் சிறுவர்கள்.

தற்போதைய கடும் வெப்ப நிலை காரணமாக நாய்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படக் கூடிய சாத்தியங்களும் உள்ளன.

இந்த நிலையில் இவற்றினால் கடியுண்டு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மக்களிடையே கவலையைத் தோற்றுவித்துள்ளது. (க-415)

## நூலக வளர்ச்சிக் கூட்டம்

மல்லாவிப் பொது நூலகத்தில் நூலகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று துணுக்காய்ப் பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் எதிர்வரும் 14ஆம் திகதி புதன் கிழமை இடம்பெறவுள்ளது. இதில் நூலகத்தின் வளர்ச்சி தொடர்பாக ஆராயப்படுவதுடன் வாசகர் வட்ட அங்கத்தவர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. வாசகர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு மல்லாவிப் பொது நூலகத்தின் பிரதான நூலகர் வே.லம்வேந்திரா கேட்டுக் கொண்டுள்ளார். (க-415)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பற்றியெரிந்தது வீடு; பணம், பொருள் நாசம்

துணுக்காய்,மார்ச்12

பாண்டியன் குளம் செல்வபுரம் கிராமத்தில் வீடு ஒன்று தீக்கிரையானது.

முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன் குளம் பிரதேசத்தில்செல்வபுரம் கிராமத்தைச் சேர்ந்த வைரமுத்து ஜெயரூபன் என்பவரின் வீடே இவ்வாறு எரிந்து நாசமாகியது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியவில் இந்த வீடு திடீரெனத் தீப்பற்றி எரிந்து ள்ளது அப்போது ஜெயரூபனும் அவரது மனைவியும் வீட்டில் இருக்கவில்லை இந்தத் தீ விபத்தினால் வீட்டிலிருந்த 99 ஆயிரம் ரூபா பணம், உடுபுடவைகள், வீட்டு உபகரணப் பொருள்கள், நெல், உழுந்து மூட்டைகள் என்பன எரிந்து சாம்பலாகியுள்ளன.

மின்சார ஒழுக்கு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாமெனப் பலரும் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

உலக தரிசனம் நிறுவனத்தினால் எரிந்த தற்காலிக வீடு அமைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.(க-415)

# வீட்டுக் குப்பைகளை அகற்ற புதிய நடைமுறை

## மீறுவோர் மீது நடவடிக்கை என்கிறது நல்லூர் பிரதேச சபை

யாழ்ப்பாணம், மார்ச் 12

வீட்டுக் குப்பைகள் மற்றும் கழிவுகள் அகற்றும் முறை தொடர்பாக ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கு அறிவுறுத்தவுள்ளோம்.

மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர்ப் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை பிரதேச சபையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபையின் தலைமையகத்தில் சுகாதாரம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

**குப்பைகளை சேகரிக்கும் பிரதேச சபையின் வாகனம் ஒலி எழுப்பியவாறு நேர அட்டவணையின் பிரகாரம் வீடுகளை நோக்கிவரும்.**

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சபை உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். அதன் போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நல்லூர்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் இணைந்து பொது அட்டவணை தயாரித்துக் குப்பைகளை அகற்றுவதுக்கு நடவடிக்கை எடுத்தல்.

வீடுகளில் சேரும் குப்பைகளை வீட்டு வளாகத்தினுள்ளேயே முகாமை செய்வது மற்றும் குப்பை சேகரிக்கப்படும் திகதிகளில் வீட்டுக்கு வெளியே குப்பைகளை வைத்தல் தொடர்பான விடயங்கள் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அறிவுறுத்தப்படும்.

சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

பிரதேச சபைக்குரிய கழிவு அகற்றும் ஆளணிப் பற்றாக் குறைக்கு தீர்வு காணுதல். தற்காலிக அடிப்படையில் ஊழியர்களை நியமித்தல்.

குப்பைகளை சேகரிக்கும் பிரதேச சபையின் வாகனம் ஒலி எழுப்பியவாறு நேர அட்டவணையின் பிரகாரம் வீடுகளை நோக்கி வரும். (ம-3)

# இரவல் நகையை அடகு வைத்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 12

இரவல் நகைகளை அதன் உரிமையாளருக்குத் தெரியாமல் வங்கியில் அடகு வைத்து விட்டு பின்னர் நகைகளை தான் வாங்கவில்லை என்று கூறிய அயல் வீட்டுப் பெண்ணிடமிருந்து நகைகளை மீட்டுத்தருமாறு கோரி நகை உரிமையாளரான பெண் ஒருவர் யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உரும்பிராயைச் சேர்ந்த பெண் ஒருவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

கொண்டாட்டம் ஒன்றுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் நகைகளைத் தரும்படி இரண்டு பவுண் நிறையுடைய ஒரு சோடி காப்புகளை பிரஸ்தாப பெண் இரவலாக வாங்கிச் சென்றுள்ளார்.

சில நாள்களாக நகைகளை உரியவரிடம் கொடுத்திருக்கவில்லை. அது பற்றி அதன் உரிமையாளர் கேட்ட போது வங்கியில் அடகு வைத்துவிட்டதாகப் பிராஸ்தாப பெண் கூறியுள்ளார்.

தனது அனுமதியின்றி எவ்வாறு அடகு வைக்க முடியும் என்று கேட்ட அவர் நகைகளை மீட்டுத்தருமாறு கூறிவிட்டுச் சென்று விட்டார்.

சில நாள் சென்ற பின்னர் மீண்டும் தனது நகை பற்றிக் கேட்டபோது, நான் நகை எதுவும் வாங்கவில்லையே என்று கூறி திருப்பி அனுப்பியுள்ளார் என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் முன்னிலையானார்.

வழக்கு விளக்கத்துக்காக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-4)

# கச்சதீவு வியாபாரத்தில் நெடுந்தீவுக்கு இலாபம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கச்சதீவு அந்தோனியார் கோயில் திருவிழாவின் போது வியாபாரத்தில் ஈடுபட்டதில் பெரியளவில் இலாபம் ஈட்டியுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கச்சதீவு திருவிழாவுக்கு தாமாக முன்வந்து வியாபாரத்தில் ஈடுபட்டது நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவு சங்கம். ஒருநாள் வியாபாரத்தில் ஈடுபட்ட சங்கம் சிறந்த முறையில் சேவை யாற்றியுள்ளது. இதன்போது பெரும் இலாபம் கிடைத்துள்ளது.

**ஒருநாள் வியாபாரத்தில் ஈடுபட்ட சங்கம் சிறந்த முறையில் சேவை யாற்றியுள்ளது. இதன்போது பெரும் இலாபம் கிடைத்துள்ளது.**

வியாபாரத்தில் இலாபமடைந்த தொகையில் 11 வீதத்தை அங்கு பணியாற்றிய உத்தியோகஸ்தர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-13)

## கண்ணழுத்த வாரத்தில் நாளை 2 ஆயிரம் பேருக்கு பரிசோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 12

சர்வதேச கண்ணழுத்த வாரத்தை முன்னுட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நாளை செவ்வாய்க்கிழமை இரண்டாயிரம் பேருக்கு கண்ணழுத்த நோயைக் கண்டறிவதற்கான பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

நீரிழிவு நோயாளர்களும், கண்ணழுத்த நோய்ப் பிரச்சினை உள்ளவர்களும் மற்றும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களும் இதில் கலந்து கொண்டு தமது கண்களைப் பரிசோதிக்க முடியும் என சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கண் வைத்திய நிபுணர்கள் பலர் கலந்து கொண்டு பரிசோதனை மேற்கொள்ளவுள்ளனர்.

பார்வை 2020 திட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரையான வாரம் சர்வதேச கண்ணழுத்த வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனையொட்டியே இந்தத் தேசிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4-9)

## தபாலகம் இடம் மாறியது

நவாலி, மார்ச் 12

மானிப்பாய் தபாலகம் இந்த மாதம் முதலாம் திகதி முதல் மானிப்பாய் செலான் வங்கிக்கு முன்பாகவுள்ள தனியார் கட்டடமொன்றுக்கு இடம் மாறியுள்ளது.

இந்தத் தபாலகம் கடந்த 81 வருடங்களாகக் கட்டுடை முதல் மானிப்பாய் வரையுள்ள தனியார் கட்டடங்களில் இயங்கி வந்துள்ளது.

இறுதியாக இயங்கி வந்த கட்டடத்தை திருப்பித் தருமாறு கட்டடச் சொந்தக்காரர் கோரியதை அடுத்து நிரந்தரக் கட்டடம் அமைக்க இடம் கிடைக்காத நிலையில் மீண்டும் ஒரு தற்காலிக இடத்துக்கு மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-100)


# இராமகிருஷ்ண மிசனின் முக்கிய அறிவித்தல்

கொழும்பு, இராமகிருஷ்ண மிசன் (இலங்கைக் கிளை) ஆல் நடத்தப்படும் இராமகிருஷ்ண மிசன் நலன்புரி நிலையம், 17, மருதனார்மடம் வீதி, உரும்பிராய்ச் சந்தி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகிறது.

இராமகிருஷ்ண மிசனின் அனுசரணையுடன் ஸ்ரீ ராமகிருஷ்ண சமிதி, மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில் என்ற முகவரியில் இயங்கி வருகிறது. இதற்குச் செயலாளராக சி. சிவமோகன் பணியாற்றுகிறார்.

இந்த இரண்டு நிலையங்களுக்கும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக சி. சிவமோகன் நியமிக்கப்பட்டுளார் .

தொ. பே: 077 2397056.

இராமகிருஷ்ண மிசனால் பிரசுரிக்கப்படும் சமயப் புத்தகங்களையும், 'இராமகிருஷ்ண விஜயம்' ஆன்மிக மாத இதழ்களையும், இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் எங்களுடன் தொடர்புகொள்ள மேலே குறிப்பிட்ட நிலையங்களை அணுகலாம் அல்லது கொழும்பில் உள்ள எமது தலைமையகத்தை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

சமய மற்றும் நலன்புரி செயல்பாடுகளுக்கு உதவிபுரிய விரும்புபவர்கள் ஹற்றன் நஷனல் வங்கியில் உள்ள நடப்புக் கணக்கு இலக்கம் 009010001222 இற்கு பணத்தைச் செலுத்தியபின் எமக்கு அறிவித்துப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

(Ramakrishna Mission, Colombo, Current A/c No. 009010001222, Hatton National Bank, Wellawatta Branch, SWIFT CODE: HBLILKLX, 100, 102, Galle Road, Colombo 6. Sri Lanka).

"ஸ்ரீ ராமகிருஷ்ண, சாரதா, விவேகானந்தா" என பெயர்களைத் தாங்கி யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வேறு பல ஸ்தாபனங்கள் எங்களால் அமர்த்தப்பட்ட இராமகிருஷ்ண மிசனின் பிரதிநிதிகள் அல்லர் என்பதை அறியத்தருகிறோம்.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இறைபணியில்
சுவாமி சர்வரூபானந்த
தலைவர்
இராமகிருஷ்ண மிசன் ( இலங்கைக் கிளை )
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 6.
தொ. பே. 011-2588253, 011-5013805
மின் அஞ்சல்:- rkmcey@gmail.com (15494) (2-6-9)


# விலங்குக் கழிவுகள் எரியூட்டும் இடம் விரைவில் மாற்றியமைப்பு

## மக்களுக்கு தீமை ஏற்படாத வகையில் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

அயல் பகுதி மக்களுக்கு எந்த விதமான பாதிப்புகளும் ஏற்படாத வகையில் காரைக்கால் இந்து மயானத்திலுள்ள விலங்குக் கழிவுகள் எரியூட்டும் இடம் மாற்றியமைக்கப்படும்.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

காரைக்கால் இந்து மயானத்திலுள்ள விலங்குக் கழிவுகள் எரியூட்டப்படும் இடத்தில் சுமார் நான்கு அடி உயரமான அமைப்பே உள்ளது. அதனை 20 அடி உயரத்துக்கு உயர்த்தி நிர்மாணிக்கவுள்ளோம்.

எரியூட்டப்படும் போது புகை 20 அடி உயரத்துக்கு அப்பால் அனுப்பப்படும் போது அது மனித சுவாசத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வழங்கிய ஆலோசனைக்கமைவாகவே எரியூட்டப்படும் பகுதியை உயர்த்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபையின் உழவு இயந்திரத்தில் விலங்குக் கழிவுகளை ஏற்றிச் சென்றபோது அதனைக் கொட்ட விடாது காரைக்கால் பகுதி மக்கள் சுமார் ஐம்பது பேர் தடுத்துத் திருப்பி அனுப்பினர்.

இந்தச் சம்பவத்தை அடுத்தே குறித்த நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விலங்குக் கழிவுகள் எரியூட்டப்படுவதால் அயலில் உள்ள மக்கள் சுகாதாரச் சீர்கேட்டால் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையிலேயே குறித்த வாகனத்தை திருப்பி அனுப்பி வந்தனர். (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கெடுப்பு முடிவுற்றதும் நாகர்கோயிலில் குடியமர்வு

## நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக உதவி அரச அதிபர் தகவல்

வடமராட்சி, மார்ச் 12

குடிசனக் கணக்கெடுப்பு முடிவுற்றதும் நாகர்கோயில் கிழக்குப் பகுதியில் மீளக்குடியமர்வு நடைபெறவுள்ளது.

இந்த மீளக்குடியமர்த்தலுக்கான நடவடிக்கைகளை மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

நாகர் கோயில் கிழக்குப் பகுதியில் மீள் குடியமரவுள்ள மக்களுக்கான உதவிகளையும், வசதிககளையும் எந்தெந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கத் தயாராக இருக்கின்றன என்ற விபரத்தை அறியும் கூட்டம் ஒன்று உதவி அரச அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

**நாகர் கோயில் கிழக்கில் வசித்தவர்களை மீளக்குடியமர்த்துவதற்காக கிராம சேவையாளர்களால் ஏற்கனவே விவரங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.**

இதன் போதே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது குடிசன மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வருவதால் மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்பதால் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் பூர்த்தியடைந்ததும் மீளக்குடியமர்வு நடைபெறும்.

கடந்தகாலப் போரின்போது நாகர் கோயில் பகுதியிலிருந்து மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்தனர். அத்துடன் அந்தப் பிரதேசம் முழுவதும் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் முதலில் நாகர்கோயில் மேற்குப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன. இதனையடுத்து அந்தக் கிராமத்தில் கடந்த வருடம் மக்கள் மீளக்குடியமர்ந்து தமது அன்றாட வாழ்க்கையான மீன் பிடித் தொழிலைச் செய்து வருகின்றனர்.

தொடர்ந்து நாகர் கோயில் கிழக்கில் குடிமனை இருந்த பகுதிகளில் பல மாதங்களாக கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு குறித்த பிரதேசம் உதவி அரச அதிபரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

நாகர் கோயில் கிழக்கில் வசித்தவர்களை மீளக்குடியமர்த்துவதற்காக கிராம சேவையாளர்களால் ஏற்கனவே விவரங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

இதுவரை விவரங்களைத் தெரிவிக்காத இந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பங்கள் கிராமசேவையாளர் விவரங்களைத் தெரிவித்து தமது மீள்குடியமர்வை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது. (ம-8)

# அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் ஜூலைக்குள் முடிவுற வேண்டும்

## திட்டங்களை முன்னெடுப்போருக்கு அறிவுறுத்து

வடமராட்சி, மார்ச் 12

வடக்கு மாகாண துரித மீள் எழுச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் 12 அபிவிருத்தித் திட்டங்களையும் எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுவரும் அனைத்துத் தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

துரித மீள்எழுச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மீள் மதிப்பீட்டுக் கூட்டம் பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண துரித மீள் எழுச்சி அபிவிருத்தித் திட்டத்தின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுதர்சன், பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா ரவீந்திரன், திட்டத்தின் உதவிப் பொறியியலாளர், யாழ். மாவட்ட கட்டடத் திணைக்களப் பொறியியலாளர், உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் பருத்தித்துறை நகரசபைக்கு புதிய அலுவலகக் கட்டடம், பருத்தித்துறை நவீன சந்தை மேல்மாடிக் கட்டடம், பருத்தித்துறை பொது நூல் நிலையக் கட்டடம், வடமராட்சி கல்வி வலய அலுவலகக் கட்டடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, ஹட்லிக் கல்லூரி ஆகியவற்றுக்கு பிரார்த்தனை மண்டபங்களும் சித்திவிநாயகர் வித்தியாலயத்துக்கு நூலகக் கட்டடம், வல்வெட்டித்துறை நகரசபைக்கு அலுவலகக் கட்டடம், தொண்டைமானாறு தொடக்கம் பொலிகண்டி வரை வல்வெட்டித்துறையிலிருந்து பன்னிச்சி அம்மன் கோயில் வரையான குழாய் நீர் விநியோகத் திட்டம், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் குழாய் நீர் விநியோகத் திட்டம் ஆகிய பத்து அபிவிருத்தித் திட்டங்களும் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. இரண்டு அபிவிருத்தித் திட்டங்கள் மட்டுமே பூர்த்தியடைந்துள்ளன.

**இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களில் இரண்டு திட்டங்கள் மட்டுமே பூர்த்தி**

இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான 432 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் இந்த நிதியில் இதுவரை 133 மில்லியன் ரூபாவே செலவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் பூர்த்தியடையாத திட்டங்கள் தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுத்து ஜூலை மாதத்துக்குள் திட்டங்களை நிறைவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# இடம்பெயர்ந்து நவாலியிலிருந்த குடும்பங்கள் மீளக்குடியமர்வு

நவாலி, மார்ச் 12

தெல்லிப்பழையிலிருந்து கடந்த 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து நவாலி புலவன் முகாம், அட்டகிரி முகாம் ஆகியவற்றில் குடியமர்ந்திருந்தவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 22 ஆண்டுகளாக தங்கியிருந்த இவர்கள் தற்போதைய சாதாரணசூழ்நிலையைத்தொடர்ந்து தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள அவர்களது சொந்தக் காணிகளில் குடியமரத் தொடங்கியுள்ளனர். இவர்களுக்கென பிரதேச செயலகத்தால் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இத்துடன் பாடசாலை மாணவர்களின் கல்வி உதவிப் பணமாக 12 ஆயிரம் ரூபாவும் வாழ்வாதார உதவிப் பணமாக 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை தற்காலிக வீடுகளுக்கு தூண்களும், தகரங்களும் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-100)

# எரிபொருள் வாங்குவதில் நெருக்கடியாம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

நெடுந்தீவில் உள்ள பஸ்கள் சேவையில் ஈடுபடத் தேவையான எரிபொருளை அங்கு பயணச்சீட்டு மூலம் கிடைக்கும் பணத்திலேயே வாங்கிக் கொள்ள வேண்டும் என்று யாழ். போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனால் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் நெடுந்தீவு பஸ்சேவை சீர் குலைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள், படகுப் பயணிகள், மாணவர்கள் என மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வருமானத்தில் இருந்து எரிபொருளை வாங்கிச் சேவையைத் தொடருங்கள் என்ற மேலிடத்து அறிவிப்பால் பஸ் சேவைகளில் தளம்பல் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். (ம-7)

# வடக்கின் வசந்தம் திட்டத்தில் 20 வீடுகளுக்கு மின் இணைப்பு

வடமராட்சி, மார்ச் 12

வடமராட்சி கற்கோவளம், புனிதநகரில் சுனாமி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 20 வீடுகளுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க வடபிரதேச மின்சாரசபை அலுவலகம் முன் வந்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம் பெற்ற சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் வீடுகளை இழந்த கரையோர மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருந்தன.

சுனாமி வீட்டுத் திட்டங்கள் அனைத்துக்கும் இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என இலங்கை மின்சார சபை வடபிரதேச அலுவலகம் அறிவித்து அதற்கென உதவு தொகையையும் வீட்டுத் திட்டப் பயனாளிகளிடம் பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட ஒரு சில வீடுகளுக்கே மின்சாரம் வழங்கப்பட்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. ஏனைய வீட்டுத் திட்டங்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

இலவச மின் இணைப்புக் கிடைக்காத வீட்டுத் திட்டப் பயனாளிகள் இது தொடர்பாக தமது ஆட்சேபனையை வடபிரதேச இலங்கை மின்சார சபையிடம் தெரிவித்த போது இந்த திட்டத்துக்குரிய நிதி முடிவடைந்துள்ளதால் தம்மால் எதுவும் செய்ய முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் சிலரின் கடுமையான முயற்சியால் கற்கோவளம் புனிதநகர்ப் பகுதியில் வீட்டுத் திட்டம் பெற்ற 20 பேருக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு வழங்க உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இலவச மின் இணைப்புப் பெறவுள்ள பயனாளிகள் 20 பேரின் விவரம் கிராம சேவையாளர் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளாலும் தெரிவு செய்யப்பட்டு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனின் சிபார்சுடன் வட பிரதேச இலங்கை மின்சார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-8)

# நெடுந்தீவுப் படகுகளுக்கு இனித் தாமதம் இல்லை

## பொலிஸ், படைப் பொறுப்பதிகாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு வரும் படகுகளுக்கு ஏற்படக் கூடிய தாமதங்கள் இனி இடம் பெற மாட்டாது.

சனிக்கிழமை முதல் இது நடைமுறைக்கு வரும் என ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஹேரத், புங்குடுதீவு கடற்படைப் பொறுப்பதிகாரி லெப்டினன் குமார் ஆகியோர் உறுதியளித்தனர்.

நெடுந்தீவுப் படகுப் பயணிகளும் குறிகாட்டுவான் துறை முகத்தில் படும் இன்னல்கள் குறித்தும் பொருள்களை எடுத்துச்செல்வதில் ஏற்படும் தடங்கல்கள் தாமதங்கள் குறித்தும் நேற்று முன்தினம் குறிகாட்டுவான் துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதன்போது மேற்கண்டவாறு உறுதி வழங்கப்பட்டுள்ளது.

குறிகாட்டு வானில் நெடுந்தீவுப் பயணிகள் எதிர் கொள்ளும் அவலம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டதாவது:

நாங்கள் நயினாதீவுக்கான போக்குவரத்துச் சேவைகளைக் குறை கூறும் நோக்கமாகவோ, அந்த மக்களின் போக்குவரத்துக்கு எதிராகவோ இங்கு வரவில்லை.



குறிகாட்டுவான் துறைமுகம் நெடுந்தீவு மக்களின் கோரிக்கையின் பேரில் கட்டப்பட்டது. கடந்த காலங்களில் பிரச்சினைகள் எதுவும் இருக்கவில்லை. இப்போது படையினர் துறைமுகத்துக்கு வந்த பின்னர் நெடுந்தீவுப் போக்குவரத்தில் சிக்கல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

நீண்ட தூரப் பயணத்தில் வரும் எமது மக்கள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் படகில் இருந்து இறங்குவதற்குத் தாமதப்படுத்தப்படுகின்றனர்.

சில சமயங்களில் நயினாதீவுக்கான படகுகளில் ஏறி அதன் வழியாகவே துறைமுகத்தில் இறங்க வேண்டியுள்ளது. துறைமுகத்தில் பெரிய மிதவையை அணைத்து வைத்துள்ளதால் பயணிகள் குறிப்பாக வயோதிபர்கள், நோயாளர்கள் இறங்க முடியாது அவதிப்படுகின்றனர்.

துறைமுக பாலத்துள் சில சமயங்களில் பஸ் உட்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அந்த வேளையில் தமது வீட்டுப் பாவனைக்காகக் கொண்டுவரும் சிறிய முடிச்சுக்களைச் சுமந்துவரும் முதியவர்கள் மற்றும் நோயாளர்கள் நடந்து செல்ல வேண்டியுள்ளது. துறைமுகத்தில் போடப்பட்டுள்ள கற்கள் இதுவரை அகற்றப்படாதிருப்பதால் பயணிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.- என்று கூறப்பட்டது.

இதன் போது குறிகாட்டுவான் துறைமுகப் பாலத்தின் மேற்குப் பகுதியில் நெடுந்தீவுப் படகுகளும், தெற்குப் பகுதியில் நயினாதீவுக்கான படகுகளும், வடக்குப் பகுதியில் கடற்படைப் படகுகளும் நிறுத்தப்படும்.

நெடுந்தீவு படகுகள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு படகு உரிமையாளர்களும் நயினாதீவு படகு உரிமையாளர்களும் இந்த முடிவை ஏக மனதாக ஏற்றுக் கொண்டனர்

இதேவேளை படகுகளைத் தாமதப்படுத்துவதில்லை எனவும் பயணிகள் உடன் இறங்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொருள்களை எடுத்துச் செல்லக்கூடியதாக பஸ்கள் துறைமுகத்துள் செல்ல அனுமதிப்பதாகவும் கூறப்பட்டது.

இந்தக்கூட்டத்தில் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தா.றெக்ஸியன், வேலணைப் பிரதேச செயலர் கே.பிரகாரமூர்த்தி, வேலணை பிரதேச சபைத்தலைவர் சி.சிவராசா, நெடுந்தீவு பிரதேச சபை உபதலைவர் கே.கோபாலசிங்கம், பல நோ.கூ.சங்கத் தலைவர் அ.வெ. அரியநாயகம், நெடுந்தீவு மீன்பிடி கூ.ச. சமாசத் தலைவர் ப.அமிர்தநாதன், நயினாதீவு படகு உரிமையாளர் சங்கத் தலைவர் ப.தனபால்சிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் லொறி மோதி ஒருவர் சாவு

**பொலிஸார் லொறியின் சாரதியைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.**

மட்டக்களப்பு,மார்ச் 12

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்திலிருந்து புணானைக்கு வயல் அறுவடைக்காக சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது எதிரே வந்த லொறியொன்று மோதியதில், ஒருவர் இறந்ததுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, வாகனேரியில் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த வாகன விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவைச் சேர்ந்த நிசாந்தன் (வயது 30) என்பவரே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த முனைக்காட்டைச் சேர்ந்த கிருபாகரன் (வயது 32) என்பவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு காரணமான லொறியின் சாரதியை கைதுசெய்து விசாரணை மேற்கொண்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## காத்தான்குடியில் ஒருவர் கொலை

மட்டக்களப்பு,மார்ச் 12

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் குறித்த பகுதியைச் சேர்ந்த மகேந்திரன் (44வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய மாவட்டக் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரி எம்.பி.எம்.தாகா தெரிவித்தார்.

புளியடி வீதியில் உள்ள விநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் ஒரு குழுவினர் சேட்டைகளில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட முறுகலையடுத்தே குறித்த நபர் தாக்கப்பட்டதாகவும், படுகாயம் ஏற்பட்ட நிலையில் ஆரையம்பதி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கையில் அவர் உயிரிழந்ததாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் மூவர் தொடர்புபட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த அவர், இது தொடர்பில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# ஓய்வுபெற்ற தாதியர் மீண்டும் சேவையில்

அம்பாறை, மார்ச் 12

கிழக்கு மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் நிலவும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையை நீக்குவதற்குச் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற தாதியர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் சுகாதார சேவையை மேம்படுத்தி மக்களுக்குச் சிறந்த சுகாதார வைத்திய சேவைகள் கிடைக்க முயற்சிகளை மேற்கொண்டு வரும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாகவே ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாகாண அமைச்சர் சுபைர் கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் நிலவும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை தொடர்பில் மத்திய அரசின் சுகாதார அமைச்சர் மைத்திரிபாலசிரிசேன மற்றும் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அஜித் மெண்டிஸ் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

அண்மையில் கிழக்கு மாகாணத்துக்கென நியமிக்கப்பட்ட 40 தாதிய உத்தியோகத்தர்களில் 23 பேர் மட்டுமே கிழக்கில் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டதையும் அமைச்சர் சுட்டிக் காட்டியிருந்தார்.

எனவே கிழக்கில் நிலவும் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய காத்திரமான நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்த மாகாண அமைச்சர் சுபைர் கிழக்கில் ஓய்வு பெற்ற தாதிய உத்தி யோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வ தற்கான ஆலோசனையையும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்குச் சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அனுமதியின் பிரகாரம் மூன்று வருட ஒப்பந்த அடிப்படையில் இந்த ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று மாகாண அமைச்சர் சுபைர் தெரிவித்தார்.

இவ்வாறு சேவையில் மீண்டும் மூன்று வருடகாலம் ஒப்பந்த அடிப்படையில் இணைந்து கொள்ள விரும்பும் தாதிய உத்தியோகத்தர்கள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் பதிவு செய்து கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## கொலைச் சந்தேக நபருக்கு அரசியல்வாதி அடைக்கலம்

இரத்தினபுரி,மார்ச் 12

இரத்தினபுரி, கஹாவத்தையில் சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு அரசியல்வாதி ஒருவர் அடைக்கலம் வழங்கியுள்ளார்.

தாய் மற்றும் மகளை மிகவும் கொடூரமான முறையில் படுகொலை செய்த நபர்களுக்கு குறித்த அரசியல்வாதி பாதுகாப்பு வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரசியல்வாதியின் தலையீடு காரணமாக சந்தேகநபர்களைக் கைது செய்வதில் பொலிஸார் நெருக்கடிகளை எதிர்நோக்கியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த இரட்டைக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நீண்டகாலமாக போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்ததாகவும், இதற்கு அரசியல்வாதி ஆதரவளித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும்கட்சி பிரதேச சபை உறுப்பினர் தர்மசிறி என்பவரின் சகோதரரான ராஜூ என்பவரைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தர்மசிறி என்ற பிரதேச சபை உறுப்பினர் பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் ஜோன் செனவிரட்னவின் இணைப்பதிகாரியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து தர்மசிறி இணைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்படுவதாக அமைச்சர் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

பல குற்றவாளிகள் பிரதேச ரீதியான தேர்தல்களில் போட்டியிட்டு அதன் மூலம் பாதுகாப்பைத் தேடிக் கொள்ள முயற்சிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

அம்பாறை, மார்ச் 12

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்கு 94.09 மில்லியன் ரூபா பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். இந்த ஒதுக்கீட்டின் மூலம் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளும், 503 கிராம அலுவலகர் பிரிவுகளும் அபிவிருத்தி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அம்பாறை தேர்தல் தொகுதிக்கு 75 மில்லியன், கல்முனை தேர்தல் தொகுதிக்கு 75.7 மில்லியன், பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கு 151.7 மில்லியன், சம்மாந்துறை தேர்தல் தொகுதிக்கு 35.5 மில்லியன் தொகுதி அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)



*களுவாஞ்சிக்குடி சைவமகா சபையின் 59ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகின்றார். (31)*

## கிழக்குப் பாடசாலைகளில் இரு மொழிக் கற்கைகள்

மட்டக்களப்பு,மார்ச் 12

கிழக்கு மாகாணத்தில் விசேட திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்துத் தேசிய பாடசாலைகளிலும் இரு மொழிக் கற்கைகள் இந்த ஆண்டு முதல் நடத்தப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.ரி. போல் தெரிவித்தார்.

இந்த இரண்டு மொழிக் கற்கைகள் தரம் ஆறு முதல் நடத்தப்பட வேண்டும் என்றும் எந்தக் காரணம் கொண்டும் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான ஆரம்பப் பாடசாலைகளில் நடத்தப்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் தரம் ஆறு முதல் தரம் பதினொன்று வரை குறிப்பிட்ட சில பாடங்கள் கற்பிக்கப்படுவதே இருமொழிக் கற்கைகள் என்றும் அவர் தெரிவித்தார்.(ச)

## பெண் தலைமைத்துவத்துக்கு உத்வேகம் வழங்கத் திட்டம்

மட்டக்களப்பு, மார்ச் 12

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'முயற்சியாண்மை மூலம் பெண்கள் தலைமைத்துவத்துக்கு உத்வேகமூட்டல்' எனும் தொனிபொருளில் கலந்துரையாடல் நடைபெற்றது. சர்வதேச தொழில் நிறுவனம், மட்டக் களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம், காவியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் ஆகியன இணைந்து நடத்திய பெண் முயற்சியாண்மையாளர்களுக்குப் பொருளாதார வளங்களைப் பெற வழி முறைகளை ஏற்படுத்தல் தொடர்பான இந்தக் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகப் பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் திருமதி கேசலா ஜயவர்த்தன கலந்துகொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பெண்களுக்கான சுயதொழில் முயற்சிக்கான வழிகாட்டுதல்களை மேற்கொள்ள நிதி நிறுவனங்களுக்கும் இவர்களுக்கு இடையில் தொடர்பை ஏற்படுத்தி ஒரு இணைப்பையும் ஏற்படுத்தல் தொடர்பிலான கருத்துகள் பகிரப்பட்டன.

அத்துடன், பெண் முயற்சியாண்மையாளர்களின் முயற்சிகள், தீர்மானம் எடுத்தல் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் குறித்து விளக்கங்களும் வழங்கப்பட்டன.

## தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவு கிழக்கு மாகாண சபையே பொறுப்பு

### அங்கீகாரம் கிடைத்தது என்கிறார் சுபைர்

அம்பாறை, மார்ச் 12

கிழக்கு மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கென இந்த வருடம் புதிய தாதிய உத்தியோகத்தர்களை கிழக்கு மாகாண சபை பொறுப்பேற்று நியமனம் செய்யவுள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு 2012 ஆம் ஆண்டுக்கான புதிய தாதிய உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சை நடத்தி நியமனம் வழங்குவதற்கான அங்கீகாரம் மத்திய சுகாதார அமைச்சிடமிருந்து கிடைத்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் நிலவும் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை தொடர்பாகவும், இதனால் ஏற்படும் சேவைப் பாதிப்புக்கள் தொடர்பாகவும் மாகாண அமைச்சர் சுபைர் மத்திய சுகாதார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சு மூலம் கிழக்குக்கு நியமிக்கப்படும் தாதிய உத்தியோகத்தர்கள் பலர் இங்கு வந்து கடமையைப் பொறுப் பேற்பதில்லை என்பதையும் அமைச்சர் சுபைர் தெரிவித்தார்.

இதனால் கிழக்கிலுள்ளவர்களைக் கொண்டே தாதிய உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவது பொருத்தமானதெனவும் ஆலோசனை தெரிவித்திருந்தார்.

இதனை ஏற்றுக் கொண்டே மத்திய சுகாதார அமைச்சு இந்த வருடம் கிழக்கிலேயே நேர்முகப் பரீட்சையை மாகாண சுகாதார அமைச்சு நடத்தி தாதிய உத்தியோகத்தர் நியமனங்களை வழங்க அங்கீகாரம் அளித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு இந்த நடவடிக்கை மூலம் ஏற்ற தீர்வு கிடைக்குமென நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜபக்ஷ மைத்துனர் மீது தாக்குதல்:

# சி.ஐ.டி பொலிஸார் மூவருக்கு இடமாற்றம்

இராமேஸ்வரத்தில், ராஜபக்ஷவின் மைத்துனர் தாக்கப்பட்டது தொடர்பாக, தமிழக புலனாய்வுத்துறை பொலிஸார் மூவர், பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரத்துக்கு, பல ஆண்டுகளாக, குறிப்பிட்ட நாளில் வந்து செல்லும் இலங்கை அதிபர் ராஜபக்ஷவின் சகோதரியின் கணவர் திருக்குமரன் நடேசன், எவ் வித முன்னறிவிப்பும் இல்லாமல், கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி சென்றிருந்தார்.

அக்னி தீர்த்தக் கடற்கரையில் குளித்துவிட்டு தனுஷ்கோடி செல்வதாகக் கூறிவிட்டு, பொலிஸாருக்குத் தெரியாமல், புரோகிதர் வீட்டுக்குச் சென்றார். அப்போது, நாம் தமிழர் மற்றும் ம.தி.மு.க. கட்சியினர், அவரை செருப்பால் அடித்துத் தாக்கினர். இதையொட்டி, அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

**அக்னி தீர்த்தக் கடற்கரையில் குளித்துவிட்டு தனுஷ்கோடி செல்வதாகக் கூறிவிட்டு, பொலிஸாருக்குத் தெரியாமல், புரோகிதர் வீட்டுக்குச் சென்றார்.**

இந்தநிலையில், அண்மையில் முதல்வர் ஜெயலலிதா இலங்கை முக்கிய பிரமுகர்கள் தமிழகத்துக்கு வருவது குறித்து, முன்கூட்டியே மாநில அரசுக்கு, மத்திய மற்றும் இலங்கை அரசுகள் தகவல் தெரிவித்தால்தான், பாதுகாப்பு வழங்க முடியும் என்று வலியுறுத்தி இருந்தார்.

இந்தச்சம்பவத்தைத் தொடர்ந்து, ராமேஸ்வரத்தில் பணியாற்றி வந்த காவல்துறையைச் சேர்ந்த நாராயணன்(கியூபிரிவு),செல்வகுமார்(எஸ்.பி., தனிப்பிரிவு), உக்கிரபாண்டி (எஸ். பி - சி.ஐ.டி ) ஆகியோர், வேறு இடங்களுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (வ)

## தமிழக அகதி முகாமில் உண்ணாவிரதம் இருந்த இலங்கையர் வைத்தியசாலையில்

தமிழ்நாடு பூந்தமல்லி சிறப்பு முகாமில் 10 நாள்களாக உண்ணாவிரதம் இருந்த இலங்கை அகதி ஒருவர் நேற்றுமுன்தினம் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

29 வயதுடைய ஜெயமோகன் என்பவரே கடந்த 10 நாள்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வர்த்தகர் இவர் 2007 ஆம் ஆண்டு முதல் செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் இருந்து வருகிறார்.

அகதியாக தமிழ்நாட்டில் தங்கியிருந்த ஜெயமோகன் உட்பட 14 பேரை கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருந்துகளை இந்தியாவிலிருந்து அனுப்ப முயன்றதான குற்றச்சாட்டின்பேரில் திடீரென கைது செய்து செங்கல்பட்டு முகாமுக்குக் கொண்டு சென்றிருந்தனர்.

ஆனால் ஒரே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 14 பேரில் 12 பேரை விடுதலை செய்துள்ள போதும் ஜெயமோகன், கெங்காதரன் ஆகிய இருவரை மட்டும் இன்னும் விடுதலை செய்யாது நீதிக்குப் புறம்பாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனாலேயே இதற்கு முன்னரும் 3 தடவைகள் ஜெயமோகன் தம்மை விடுவிக்கக்கோரி உண்ணா நிலைப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

இருப்பினும் பல வாக்குறுதிகளை வழங்கி அவரது உண்ணா நிலைப் போராட்டத்தை நிறுத்திய முகாம் அதிகாரிகள் இதுவரை அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால் தான் இந்த முடிவை எடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். (வ)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11.05.1925 இறப்பு 22.02.2011



அமரர் திருமதி கற்பகம் வைத்தியலிங்கம்

(பிள்ளையார் அக்கா)

தேடிவந்தோர்க்கெல்லாம் கற்பக தருவாய
அள்ளிக் கொடுத்த பிள்ளையார் அக்காவே!
வல்லமையோடு எமை ஆளாக்கி சோறூட்டி
எல்லாமாகி நின்ற தெய்வமே! நானிலம் உள்ளவரை
உனை மறவோம் நாம்.

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் குடும்பத்தினர்


## செயலமர்வு

சாவகச்சேரி, மார்ச் 12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 வகுப்புகளில் சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயன்முறைக் கற்பித்தலும் பயிற்சியும் மதிப்பீட்டுச் செயலமர்வும் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடை பெறும்.

இந்தச் செயலமர்வுக்கு பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்டு பெயர் குறிப்பிட்ட ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (வ-9)

## நயினை நாகபூஷணி அம்மன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 12

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் அன்றைய தினம் 1008 கலச அபிஷேகம், விசேட சண்டிகா ஹோமம் என்பன இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பூசைகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தொடக்கம் இடம்பெற்று வருவதாகவும் இன்று திங்கள் கிழமை நாகேஸ்வரி அருளமுதம் மலர் வெளியீட்டு விழா முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்றும் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் ஆ. தியாகராசா தெரிவித்தார்.

மண்டலாபிஷேக பூர்த்தி விழாவையொட்டி அமுதசுரபி அன்னதான சபை யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. மாற்று வலுவுடையோர் வசதியாக அமர்ந்து உண வருந்தக்கூடியதாக புதிய மண்டபம் ஒன்று அமைக்கப்பட் டுள்ளது. அம்பாள் ஆலய மண்டலா பிஷேக விழாவின்போது இந்த மண்டபம் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை போக்குவரத்து வசதிகளை நயினை படகு உரிமையாளர் சங்கம் செய்துள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் எஸ். தனபாலசிங்கம் தெரிவித்தார். விசேட நிகழ்வுகளாக நாதஸ்வர மேதை சி.சிவகுமார் குழுவின், நாதஸ்வர கான கலாநிதி பி.நாகேந்திரம் குழுவினர் ஈழ நல்லூர் புகழ் வி.பாலமுருகன் ஆகியோரின் மங்கல வாத்தியமும், பேராசிரியர் முனைவர் விஜயலெட்சுமி இராமசாமியின் விசேட சொற்பொழிவும் இடம்பெறும்.

மண்டலாபிஷேகப் பூர்த்தி இன்று திங்கட்கிழமை நடைபெறும் என்று நேற்றைய உதயனில் வெளியான தகவல், பிரசுரம் ஒன்றின் தவறான வெளியீடாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ-7)


ஓராண்டு நினைவினிலே



மண் மகிழ 17 - 07 - 1951

கண் நெகிழ 22 - 02 - 2011

அமரர் இராசதுரை ஜெயராசா

விழி மூடி ஓராண்டு விரைந்தோடிச் சென்றதுவோ
அழுகின்ற விழியோடு அவனியிலே தேடுகின்றோம்
அழியாது உம் நினைவு ஆண்டு பல சென்றாலும்
ஒளியேற்றும் தீபமே உமையென்று காண்போம்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. குடும்பத்தினர்.

(C/9108) (6,10)



இவ் வார புலமைச் சுடர்

வழமையாக திங்கட்கிழமைகளில் வெளிவரும் தரம் 05 புலமைச்சுடர் கையேடு தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை செவ்வாய்க் கிழமை வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வெளியீட்டாளர்


## தமிழ்த்தினப் போட்டி

பருத்தித்துறை, மார்ச் 12

மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட தமிழ்த் தினப்போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா தலை மையில், தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இந்தப்போட்டி நடைபெறவுள்ளது.

(வ-190)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

ஐயாக்குட்டி கனகரட்னம்

13.02.2012 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (12.03.2012) திங்கட் கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் எதிர்வரும் 14.03.2012 புதன் கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் தங்களை அழைக்கின்றோம்.

காந்திஜி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். குடும்பத்தினர்.

(6-12-14)


## இயக்கச்சி அறிவொளி ச.ச. நிலையத்துக்கு உபகரணங்கள்

பளை, மார்ச் 12

யாழ். வை. எம்.சீ.ஏ. நிறுவனத்தினர் இயக்கச்சி வை.எம்.சீ.ஏ. குடியிருப்பில் உள்ள அறிவொளி சனசமூக நிலையத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பெற்றோமக்ஸ் ஆகியவற்றை வழங்கியுள்ளதாக நிலையத் தலைவர் சி. இராமகிருஷ்ணன் தெரிவித்தார். (வ-9)


ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

யாழில் பல்கலைக்கழக, தொழில் புரிவோர், தொழில் தேடுவோர்
3000க்கு மேற்பட்டோர் தெரிவுசெய்து தமது ஆங்கில புலமையில் வெற்றி பெற்ற...
முறையானதும் தரமானதுமான ஆங்கிலபயிற்சி



veta® Spoken English
Experts in English Training
An ISO 9001:2000 Certified Company

☑ ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
☑ தரமான போதனை சிறந்த நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகளில்

veta ஆசியாவில் 140 நகரங்களில் 250 க்கும் மேற்பட்ட கிளைகள்

veta Foundation ENGLISH | veta English First Step | veta English Next Step | அவரவர் நிலைக்கேற்ப பயிற்சிகள்

யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகத்தில் புதிய பிரிவுகள்
பதிவுகளுக்கு To get scholarship Call or SMS. 0777 577333

A1 Exam திருமணம் செய்து UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது B1-Exam IELTS

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0243
சுன்னாகம் Tel. : 021-224 1970



THE ROYAL COLLEGE OF JAFFNA

பாய் ,சங்கானை. By. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி


தொடர்பு. 0776751649


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் தாக்குவோம்

## ஈரானுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

**அமெரிக்காவின் ஆட்சேபனையையும் மீறி ஈரான் மீது தாக்குதல் தொடுப்பதில் இஸ்ரேல் விடாப்பிடியாக உள்ளது. ஈரானின் அணு ஆயுதங்கள் அமெரிக்காவை விடவும் தனக்கே அதிக ஆபத்து என்று இஸ்ரேல் கருதுவதாகக் கூறப்படுகிறது.**




*ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியம் உள்ள வழிமுறை விளக்கும் படம் இது.*

ஈரானின் அணு சக்தி நிலையங்கள் மீது மிக விரைவில் தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத் தென் யாஹு தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிப்பதாக கூறி அந்த நாட்டின் மீது அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட மேற்குலக நாடுகள் பல்வேறு தடைகளை விதித்துள்ளன.

இந்த நிலையில் ஈரான் மீதான தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈரான் அணு சக்தி நிலையங்கள் மீதான தாக்குதலுக்கான காலகட்டம் ஆண்டுக் கணக்கில் இல்லை. வார அல்லது நாள் கணக்கில் உள்ளது. மிக விரைவில் இஸ்ரேலின் தாக்குதல் ஆரம்பமாகும். மக்களுக்கு எவ்வித சேதத்தையும் உண்டு பண்ணாமல் ஈரானின் அணு உலைகளை அழிப்பது மாத்திரமே இந்தத் தாக்குதலின் பிரதான இலக்காக இருக்கும். அமெரிக்கா தடுத்தாலும் கூட தாக்குதல் நடத்தும் முடிவில் இஸ்ரேல் பின்வாங்கப்போவதில்லை. அமெரிக்காபோன்ற நாடுகள் ஈரானை விட்டு மிகத் தொலைவில் உள்ளன. ஆனால், இஸ்ரேலோ ஈரானுக்கு மிக அருகில் உள்ளது. ஈரானின் அணு ஆயுத அச்சுறுத்தல்கள் இஸ்ரேலுக்கே மிக அதிகம். எனவே ஈரான் மீதான தாக்குதலை விரைவுபடுத்துவதைத் தவிர எமக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை - என்றார்.

இதேவேளை, மேற்குலக நாடுகளுடன் தனது அணுத் திட்டப் பரிசோதனை தொடர்பான பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று ஈரான் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## நீச்சலுடைச் சாதனை



புளோரிடா, மார்ச் 12

சாதனைகளை எந்தத் துறைகளில் படைப்பது என்ற வரையறைகள் இல்லாமற்போய்விட்டது. இதனால் என்ன சாதனை படைத்து தங்கள் பெயரை கின்னஸ் புத்தகத்தில் பதிக்கலாம் என்று எல்லோரும் 'ரூம் போட்டு' யோசிக்கிறார்கள்.

அமெரிக்காவில் நடைபெற்ற நீச்சலுடை அணி வகுப்பு நிகழ்வொன்றில் 450 பெண்கள் கலந்துகொண்டு புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளனர். புளோரிடா மாநிலத்தின் பனாமா சிட்டி கடற்கரையில் இந்தச் சாதனை நிகழ்வு இடம்பெற்றது.

ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் நீச்சலுடை அணிந்த 357 பெண்கள் ஒன்றுகூடிய நிகழ்வே இதுவரை நீச்சலுடைச் சாதனையாக இருந்து வந்தது. இப்போது 450 பேர் இணைந்து அந்தச் சாதனையை முறியடித்துள்ளனர்.

இவ் அணிவகுப்பு நிகழ்வில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெண்கள் ஒன்று கூடி சுமார் ஒரு மைல் தூரம் அணிவகுப்பு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. நீச்சலுடை மங்கையரின் இந்த அணி வகுப்பைப் பார்வையிட ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் குறுகிய நேரத்தில் அங்கு திரண்டனர்.

"இது ஒவ்வொருநாளும் பார்க்கக்கூடிய ஒரு விடயமல்ல, இந்த நீச்சலுடை அணிவகுப்பு சாதனையை நம்ப முடியாமல் உள்ளது'' என கின்னஸ் உலக சாதனைப் பதிவுகளின் தீர்ப்பாளரான பிலிப் ரொபர்ஸ்டன் தெரிவித்துள்ளார். (ந)

## மீண்டும் நானே!

### நம்புகிறார் ஒபாமா




நியூயோர்க், மார்ச் 12

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நான் மீண்டும் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுவேன் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் விர்ஜினியா மாகாணத்தின் பிட்ஸ்பர்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒபாமா பேசுகையில், எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை உண்டு. ஏனெனில் எனது ஆட்சிக் காலத்தில் பல முக்கிய சவால்களை தீர்த்துள்ளேன். அவை குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் அமெரிக்காவுக்கு மட்டுமல்லாது முழு உலகுக்குமே நன்மை தரக்கூடியவை.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு தீவிரமாகவும், அதே நேரத்தில் மிக விரைவாகவும் மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் அமெரிக்கா மீண்டும் பழைய நிலையை அடையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.



*15 நாட்களில் 30 மாடி உயரக் கட்டடம் ஒன்றைக் கட்டி முடித்து சீனா புதிய சாதனை படைத்துள்ளது. இந்தக் கட்டடம் சீனாவின் ஹியூனான் மாகாணத் தலைநகரான சாங்ஷா நகரில் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் கட்டுமானப் பொருள்கள் அனைத்தும் முதலில் அங்கு குவிக்கப்பட்டன. பின்னர் பணியாளர்களை வைத்து 15 நாள்களில் 30 மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது அதிவேகமாகக் கட்டப்பட்ட பெரிய கட்டடம் என்ற உலக சாதனையைப் படைத்துள்ளது.*

## கிரீஸை மீட்கும் ஐரோப்பிய நாடுகள்

நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் கிரீஸ் நாட்டை மீட்க ரூ.2 லட்சத்து 45 ஆயிரம் கோடி கடன் அளிக்க ஐரோப்பிய நாடுகளின் நிதி அமைச்சர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள கிரீஸ் நாட்டை மீட்பதற்கு ஐரோப்பிய நாடுகளின் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் என்பவற்றைச் சேர்ந்த பலரும் நிதியுதவி அளித்து வருகின்றனர்.

இதன் மூலம் அந்த நாடு நிதி நெருக்கடியில் இருந்து மெதுவாக மீண்டு வருகிறது. இந்த நிலையில் தனியார் நிதி நிறுவனங்களிடம் இருந்து 130 பில்லியன் யூரோவை குறைந்த வட்டியில் பெற ஒப்பந்தத்தை கிரீஸ் மேற்கொண்டது.

இந்த ஒப்பந்தம் குறித்து கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஐரோப்பிய நாடுகளின் நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதில் அனைத்து நிதி அமைச்சர்களும் கிரீஸுக்கு கடன் அளிக்க சம்மதம் தெரிவித்தனர். ஆனால் முதற்கட்டமாக ரூ.2 லட்சத்து 45 ஆயிரம் கோடியை மட்டும் கடனாக அளிக்க ஒப்புதல் அளித்தனர்.

இந்தக் கூட்டம் முடிந்த பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த லக்ஸம்பர் பிரதமர் ஜீன் கிளாடே ஜங்கர், கடனைப் பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியம்(ஐஎம்எப்) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் விதித்த நிபந்தனைகளை கிரீஸ் பூர்த்தி செய்துள்ளது. இதனால் அந்நாட்டுக்கு இரண்டாவது கட்டமாக கடனை அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. - என்றார்.

## நிறுத்த முடியாது!

### கோபி அனானுக்கும் அசையவில்லை அசாத்



டமஸ்கஸ், மார்ச் 12

சிரியாவில் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலை நிறுத்த முடியாது என சிரியா ஜனாதிபதி பஷர் அல் அசாத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுச் சண்டையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து ஐ.நா - அரபு லீக் சிறப்பு பிரதிநிதி கோபி அனான், சிரியா ஜனாதிபதி பஷர் அல் அசாத்தைச் சந்தித்துப் பேசினார்.

சிரியாவில் ஜனாதிபதி இராணுவத்துக்கும், சிரியா விடுதலை இராணுவத்துக்கும் இடையிலான சண்டையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை கோபி அனான் முன்வைத்தார்.ஆனால் எதிர்த் தரப்பினர் ஆயுதம் [illegible] சாத்தியமில்லை என்று தெரிவித்த அசாத், இந்தச்சூழல் தொடரும் வரையில் பேச்சுவார்த்தைக்கும் வாய்ப்பில்லை.அதே நேரம் அமைதியை உருவாக்கும் எந்த முயற்சிக்கும், தான் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறேன் என உறுதியாக கூறினார். (ந)

## கடாபி மகனுக்குச் சிக்கல்



லிபியாவின் முன்னாள் அதிபர் கடாபியின் இளைய மகன் ஷாதி கடாபி(வயது 39) நைஜர் நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

தற்போது அரச பணத்தில் முறைகேடு செய்து வெளிநாடுகளில் சொத்துக்கள் வாங்கிக் குவித்துள்ளதாகக் கடாபி குடும்பத்தினர் மீது லிபிய அரசு வழக்குத் தொடர்ந்துள்ளது.

[illegible]யில் கடாபியின் [illegible] இளைய மகனும், உதைபந்து வீரருமான ஷாதி கடாபி வடமேற்கு லண்டனில் ஹாம்ஸ்டெட் நகரில் ரூ.70 கோடிக்கு ஓர் ஆடம்பர மாளிகை வாங்கி இருப்பது லிபியா அரசுக்கு அதிகாரபூர்வமாகத் தெரிய வந்துள்ளது.

8 படுக்கை அறைகள், நீச்சல் குளம் மற்றும் வேலைப்பாடுகள் கொண்ட மரச் சாமான்கள், சினிமா தியேட்டர் போன்ற வசதிகள் அந்த மாளிகைக்குள் உள்ளன. இவற்றை லிபியா அரசிடம் 2 வாரத்திற்குள் ஒப்படைக்கும்படி லிபிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிசுபிசுத்தது ஆர்ப்பாட்டம்

## ரஷ்யாவில் எதிர்க்கட்சிகள் அழைப்பு; மக்கள் உதாசீனம்



மொஸ்கோ, மார்ச் 12

ரஷ்யாவில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில், விளாடிமிர் புடின் மோசடி செய்தே வெற்றி பெற்றார் என்று கூறி ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ரஷ்யாவில் கடந்த 4ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இதில் பிரதமர் விளாடிமிர் புடின் ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சியின் சார்பில் போட்டியிட்டார்.

தேர்தல் முடிவுகளில புடின் 64 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதே போன்று கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலிலும் புடினின் ஐக்கிய ரஷ்ய கட்சி மோசடிசெய்தே வெற்றி பெற்றதாகக் குற்றம் சாட்டி லட்சக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ந்து புடினுக்கு கடும் நெருக்கடி நேரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிலைவரம் தலைகீழாக மாறிவிட்டது குறிப்பிடத்தக்கது.

தலைநகர் மாஸ்கோவின் நோவி அர்பாத் பகுதியில் எதிர்க்கட்சியினர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. அந்தப் பகுதியில் 50 ஆயிரம் பேர் மட்டும் கூடுவதற்கு பொலிஸார் அனுமதியளித்திருந்தனர், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் எதிர்பார்த்ததை விட மிகக் குறைவாகவே மக்கள் கூட்டம் வந்திருந்தது. வந்தவர்கள் 25 ஆயிரம் பேர் என்று எதிர்க்கட்சித் தரப்பிலும், 10 ஆயிரம் பேர் என்று செய்தி நிறுவனங்கள் தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச நாடுகள் இந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொண்டாலும், சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், இந்தத் தேர்தலிலும் முடிவுகள் புடினுக்கு சாதகமாக மாற்றப்பட்டதாக தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மிகக் குறைவான அளவில் கூட்டம் வந்தது குறித்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சிகள், புடின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதைத் தடுக்க தாங்கள் தவறிவிட்டதால் மக்கள் குறைவாக வந்திருக்கலாம் என்று கூறின.

அதே நேரம் இடதுசாரி இயக்கத்தின் செர்கெய் உடல்ஸ்டோவ், மே 1ம் திகதி 10 லட்சம் மக்கள் திரளும் பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளார். (ந)



ஜப்பானில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய சுனாமி தாக்கம் நிகழ்ந்து நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியானது. ஜப்பானின் கடற்கரைகளில் இந்த அனர்த்தத்தில் இறந்தோருக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

# கைதிகளின் தலையெழுத்தை மாற்றிய கையெழுத்து



காபூல், மார்ச் 12

ஆப்கானில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ள சிறையையும் கைதிகளையும் ஆப்கான் வசம் ஒப்படைக்க ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

ஆப்கானில் தலிபான்கள், அல்கொய்தா தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன. எனினும் ஆப்கானில் இருந்து நேட்டோ படைகள் வரும் 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் முற்றிலும் வெளியேற்றப்பட்டு விடும்.

எனவே உள்நாட்டு பாதுகாப்பை ஆப்கான் அரசிடம் ஒப்படைக்க பேச்சுகள் நடந்து வருகின்றன. கைதிகள் ஒப்படைப்பு தொடர்பாக ஆப்கான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் - அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இடையே பேச்சு நடந்தது. இதன் பின்னர் இரு நாட்டு அதிபர்களும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். (ந)

# பெண்கள் மீது தலிபான்கள் கட்டுப்பாடு

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பெண்களுக்கு பல்வேறு விதமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

அவ்வாறு கட்டுப்பாடுகளை மீறும் பட்சத்தில் தலிபான்களின் தாக்குதலுக்கு ஆளாகுகின்றனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஸ்வாபியில் கல்லூரியில் தலிபான் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் பெண்கள் கல்லூரி தரைமட்டமாக்கப்பட்டது, அதிர்ஷ்டவசமாக எவ்வித உயிர் இழப்பும் ஏற்படவில்லை என காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் தீவிரவாதிகள் கல்லூரி கட்டிடத்துக்கு வெளியே வெடிகுண்டை வைத்து வெடிக்க செய்துள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர். (ந)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி இ. தனபாலசிங்கத்தின் பாசமிகு தந்தை

### சின்னையா முருகர்

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக் கின்றோம்.

ஓம் சாந்தி !ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்,

(C/2951)(6-9-8)

## பணியாளர்கள் தேவை

1. போட்டோபிரதி செய்பவர்கள் (ஆண், பெண்)
2. சமையலாளர் (ஆண், பெண்)
3. றொட்டி மேக்கர்
4. ரீ மேக்கர்
5. சப்பிளையர்
6. உதவியாளர் (ஆண், பெண்)

இருபாலாரும் நேரில் வரவும்

தனுஷ் கபே

66, மணிக்கூட்டு கோபுர வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்)

T.P : 021 2229133

## பட்டதாரிகளை பதிவுசெய்தல்

யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து பட்டதாரி சேவையில் உள்ளவர்களும் எதிர்காலத்தில் தங்களிற்கான சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ளும் பொருட்டு மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களை தலைவராகக் கொண்ட சிறீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தில் பதிவினை மேற்கொள்ள சங்கத்தின் யாழ்மாவட்ட இணைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் சிறீ.ல.சு கட்சி தலைமையகம் அமைந்துள்ள இல 80A ஆலய வீதி நல்லூரிற்கு வருகை தந்து தமது பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட அமைப்பாளர், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி


இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

வடமாகாண சபை

கேள்விகளுக்கான கோரல்

| | | |
|---|---|---|
| கடன் இலக்கமும் தலைப்பும் | : | கடன் - 2626 SRI – முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்,பகுதி C - அடிப்படை சமுதாயத்திற்கான சேவைகளை மேம்படுத்தல் |
| நிதி மூலம் | : | இலங்கை அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன்மூலம் |
| கேள்வி சமர்ப்பிக்கும் திகதி | : | இறுதி திகதி 05.04.2012 : பி.ப 2.00 மணி |

| இல. | ஒப்பந்த இல. | மாவட்டம் | வேலையின் பெயர் | கட்டுமானக் காலம் |
|---|---|---|---|---|
| 1. | CAREP/NPC/ID/NCB/W/12-11 (II) | வவுனியா | மாளிகைக்குளம் நீர்ப்பாசன வாய்க்கால் வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் |
| 2. | CAREP/NPC/ID/NCB/W/12-16(II) | முல்லைத்தீவு | மருதன்குளம் நீர்ப்பாசன வாய்க்கால் வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் |
| 3. | CAREP/NPC/ID/NCB/W/12-21(II) | முல்லைத்தீவு | மடவாளசிங்கம்குளம் நீர்ப்பாசன வாய்க்கால் வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் |
| 4. | CAREP/NPC/ID/NCB/W/12-26(I) | முல்லைத்தீவு | விசுவமடுக்குளம் அணைக்கட்டு வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் |
| 5. | CAREP/NPC/ID/NCB/W/12-26(II) | முல்லைத்தீவு | விசுவமடுக்குளம் நீர்ப்பாசன வாய்க்கால் வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் |

1. மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக திட்டப் பணிப்பாளர், முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம், நீர்ப்பாசனம், வ.மா. / தலைவர் கருத்திட்ட பெறுகைக்குழு அவர்கள் 05 கட்டுமான வேலைகளுக்கான மூடிய கேள்விகளை கோருகிறார். வேலைகளின் பெயர்கள், கட்டுமானக் காலம், என்பன மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

2. கேள்வியாளர்களுக்கான முதன்மை தகுதிகாண் காரணிகள். கேள்விப்பத்திரத்தினை ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்வதற்கு கேள்வியாளர்கள் செய்யவேண்டியவை, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் திறத்தல், கேள்விப்பிணை, கேள்வி விளக்கக்கூட்டம் என்பன தொடர்பான மேலதிக விபரங்களை கேள்வியாளர்கள் 06.03.2012 ஆம் திகதியில் Daily News பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வியாளர்களுக்கான கோரலை பார்வையிடுவதன்மூலம் அறிந்துகொள்ளலாம். அல்லது பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் அறிந்துகொள்ளலாம்.

எந்திரி.க.சோ.சிவபாதம்.
திட்டப் பணிப்பாளர்
முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்
நீர்ப்பாசனத் திணைக்களம், வ.மா.
கச்சேரி ஒழுங்கை
கிளிநொச்சி

தொலை பேசி இல . 0212285472 தொலை நகல் இல: 0212285440 மின்.அஞ்சல்: npirri@sltnet.lk


## பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்



சௌபாக்கியத்தை தேடிச் செல்லும்
பயணதின் முன்னோடியாக
இலங்கைப் பெண்களுக்குத் தேசிய
மரியாதை தெரிவிக்கும் விழாவில்
அதி மேன்மை தங்கிய
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ
அவர்களினாலும்
இலங்கையின் முதற்பெண்மணி
கௌரவ திருமதி சிராந்தி ராஜபக்ஷ
அவர்களினாலும் அலரிமாளிகையில்
சர்வதேச மகளிர் தினத்தன்று
கௌரவிக்கப்பட்ட 08 பெண்களில்
ஒரே ஒரு தமிழ் பெண்ணாக
கௌரவிக்கப்பட்ட
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
பெருமதிப்பிற்குரிய
திருமதி இமெல்டா சுகுமார்
அவர்களைப் பாராட்டி வாழ்த்தி
வரவேற்கின்றோம்.

பிரதித்திட்ட பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
மீள்எழுச்சித்திட்டம்/வடக்கின் துரித மீட்சித் திட்டம்
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(C/9101)(6,9,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கைக்கு எதிரான தீர்மானம்:

# 7 கோடி தமிழக மக்கள் சார்பில் இந்தியா ஆதரவளிக்குக!

## விஜயகாந் வலியுறுத்து

சென்னை, மார்ச்.12

தமிழ்நாட்டில் உள்ள 7 கோடி மக்களின் உணர்வை பிரதிபலிக்கும் வகையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்திய அரசு முழு மனதோடு ஆதரிக்க வேண்டும் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் வலியுறுத் தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்ட அறிக்கையில் தெரி வித்துள்ளதாவது:

இலங்கையில் விடுதலைப் புலிகளை எதிர்த்து அந்த அரசு நடத்திய போரில் பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

இதன் அடிப்படையில் ஐ.நா. மன்றம் நிபுணர் குழுவை அமைத்து விசாரித்தது. மனித உரிமை மீறல்கள் நடைபெற் றுள்ளது. போர்க் குற்றவாளி தான் என்றும் உணரப்பட்டு இலங்கை அரசுக்கும் தெரி விக்கப்பட்டது.



**இலங்கை அரசு, தானே ஒருகுழுவை அமைத்து விசாரித்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகளும் வெளி** வந்துள்ளன. இலங்கை அதையும் நிறைவேற்றவில்லை.

தமிழ்ப் பகுதியில் தமிழ் இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் இலங்கையில் தற்போது பாதுகாப்பு இல்லை. இளைஞர்கள் கடத்திக் கொல்லப்படுகின்றனர்.

தமிழ்ப் பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பிலேயே இன்றும் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் மனித உரிமைகளின் பேரால், இலங்கை அரசைக் கண்டித்து ஜனநாயக நாடுகளின் சார்பில் அமெரிக்க நாடு, ஜெனீவாவில் கண்டனத் தீர்மானம் கொண்டு வருகிறது.

இந்த தீர்மானம் முழு அளவுக்கு எமக்கு திருப்தி அளிக்கவில்லை என்றாலும், இதை நிறைவேற்றுவதன் மூலம் இலங்கை அரசை உலக அபிப்பிராயத்தின் முன்பு குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முடியும்.

இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். மனித உரிமைக் குழுவில் ஒரு குறிப்பிட்ட நாட்டை எதிர்த்து கண்டனத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று இந்தியா கூறி வருகிறது.

இதன் மூலம் இலங்கையைக் காப்பாற்ற முயற்சிக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள 7 கோடி மக்களின் உணர்வை பிரதிபலிக்கும் வகையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்திய அரசு முழு மனதோடு ஆதரிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.(வ)

# இந்திய துறைமுகங்கள் விரைவில் நவீன மயம்

## ஜி.கே.வாசன் அறிவிப்பு



இந்தியாவில் உள்ள அனைத்து துறைமுகங்களையும் தனியார், பொதுத்துறை பங்களிப்புடன் நவீனப்படுத் தப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச் சர் ஜி.கே. வாசன் தெரிவித் ததாவது:

துறைமுக மேம்பாட்டுக் காக மத்திய கப்பல் போக்கு வரத்துத்துறை அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இந்தியாவில் உள்ள அனைத்து முக்கிய கடல் துறைமுகங்களை மேம் படுத்துவதற்கும், சர்வதேச தரத்தில் நவீனப்படுத்துவ தற்கும் ரூ. 2.34 லட்சம் கோடி முதலீடு செய்யப்பட உள்ளது.

இவ்வளவு நிதி மத்திய அரசிடம் கிடையாது. எனி னும் தனியார், பொதுத்துறை பங்களிப்புடன் இந்தத்திட் டம் நிறைவேற்றப்படும்.

கடந்த ஆண்டு துறை முகங்கள் வாயிலாக 936 மில்லியன் தொன் பொருள் கள் கையாளப்பட் டுள்ளன. எதிர்வரும் 2019-2020 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் உள்ள அனைத்து துறை முகங்களிலும் 3,230 மில்லி யன் தொன் பொருள்களைக் கையாள இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது. (வ)

# அந்தமானில் நிலநடுக்கம்

**வங்கக்கடலின் தென் கிழக்கே மையம் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகப் புதுடில்லி வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.**

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு மிதமான நில நடுக்கம் ஏற்பட்டதால் அந்தமாநில மக்களிடத்தில் அச்சம் அதிகரித்துள்ளது.

அந்தமான், நிக்கோபார் மற்றும் கார் நிக்கோபார் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு 2.28 மணியளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தின் காரணமாகக் கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் அச்சம் கொண்டு வீதிகளில் வந்து நின்றனர்.

வங்கக்கடலின் தென் கிழக்கே மையம் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட தாகப் புதுடில்லி வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 4.6 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் பெரு மளவு சேதம் இல்லை எனி னும் கட்டிடங்கள் லேசாக குலுங்கியதாக அம்மையம் தெரிவித்துள்ளது. (வ)



உத்தர பிரதேச முதல்வராக பதவியேற்கவுள்ள சமாஜ்வாதி கட்சி மாநிலத் தலைவர் அகிலேஷ் யாதவ், கட்சியின் மூத்த தலைவர்கள் முகமது அசம் கானே மற்றும் சிவ்பால் சிங் யாதவ் ஆகியோருடன் ஆளுநர் ஜோஷியை சந்தித்து, தன் பதவியேற்பு விழா பற்றிய விவரங்களை தெரிவித்தார்.

# அமெரிக்காவில் குடியேறியவர்களில் 10 லட்சம் இந்தியருக்கே வாக்குரிமை

அமெரிக்காவில் 10 லட்சம் இந்தியர்கள் வாக்கு ரிமை பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தெற்காசிய நாடுகளை சேர்ந்தவர்கள் அதிகளவில் அமெரிக்காவில் குடியேறி இருப்பதாக கடந்த ஆண்டு (2010) அமெரிக்காவில் நடத் தப்பட்ட மக்கள் தொகை கணக் கெடுப்பில் தெரியவந்துள் ளது. அவர்களில் இந்தியர்கள் மட்டும் 30 லட்சத்து 19 ஆயிரம் பேர் உள்ளனர். தெற்காசிய நாடுகளில் சீனர்கள் (30 லட்சத்து 79 ஆயிரம் பேர்) முதலிடத்தை பிடித்துள்ளனர். அவர்க ளுக்கு அடுத்தபடியாக பிலிப் பைன்ஸ் நாட்டினர் (30 லட்சத்து 42 ஆயிரம் பேர்) 2 வது இடத்தை பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு அடுத்த தாக இந்தியர்கள் 3ஆவது இடத்தை வகிக்கின்றனர். அமெரிக்காவில் வசிக்கும் இந் தியர்களில் 10 லட்சம் பேர் வாக்குரிமையைப் பெற்றுள் ளனர்.

இந்தியர்கள் பெரும் பாலும் அமெரிக்காவில் உள்ள மெட்ரோபாலிட்டன் நகரங் களான நியூயோர்க், சிகாகோ, வாஷிங்டன், லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் சான் பிரான்சிஸ் கோயில் தங்கியுள்ளனர். (வ)

# வலுவற்றது அமெ. தீர்மானம்: இந்தியா ஆதரிக்க வேண்டும்

## திருமாவளவன் கோரிக்கை

அமெரிக்காவின் இலங் கைக்கு எதிரான தீர்மானம் வலுவானதாக இல்லா விட்டாலும் இந்தியா ஆதர வளிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு மாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கடந்த வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித் ததாவது:

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர் பாக ஐ.நா.வில் அமெரிக்கா வரைவுத் தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது.

பெரியளவில் எதிர்பார்க் கப்பட்ட இந்தத் தீர்மானம் பெரும் ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருப்பதாக உலகத் தமிழர்கள் தெரிவிக் கின்றனர். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் அமைந்துள்ள 13 ஆவது சட்டத் திருத்தத் தைவிட இந்தத் தீர்மானம் வலுக்குறைந்து இருப்பதா கக் கூறப்படுகிறது.

எனினும், உலக அளவில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாதத்தை விவாதிக் கும் சூழலை இந்தத் தீர் மானம் உருவாக்கியுள் ளது. எனவே இதனை இந்தியா ஆதரிக்க வேண்டும். முதல் வர் உள்ளிட்ட தமிழகத் தலைவர்கள், மக்களின் உணர் வுகளுக்கு மத்திய அரசு மதிப்பளிக்க வேண்டும்- என்று அதில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது. (வ)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் இந்தியா ஆதரவளிக்க வேண்டும்

## காங்கிரஸ் தலைவர் வேண்டுகோள்

**இலங்கை தமிழர்களுக்கு அன்னை இந்திராகாந்தி காலத்திலிருந்து உதவிக் கரம் நீட்டியது காங்கிரஸ் கட்சிதான் என்கிறார்.**



ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமை பேரவையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தாக்கல் செய்துள்ள தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு அளிக்க வேண்டும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட் டுள்ள அறிக்கை யில் தெரிவித்த தாவது:

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இருந்த தாக ஐ.நா. சபை அமைத்த மூவர் குழு அறிக்கை தந்தி ருக்கிறது. இலங்கையில் மிகப் பெரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்று அறிந்த பின்னர் மனிதர்களின் உரிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்தியா குரல் கொடுத்தாக வேண்டும். இலங் கையில் அப்பாவித் தமிழர்களுக்கு காங்கிரஸ் கட்சி எப்போதும் பரிவாக இருந்திருக்கிறது.

இலங்கை தமிழர்களுக்கு அன்னை இந்திராகாந்தி காலத்திலிருந்து உதவிக் கரம் நீட்டியது காங்கிரஸ் கட்சிதான் என்பதை நினைவு கூர ஆசைப்படுகிறேன். இந்தப் போருக்குப் பின்னும் கூட தமிழர் பகுதிகளில் ரயில் பாதைகள் அமைத்தல், வீடுகள் கட்டிக் கொடுத்தல், யாழ்ப்பாணம் பகுதியில் தூதரகம் திறத்தல், கல்விக் கூடங்களை சீரமைத்து விவசாயத்துக்கு உழவு இயந்திரங்கள் வழங்கல் போன்றவை எல்லாம் மேற் கொண்டது காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசுதான். இன்னும் உதவி செய்து கொண்டிருப்பதும் மத்திய அரசுதான்.

இதேவேளை கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசனும், மத்திய அமைச்சர் நாராய ணசாமியும் இந்தத் தீர்மா னத்தை ஆதரிக்க வற்புறுத் தியிருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப் போது தீர்மானம் வந்துவிட்ட நிலையில் இந்திய அரசு அந்த தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று வற்புறுத் துகிறேன்.

அதுமட்டுமல்லாமல் நேரடியாக வற்புறுத்து வேன். இதனை இந்தியா ஆதரிக்கும் என்று நம்புகி றேன். - என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளது. (வ)

# இந்திய விமானக் கண்காட்சி ஆந்திராவில்

ஹைதராபாத், மார்ச் 12

இந்திய விமானக்கண்காட்சி ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில், நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் ஆரம்பமாகித் தொடர்ந்து 5 தினங்கள் நடைபெறவுள்ளது.

சர்வதேச ரீதியில் நடத்தப்படும் இந்தக் கண்காட்சியில் ஏ-380 மற்றும் ட்ரீம் லைனர் 778 மற்றும் சுகோய் சூப்பர் ஜெட் போர் விமானம் போன்ற விமானங்கள் கண்காட்சியில் இடம்பெற உள்ளது. இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள ஒற்றை எஞ்ஜின் கண்ட இலகுரக ஹெலிகொப்டரும் இதில் இடம்பெற உள்ளது. மாநில முதல்வர் கிரண் குமார்ரெட்டி மற்றும் மத்திய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் அஜித்சிங் ஆகியோர் நாளைமறுதினம் புதன்கிழமை கண்காட்சியை ஆரம்பித்து வைத்து சிறப்புத் தபால் தலையை வெளியிடவுள்ளனர். மேலும் இந்தக் கண்காட்சியில் 22 விமான தயாரிப்பு நிறுவனங்களும், 21 விமான நிறுவனங்களும், பிரிட்டன், பிரான்ஸ், அமெ ரிக்கா போன்ற நாடுகளும் இக்கண் காட்சியில் பங்கேற்கின்றன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்திடு பெண்ணினமே!



எம்மினமே -நம்
பெண்ணினமே!
ஏனின்னும் தாமதம்?
எதற்கிந்த வீண் பயம்!
துணிந்து நிமிர்ந்து
வீறுநடை-போட்டு
விரட்டியடி வீணர்களை-நீ
திரட்டிடுவாய் வெற்றிகளை
உன்னை நசுக்கப் பார்க்கும்
நச்சுப் பாம்புகளை
நார்நாராய்க் கிழித்து விடு
நமக்கான நாளில்
புது வரலாறு படைத்துவிடு

உன்னையே உரமாக்கி
உழைத்திடு- என்றும் நீ
வெற்றிக் கனிகளை கொத்தாய் பறித்து
உலகுக்கோர் உத்தமியாய்
உயர்திடுவாய்

கிளிநொச்சியூர்
ஜனகா.

# காலங் காலமாய் ஊறிப்போன உணர்வுகள்



திருமணமென்பது வாழ்க்கையின் ஒரு பகுதி. அதைவிடவும் கல்வி, தொழில், இலட்சியங்கள் வாழ்க்கையாக அமையலாம் என்றும் அந்தப் பெண்ணுக்கு அறிவூட்டத் தவறியது கல்விமுறை மையின் குற்றமா? சமுகத்தின் குற்றமா? கல்வியறிவு, தொழில், பொருளாதாரம் அனைத்தும் இருந்தும் வாழ்வதற்கான நம்பிக்கை இந்தப் பெண்ணுக்கு ஏன் இல்லாமற் போனது?

பெண்ணெனப்படுபவளின் வாழ்க்கை திருமணத்தில் முடியவேண்டும், திருமண வாழ்க்கையிலும் ஆணே பற்றுக்கோலாக இருக்க வேண்டும். ஆணின்றி வாழ்க்கை இல்லை எனக் காலங்காலமாய் ஊறிப்போன உணர்வுகளுடன் அழுந்தி, அழிந்து கொண்டிருக்கும் பெண்களை வெளிக்கொணர்வது எப்படி?

அறிவும், அழகும் ஒருங்கே பெற்ற பெண் ஒரு சிறந்த ஆசிரியை, பல்கலைக்கழக அனுமதி பெற்றும் அவர் செல்லாததற்குக் காரணம் காதல். ஏற்கனவே திருமணமாகிய, பல பெண்களுடன் தொடர்புடையவன் என்று பலரால் கூறப்பட்ட ஒருவனைத் திருத்தி வாழவைப்பேன், வாழுவேன் என்ற நம்பிக்கையுடன் கோலாகலத் திருமணத்துடன் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார்.

சில வாரங்களின் முன் தனது திருமணப் படங்களைக் காட்டிச் சென்ற அந்தப் பெண் தற்கொலை செய்துகொண்டார் என்னும் செய்தி என்னைத் திகைக்க வைத்தது.

பல வருடங்களாகக் காதலித்து இப்படிப்பட்டவன்தான் என்று அறியப்பட்ட ஒருவனைத் திருத்தி வாழலாம் என்ற நம்பிக்கையைக் கைவிட்டமை ஒருபுறமிருக்க, தகுதியற்ற ஒருவனைத் தன்வாழ்வின் மையமாகக் கொண்டு, அந்த மையம் திசை மாறியமைக்காகத் தற்கொலை செய்துகொண்ட அந்தப் பெண்ணின் அறிவு எங்கே சென்றுவிட்டது?

திருமணமென்பது வாழ்க்கையின் ஒரு பகுதி. அதைவிடவும் கல்வி, தொழில், இலட்சியங்கள் வாழ்க்கையாக அமையலாம் என்றும் அந்தப் பெண்ணுக்கு அறிவூட்டத் தவறியது கல்விமுறைமையின் குற்றமா? சமுகத்தின் குற்றமா?

கல்வியறிவு, தொழில், பொருளாதாரம் அனைத்தும் இருந்தும் வாழ்வதற்கான நம்பிக்கை இந்தப் பெண்ணுக்கு ஏன் இல்லாமல் போனது?

நமது கல்வி தவிர நம் பண்பாடும் மரபுகளும் கூட இத்தகைய பலவீனங்களையும் குறைபாடுகளையும் கொண்டேயிருக்கிறது. வாழ்வை கல்வியும் பண்பாடும் கணிசமான அளவு தீர்மானிக்கும் காரணிகளாக இருப்பதால் இவற்றின் தாக்கம் இருப்பது தவிர்க்க முடியாததாகிறது.

இந்த இரண்டு அம்சங்களும் முழுச் சமுகத்தையும் பாதிப்பதுடன் பெண் வாழ்வையும் அதிகம் தாக்கத்துக்குட்படுத்துகின்றன. மரபின் குறைபாடுகளை உடைக்கக்கூடிய வல்லமையோடு துணிவை நமது கல்வி பெண்களுக்கு மட்டுமல்ல சமுகத்துக்கே வழங்கவில்லை.

ஆகவே பெண்கள் தங்களது ஆற்றல்கள், திறமைகள், உணர்வுகள், விருப்பங்கள் போன்றவற்றை வெளிப்படுத்த வேண்டும். அதேவேளை பெண்களின் பிரச்சினைகளை சமுகத்துக்கு உணரவைக்க வேண்டும். இதற்குத் தடையாக உள்ள எமது பிரதேச சமூகப் பார்வைகளை எடுத்துக் காட்டி இவ்வாறான சமுகத்தின் மத்தியிலிருந்து பெண்கள் விடுபட முன்வர வேண்டும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, [illegible]
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# புரிந்துணர்வு வேண்டும்



பெண்கள் எந்த வேலை செய்ய முற்பட்டாலும் உடனே கூறுவார்கள் பெட்டைக் கோழி கூவி பொழுது விடியுமா?, பெண் புத்தி பின்புத்தி இவ்வாறான பழமொழிகள் பெண்களை இரண்டாம் பட்சமாக சுட்டிக் காட்டுகின்றன. மேலும் சமுதாயம் பெண்ணினது முயற்சியை சிலந்தி வலைக்கு ஒப்பிட்டும், ஆமைக்கு ஒப்பிட்டும், மற்றும் பெண்ணின் குற்றத்தைப் பெரிதாகவும், ஆண்களின் குற்றத்தை சர்வ சாதாரணமாகவும் இன்றைய சமூகம் பார்க்கின்றது. இவ்வாறு உள்ள எமது சமூகத்துக்கு ஒரு புதிய மாற்றத்தை சமுதாயமே ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறான பார்வைகள் சமூகத்தில் ஏன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. சமூகம் பெண்கள் மீது கொண்டுள்ள கருத்துத்தான் என்ன? இதிலிருந்து விடுபட ஏன் இன்னும் சமுகம் யோசிப்பதில்லை? சமுதாயம் பெண்கள் மீது கொண்ட பார்வை காலம் காலமாக இப்படித்தான் இருந்து வருகின்றது.

இதனை ஒரு வரையறையாக வைத்துள்ளார்கள். பெண்ணானவள் தலைகுனிந்து நடக்க வேண்டும். மேலும் தன் கணவனை இழந்த பெண் சுபகாரியங்களுக்கு முன்னுக்கு வரக் கூடாது போன்ற கருத்துக்களைக் கண்முன்னே காண முடிகின்றது. இவ்வாறு உள்ள எமது சமுதாயம் முழுமையான ஒரு திடமான சமுதாயமாக வருவதற்கு புரிந்துணர்வு வேண்டும்.

# மறைக்கப்படும் ஆளுமைகள்



பெண்கள் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்படுவதன் காரணமாக ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாது போகிறார்கள். அவர்களது ஆசைகள், சிந்தனைகள் மறுக்கப்படுகின்றன. வாழ்க்கை பற்றிய தேடுதல்களுக்கும், சுயதொழில் பற்றிச் சிந்திப்பதற்கும் முடியாமல் உள்ளது. மேலும் ஆக்கபூர்வமான ஆளுமைகள் இருந்தும் அவற்றை வெளிப்படுத்த முடியாத நிலையில் பெண்கள் இருக்கின்றார்கள். இதனால் இந்தப் பெண்கள் தங்களது ஆற்றல்கள், திறமைகள், உணர்வுகள், விருப்பங்கள் போற்றவற்றை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். இவற்றை வெளிப்படுத்த வேண்டும். நாளாந்தம் பெண்களுக்கு நடக்கும் பிரச்சினைகளை சமுகத்துக்கு உணர வைக்க வேண்டும்.

இவ்வாறு பெண்கள் இருப்பதற்குக் காரணம் பெண்களுக்கு நடக்கும் வன்முறைகளும், சமூகப் பார்வைகளுமே காரணமாகும். இது பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. மற்றும் பெண்களுக்குப் பல பழ மொழிகளைச் சொல்லி அடக்கி வைக்கும் நிலமைகளும் அன்று தொடக்கம் இன்றுவரை இருந்து வருகின்றது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, உனக்கேன் தனி வாழ்வு. இணைந்தே செயற்படு, ஒன்றிணைந்தே குரல் கொடு, ஓங்கிடும் உன் பலம், கலங்கிடாதே உன் காலங்கள் யாவும் காவியத்தில் முடியும். பலம் கொண்ட மாந்தர்க்கு பூமியிலே பயன் உண்டு. ஓங்கியே வளர்வாய். நன்மைகள் உனக்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?


## கள்ளின் விலை குறைப்பு; கித்துள் பனங்கட்டி கடைகளில்

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கோ, கீரிமலை நகுலேஸ்வரத் துக்கோ,நயினாதீவுக்கோ நீங்கள் போனால் அங்கே கச்சான் கடை களை விடக் கித்துள் பனங்கட்டி விற்கும் கடைகளே அதிக மாக இருப்பதைக் காணலாம். தென்னிலங் கையில் இருந்து வந்த சிங்களச் சகோதரர்கள் இவற்றை விற்பனை செய்து வருகின்றனர். அது போலவே மரத் தளபாடங்கள் முதல் உடுபுடைவைகள், கோழிக்குஞ்சுகள், பூங்கன்றுகள், பிளாஸ்ரிக் பொருள்கள் எனப் பலவற்றை தென்னி லங்கையில் இருந்து வரும் சிங்கள, முஸ் லிம், தமிழ்ச் சகோதரர்கள் விற்று வரு கின்றனர். அவர்களது முயற்சி பாராட்டப்பட வேண்டியது. பல சிரமங்களையும் தாண்டி அவர்கள் இந்தத் தொழில்களை மேற் கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் பனை வளஞ் செறிந்த பிரதேசம். பனைகள் கரிய பூதங்களாக அணிவகுத்து நிற்கும் நிலாக்கால இரவில் வல்லி புரக் கோவில் திருவிழா முடித்து வண்டிலில் வரும் தம் பதியி னரது ஊடலையும் கூடலையும் தனது வெள்ளிப் பாதசரம் சிறு கதையில் இலங்கையர் கோன் விபரிப்பார்.

தாலம் என்றும், பூலோக கற்பக தரு என்றும் அழைக்கப் படும் பனை வட புலத்துக்கே உரிய சிறப்பான அடையாளமாக விளங்குகிறது. அதனால்தான் வடபுலத்தை அடையாளப் படுத் தும் பல நிறுவனங்களின் இலச்சனையில் பனை மரம் இடம் பெற்றிருக்கிறது. பனை மர சோபனம், தால விலாசம் என்றெல் லாம் பனை மரம் இலக் கியங்களில் சிறப்பிக்கப்படுகிறது. பல வயல் நிலங்களின், வளவுகளின் எல்லையாகப் பனை மரங்கள் நின்றிருந்த காலம் ஒன்றிருந்தது.

மக்கள் தொகைப் பெருக்கம் நன்செய் நிலங்களை மட்டுமல்ல பனந்தோப்புக்களையும் அழித்து, அந்த இடங்களில் குடியிருப்புக் களை நிலைபெறச் செய்து விட்டது. முன்னைய நாள்களில் முழுவியளத்துக்குப் பனை நிற்பதைச் சமூகம் விரும்பியிருந்தது. ஆனால் இன்று பனைக்கான சமூக, வாழ்வியல் முக்கியத்துவம் அற்றுப் போய்விட்டது. குடியிருப்புத் தேவைக்காக மட்டு



மல்ல யுத்தகாலத்தில் பதுங்கு குழி களை அமைப்பதற்காக இலட்சக் கணக்கில் பனைமரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டன. இன்று இருக்கும் பனைகளைக் காக்கும் அதேவேளை தறிக்கப்பட்ட பனைகளுக்கான பதிலீ டாக மீள்நடுகை செய்யப்பட வேண் டும். பனை அபிவிருத்திச் சபை 5 இலட்



சம்பனம் விதைகளை மீள் நடுகை செய்யவுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. அது பாராட்டப்பட வேண்டியதே. பனம் விதை களை நடுவது மட்டும் போதாது. அவை வடலியாகும் வரை உரிய பராமரிப்புச் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு வருடமும் திணைக்களங்களால், உள்ளாட்சிச் சபைகளால் மயானம், ஆலயம், மைதானங்கள் போன்ற பொது இடங்களில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டு, பத்திரிகையில் படங்களும் வரும். ஆனால் அடுத்த ஆண்டில் பார்த்தால் பல விதைகள் முளைத் திராது. முளைத்தவையும் கால்நடைகளால் அழிக்கப்பட்டிருக் கும். அந்த நிலைவராமல் பாதுகாப்பது அவசியமாகும்.

இந்த ஆண்டு அரசாங்கம் எல்லாப் பொருள்களின் விலை யையும் உயரச் செய்து கின்னஸ் சாதனை நிலைநாட்டக் கங் கணம் கட்டிக் கொண்டு நிற்கிறது.பொருள்களின் விலையால் வாழ்க்கை எனும் பஸ்ஸைப் பிடிக்க முடியாமல் மக்கள் என்னும் பயணிகள் அல்லாடுகின்றனர். எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்து கொண்டே செல்கின்றன. ஆனால் கள் ளின் விலை மட்டும் குறைந்துள்ளதாகச் செய்தி வெளியிடப்பட் டுள்ளது. உற்பத்தியாகும். கள் அதிகம் சேர்ந்து கொள்வதாலேயே விலை இறங்குகிறது. சந்தையில் கள்ளுக்கான கேள்வியை விட நிரம்பல் அதிகரிக்கும் போது விலை குறைவது பொருளிய லில் இயற்கையானதுதான். ஆனால் கித்துள் பனங்கட்டி யைப் பார்க்கும் போதுதான் எமது பிரதேசத்தவர்களின் சோம்பேறித் தனமும், உற்பத்தி சார்ந்த புத்துருவாக்க சிந்தனையும் தொடர்பா கக் கேள்வி எழும்பு கிறது. அதிகளவான கள் உற்பத்தி இடம் பெறுகின்றதென்றால் அதனைப் பனங்கட்டியாகவோ, கல்லாக் காரமாகவோ (பனங்கற் கண்டு) ஆக்கக் கூடிய வல்லமை எமது பிரதேச பனை அபிவிருத்திச் சபைக்கோ, பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களுக்கோ இல்லையா? சீவல் தொழிலாளர்கள் தினமும் அபாயகரமான சூழலில், கரணம் தப்பினால் மர ணம் என்ற நிலையில் கஷ்டப்பட்டு இறக்கி வரும் கள்ளுக்கு விலை குறைப்புச் செய்வ தென்பது அவர்களது உழைப் பைக் குறைத்து மதிப்பிடும் செயலாகும். அந்தக் கள்ளில் இருந்து பயன் விளை விக்கும் உற்பத்திகளை மேற்கொள்வது பலருக்கும் வேலை வாய்ப்பை வழங்கும் என்பதோடு சீவல் தொழிலாளர்களின் வாழ்விலும் ஒளியேற்றும். அத்துடன் விலை மலிவால் அதிகம் கள்ளை மாந்தி விட்டு வரும் பிரகிருதிகளால் அல்லற்படும் குடும்பத் தலைவி யரும் வாழ்த்துவர். இனிப்பு வகைகளை உற்பத்தி செய் வோரே!

தென்னிலங்கையில் இருந்து கித்துள் பனங் கட்டியை யும், எள்ளையும் பயன்படுத்தி செய்யப்படும் சுவையான உணவுகளை உள்ளூர் பனங்கட்டியைப் பயன்படுத்தி நீங்கள் ஏன் செய்யக் கூடாது?

விழிச்சான் குஞ்சு.

# விருந்தோம்பல் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்

### விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 12

'பெண் புத்தி பின் புத்தி' என எல்லோரும் சொல்வார்கள். ஆனால் பெண் புத்தி என்பது 'பின்'னைப் (ஊசியைப்) போல கூர்மையானது என கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவித் தார்.

ஒரு ஆணுக்குப் பின்னால் இருந்து ஆணின் வெற்றிக்கு உந்து சக்தியாய் இருப்பது பெண்ணே என பெரியபுராணத்தில் இளை யான் குடிமாற நாயனார் பற்றிய கருத் தாடல் நிகழ்வு கடந்த புதன் கிழமை மு.ப 10 மணிக்கு நாவலர் மண்டபத்தில் முனைவர் மனோன் மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே விரிவுரையாளர் லலீசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

இன்று விருந்தோம்பல் என்பது அருகிப் போய்விட்டது. விருந்தி னரை வைத்துக்கொண்டு முகங் கோணாது பேசும் தந்திரத்தை விருந்தோம்பல் செய்பவன் கைக் கொள்ளப் பழகிவிட்டான். இத னால் எங்கள் பண்பாடு பின்னோக் கித் தள்ளப்படுகின்றது.

ஆனால் பெரிய புராணத்தில் இளையான்குடிமாற நாயனாரது வரலாற்றைப் பார்க்கும்போது பேதம் பார்க்காது நேரில் வருப வர்களுக்கெல்லாம் உணவுகொடுத்து, வருகின்ற விருந்தினரெல்லாம் சிவனடியார் என நினைத்து உணவு அளிக்கிறார். விருந்தினர்கள் உண்ட களைப்புத் தீர, ஆறி மன நிறை வோடு செல்கிறார்கள்.

ஒருநாள் இவரது விருந் தோம்பலைச் சோதிக்க விரும்பிய இறைவன் நள்ளிரவில் அதுவும் மாரிமழை கொட்டிக் கொண்டிருக் கும் பொழுதில், இளையான்குடி மாற நாயனாரது வீட்டுக்குச் சிவனடியார் வேடமிட்டு வருகி றார். அப்போது அவரை உள்ளே அழைத்து அமர வைக்கிறார்.

ஆனால், அவருக்குக் கொடுப் பதற்கு எதுவுமில்லை. மனம் வருந்தி நிற்கும் போது, அவரது மனைவி சொல்கிறார் 'கலங்காதீர்கள் வயலில் விதைத்த நெல் மழைக்கு வெள்ளத்தோடு மிதக்கும். அதை வடித்தெடுத்து வாருங்கள்' எனக் கூறினார், உடனே இளையான்குடி மாற நாயனார் அந்த அடைமழை கொட்டகடும்இருட்டில் தன் வயலை அடைந்து மழைநீரை வடித்து நெல் மணிகளை எடுத்து வந்து கொடுக்கிறார்.

வீட்டில் விறகு இல்லை. ஆனால் அவரது மனைவி கொஞ்சம் கூடத் தயங்காது வீட்டுக் கூரையைப் பிடுங்கி அடுப்பு மூட்டி, இன்னமுது படைத்து, வீட்டுக்குப் பின்னால் முளைத்திருந்த கீரையைப் பிடுங்கி பல வகை கறி சமைத்து சிவனடி யாருக்கு மகிழ்வோடும் அன்போடும் பரிமாறுகிறார்.

அந்த இல்லாமைக்குள் இருந்து கொண்டும் விருந்தோம்பலை மிகச் சிறப்பாகச் செய்து முடித்த இளை யான்குடிமாற நாயனாரும் அவர் துணைவியாரும் போல எல்லோரும் விருந்தோம்பல் பண்பை வளர்த்து எமது பண்பாட்டைப் பேண வேண்டும்.- என்றார். (எ-16)

# பெண்களுக்கான அமைப்புகள் பெண் உரிமையை வலியுறுத்தவும்

### ஆரம்பக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

எமது நாட்டில் பெண்களின் அர சியல் பிரவேசம் மிகவும் குறைவா கவே உள்ளது. தந்தைக்குப்பின் பிள்ளை, கணவனுக்குப் பின் மனைவி என்ற ரீதியில் உள்ள இந்த அரசியல் பிரவேசம் தவிர்ந்த பெண் களின் அரசியல் பிரவேசம் இடம் பெறவேண்டும் என மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல் விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை மகளிர் தினம் கடந்த வியாழக்கிழமை மாநகர சபையின் செயலாளர் திருமதி ருக் மணி சத்தியானந்தன் தலைமை யில் மாநகரசபை முதல்வர் மா நாட்டு மண்டபத்தில் நடைபெற் றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே செல்வி ஜெயா தம்பையா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

சர்வதேச பெண்கள் தினம் 1900 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து இடம்பெறுகின்றது. இதற்கு அடிப் படைக் காரணமாக இருந்தது இங்கி லாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியாகும். இந்தத் தினத்தில் உல கில் உள்ள பெண்கள் தங்களது திறமை களையும் சாதனைகளையும் பரப் புரைகளையும் கொண்டு தங்களது ஆளுமை, செயற்திறன் விவேகம் மூலமாக முன்னேற்றப் பாதையில் ஈடுபட்டு ஆண்களுக்குச் சளைத்த வர்கள் அல்ல என்ற நிலையில் இன்று வளர்ந்துள்ளனர்.

அவர்கள் உடலியல் சார்ந்த அல் லது பாலியல் ரீதியாக வன்முறை களுக்கு ஆளாவது எமது வாழ்வி யல் அன்றாட நிகழ்வுகளாகிவிட் டன. பெண்ணின் பெருமை பற்றிப் பேசும் இந்தியாவில் பெண்களுக் கான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஒவ்வொரு சமூகத்தையும் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணும் வீட்டிலோ வீதியிலோ வேலைத் தளத்திலோ ஏதோ ஒரு வகையில் வன்முறைக்கு உட்படுத் தப்படக் கூடும் என்ற அச்சத்துட னேயே இருக்கிறார்கள். சர்வதேச ரீதியில் பெண்கள் தினம் கொண் டாடப்பட்டபோதும் தொடர்ந்தும் அவர்கள் அழுத்தங்கள், பாதிப்புக்கள் எனப் பல்வேறு அச்சுறுத்தல்களுக் கும், ஆணாதிக்கத்துக்கும் உட் படுத்தப்பட்டவர்களாகவே இருக் கின்றார்கள் என்பது ஏற்றுக் கொள் ளப்பட வேண்டும். பெண்களுக் கான அமைப்புக்கள் பெண்ணு ரிமைக்காக மேலும் இறுக்கமாகக் குரல் கொடுக்க வேண்டும்.

(எ-7)

# விருது வழங்கல்



யாழ்ப்பாணம்,மார்ச் 12

கிராமிய சமூக மட்டங்களில் பெண் களின் வன்முறைக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத் தமைக்காகவும் பெண்கள் செயற் பாட்டாளராகப் பணிபுரிந்தமைக் காகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி ரஜனி சந்திரசேகரத்துக்கு Bernadeen Silva Memorial விருது வழங்கப்படவுள்ளது.

கொழும்பில் நாளை நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் விருதி னைப் பெண்களுக்கான கல்வி மற் றும் ஆய்வு நிறுவனம் வழங்கவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# வினைத்திறனுடன் சுப்பிரமணிய வித்தி.

### அதிபர் கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 12

வட்டுக்கோட்டை சுப்பிர மணிய வித்தியாசாலை முழுவீச் சுடனும், வினைத்திறனுடனும் செயற்பட பாடசாலைச் சமூகம் தன் பங்களிப்பை வழங்குகின் றது என்று அதிபர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து மேலும் தெரிவித்ததா வது:

புதிய கல்விமுறை அறி முகப்படுத்தப்பட்ட காலத்தில் அது பற்றி நடந்த கருத்தரங்கில் பாடசாலை அபிவிருத்திச் சபை பெற்றோர், பழைய மாணவர்கள், சமூக அமைப்புகள் பங்களிப்புச் செய்வார்கள். அவர்களின் பங்களிப்பைப் பாடசாலை பெற வேண் டும் எனும் கருத்து முன்வைக்கப் பட்டது.

அதற்கு அமைவாக எமது பாட சாலையின் விளையாட்டு நிகழ்வு வெற்றிபெற மாதர் சங்கத்தினர், நலன் விரும்பிகள், பழைய மாண வர்கள் அனைவருமே உதவியுள்ள னர்.

பாடசாலையின் வினைத் திற னுடனான செயற்பாட்டுக்கு கணி னியின் தேவை பற்றி ஓய்வு பெற்ற சங்கரத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபர் யோகேஸ்வர னுடன் பேசிய போது, அவர் மிகக் குறுகிய காலத்தில் பாடசாலைக்கு கணினியைப் பெற்றுத் தந்தார்.

இவ்வாறாக பாடசாலை யின் வளர்ச்சிக்கு எல்லோரது ஒத் துழைப் பும் கிடைக்கிறது-என்றார். (ம-16)

# நிர்வாக உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 12

உடுப்பிட்டி பலநோக்குக் கூட் டுறவுச் சங்கத்தின் 30 கிளைகளின் கிளைக்குழுத் தெரிவு நடைபெற்றது. இந்தக் கிளைக் குழு மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக் கான விசேட பொதுச்சபைக் கூட் டம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவ நாதன் தலைமையில், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இதில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் விவரம்:

தலைவர் - க.நாகலிங்கம், உபதலைவர் - சி.தெய்வேந்திரம், நிர்வாக உறுப்பினர்களாக க.கணேஷ மூர்த்தி, போ.இராமலிங்கமூர்த்தி, சி.அருணகிரிராசா, இ.பிரதீபன், திருமதி வ.சர்மிலா.

(எ-13)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா போன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இனி நிதானம் அவசியம்

ஜெனிவாவில் இலங்கை அரசு மீதான தீர்மானம் வாக்களிக்கும் நிலை நோக்கி விரைவில் நகர்ந்து வருகையில், அதனை எதிர்ப்பதில் அரசு அவசரப்படவில்லை என்ற செய்தியை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டுள்ளார். அமெரிக்கா முன்மொழிந்துள்ள பிரேரணையை ஜனாதிபதி கவர்ந்து ஆராய்ந்து வருகிறார் என்றும் பொறுமையுடன் அதனை அணுகி விடயத்தை வெற்றி பெறுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்று, கடந்த வாரம் வரையில் இலங்கை அரசு வெளிப்படுத்தி வந்த முழக்கங்கள், கொக்கரிப்புக்கள், சூளுரைப்புக்கள் எல்லாவற்றுக்கும் மாறானது. தீர்மானத்துக்கான பிரேரணை அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இலங்கை அரசு அடக்கி வாசிக்க ஆரம்பித்து விட்டதையே அமைச்சர் பீரிஸின் கருத்து வெளிப்படுத்துகிறது.

அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மான வரைவு இலங்கை அரசை நேரடியாக எந்த வகையிலும் குற்றஞ்சாட்டவில்லை என்ற போதும், தண்டிக்கும் போக்கைக் கொண்டிராதபோதும் இலங்கை அரசு தனது அடாவடிப்போக்கைக் கைவிட்டு நிலைமையை நிதானமாக அணுக ஆரம்பித்திருக்கிறது.

அதற்குக் காரணம், இந்தத் தீர்மான வரைவு நிறைவேறினால் இலங்கையின் இனப் பிரச்சினை விடயத்தில் மூன்றாம் தரப்பு ஒன்று உத்தியோகபூர்வமாகத் தலையிடுவதற்கான முதல் அடி எடுத்து வைக்கப்பட்டுவிடும் என்பதே. அமெரிக்காவின் பிரேரணை இலங்கை அரசிடம் இருந்து நேரடியாக எந்த விதமான உறுதி மொழிகளையும் கேட்காதபோதும், முன்னர் எதிர்பார்க்கப்பட்டதுபோன்று 'நடவடிக்கைத் திட்டம்' ஒன்றைக் கோரி நிற்காதபோதும், இலங்கை அரசின் நல்லிணக்கச் செயற்பாடு மற்றும் பொறுப்புக் கூறல் செயற்பாடுகளுக்கான உத்தியோகபூர்வ கண்காணிப்பாளராக ஐ.நா.வை நியமிக்க வழி ஏற்படுத்துகிறது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இது தர்மசங்கடமான நிலைமை. இதுவரை காலமும் இலங்கை அரசு நடத்திய விசாரணைகள் மற்றும் நியமித்த ஆணைக்குழுக்கள் அனைத்தும் வெறும் கண்துடைப்பு நாடகங்களாகவே இருந்தன. இவற்றின் நம்பகத்தன்மை குறித்தும் தர நியமங்கள் குறித்தும் கேள்வி எழுப்புவதற்கோ சரி பிழை கூறுவதற்கோ சரி எவரும் இருக்கவில்லை. இலங்கை அரசு விரும்பியபடியே அவை அரங்கேறின. பல விசாரணை அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவும் இல்லை நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை.

ஐ.நா. தீர்மானம் நிறைவேறினால் அரசால் இத்தகைய போக்கில் செயற்பட முடியாது போகும். ஒவ்வொரு விடயத்திலும் இலங்கை அரசு எப்படி நடந்து கொள்கிறது என்பதை ஐ.நா. மனித உரிமைகள் சபை தொடர்ச்சியாகக் கண்காணித்து, ஒரு வருடத்தின் பின்னர் உலகுக்கு வெளிப்படுத்தும்.

இதுவரை தமிழ் மக்களையும் அவர்களின் கோரிக்கைகளையும் புறம்தள்ளி ஏமாற்றியது போன்றோ, முதலில் இணங்கிவிட்டு பின்னர் அதனை நடைமுறைப்படுத்தாமல் விடுவது போன்றோ அரசால் செயற்பட முடியாது போகும். அப்படிச் செயற்பட்டால் அது உலகுக்குப் பகிரங்கப்படுத்தப்படும். அப்படி ஒரு நிலை ஏற்படும் போது நிலைமை மேலும் சிக்கலாகி இந்த ஆட்சியும் ஆட்சியாளர்களும் தூக்கிவீசப்படும் நிலை தோன்றும்.

எனவே இப்போது முதல் அரசு எல்லா விடயங்களையும் நிதானமாகவும் உண்மையாகவும் கையாண்டாகவேண்டும். அதற்கான முதல் வெளிப்பாடாகப் பீரிஸின் செய்தியை எடுத்துக்கொள்ள முடியும் என நம்பலாம்.

# தீர்மானம் நிறைவேறினால் இலங்கையை ஒரு வருட காலம் பேரவை மேற்பார்வை செய்யும்

தொகுப்பு: கோகுலன்

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்த 52 பேர் கொண்ட இலங்கை பேராளர் குழுவின் இலங்கை வரவையடுத்து இலங்கைக்கு பேரதிர்ச்சி தரும் செய்தியொன்று ஜெனிவாவிலுள்ள இலங்கை நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகத்திடமிருந்து வந்தது.

அமெரிக்கா அங்கு ஆச்சரியம் ஒன்றை நிகழ்த்தியிருந்தது. அமெரிக்காவின் ஆதரவில் தயாரிக்கப்பட்டிருந்த இலங்கை தொடர்பான அதிகார பூர்வமான தீர்மானம், பேரவை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதற்காக புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

இலங்கைத் தூதுக் குழுவினருக்கு இது அதிர்ச்சியும், ஆச்சரியமும் அளிப்பதாக இருந்துள்ளது. இலங்கைக் குழுவினர் தமக்கு சுற்றிலும் இடம்பெறும் விடயங்களில் எவ்வளவு பரிச்சயமில்லாமல் இருக்கிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. அடுத்த நாள் வியாழக்கிழமையன்று மனித உரிமைகள் பேரவையின் அமெரிக்க தூதுவர் எய்லின் சாம்பர்லேன் டொனாஹூ பூர்வாங்கமற்ற ஆலோசனைக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்துக்கு ஜெனிவாவிலுள்ள தூதரகங்கள் மற்றும் மனித உரிமைகள் சபை பேராளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அதன் காரணமாக அமைச்சரவை சட்ட ஆலோசகர் மொஹான் பீரிஸ் புதன்கிழமையே அவசரமாக விமானம் ஏறி ஜெனிவாவுக்கு புறப்பட்டார்.

அடுத்த நாள் கூட்டத்தில் அவர் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஷவேந்திர பெர்னாண்டோவுடன் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதற்காக தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை, கூட்டத்தில் அமெரிக்கத் தூதுவர் டொனாஹூ அறிவித்தார். தீர்மானத்தை ஆதரிக்க விரும்பும் நாடுகள் தமது மேசையிலிருக்கும் படிவத்தில் கையெழுத்திட்டு வழங்கும் படி அவர் கேட்டுக் கொண்டார். எத்தனை நாடுகள் ஆதரித்து கையெழுத்திட்டன என்பது தெரியவில்லை. ஆனால் பல நாடுகள் ஏற்கனவே ஆதரித்து கையெழுத்திட்டிருப்பதாக ஜெனிவாவிலுள்ள ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் அவசரமாக சில அமைச்சர்கள், எம்.பி.க்கள் மற்றும் அதிகாரிகளை ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது. பேரவையின் மிக முக்கிய ஆலோசனைகளின் பின்னர் அநேக நாடுகளின் பேராளர் குழுக்கள் தமது நாடுகளுக்குத் திரும்பி விட்ட நிலையில், இவர்கள் அங்கே செல்கிறார்கள். இவர்கள் சென்று அங்கே யாருடன் ஆலோசனைகளில் கலப்பார்கள் என்று தான் தெரியவில்லை.

டொனாஹூ அம்மையார் தமது ஆரம்ப உரையில், எல்லாப் பிராந்தியங்களில் இருந்தும் வந்த பேராளர் குழுக்களுடன் நாங்கள் ஆலோசனைகள் நடத்தினோம், அவர்கள் தெரிவித்த பெறுமதியான ஆலோசனைகளும் வரைவு தீர்மானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஒரு மிதமான, நியாயமான மற்றும் சமாந்தரமான தீர்மான வரைவு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளோம். மனித உரிமைகள் பேரவையில் மேற்கொண்டும் விவாதங்கள் நடத்தவும் மனித உரிமைகள் பேரவையிலுள்ள எமது பங்காளிநாடுகளுடன் கலந்துரையாடவும் இந்தத் தீர்மானம் அடிப்படையாக இருக்கும் என்று தெரிவித்தார். [illegible] அரசுடன் [illegible] ழைத்து வந்திருப்பது போல் இந்தத் தீர்மானத்தின் மீதும், மீள் நல்லிணக்கம் பொறுப்புக் கூறல் தொடர்பாகவும் விரிவான முறையில் ஒத்துழைக்க விரும்புகின்றோம் என்று அவர் மேலும் கூறினார்.

### கண்டிப்பது நோக்கமல்ல

இந்தத் தீர்மானத்தின் நோக்கம் கண்டிப்பது அன்று. உண்மையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தீர்மானம் வரவேற்கின்றது. அந்தக் குழு ஆக்கபூர்வமான பல ஆலோசனைகளை இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது. இருந்த போதிலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு நம்பகமான செயல் திட்டம் எதையும் இலங்கை அரசு இதுவரை உருவாக்கவுமில்லை, போர் முடிவடைந்ததன் பின்னர் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப மேலதிக நடவடிக்கை எதனையும் எடுக்கவுமில்லை என்று வெளிநாட்டிலும் உள்நாட்டிலுமுள்ள அவதானிகள் வெளியிடும் கருத்துக்களை நாங்களும் பகிர்ந்து கொள்கின்றோம் என்றார் அமெரிக்க தூதுவர்.

எமது நோக்கம் தெளிவாக இருக்கிறது. நீண்ட கால மோதல்களின் பின்னர், தமிழ் மக்களுக்கு இதய சுத்தியுடன் நேசக்கரம் நீட்டி இலங்கையின் தேசிய வாழ்வில் அவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளவும் போரின் இறுதிக்கட்ட செயற்பாடுகளுக்கு பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை உறுதி செய்யும் படியாக இலங்கை அரசை ஊக்கப்படுத்துவதில் உலக நாடுகளை எம்முடன் இணைந்து கொள்ளும் படியே கேட்டுக் கொள்கின்றோம் என்றார் அவர். அமெரிக்கத் தூதுவர் மேலும் கூறுகையில்:-

இலங்கை மக்களுக்கான கால அவகாசம் நழுவிச் சென்று கொண்டிருக்கிறது. அந்தத் தீவில் நிலைத்து நிற்பதற்கான அமைதியை ஏற்படுத்துவதற்காக பணி புரிவதற்கு இலங்கை அரசுடன் இணைந்து செயலாற்ற சர்வதேச நாடுகளை இணைத்துக் கொண்டு பணியாற்ற நாம் விரும்புகின்றோம். இந்தச் சபையில் இப்பொழுது எடுக்கப்படும் நடவடிக்கையானது இலங்கை நாட்டில் எடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச சமூகத்தின் கரிசனைகளை பிரதிபலிப்பதாக இருக்கின்றது என்று நாம் உறுதியாக நம்புகிறோம். இலங்கை மண்ணில் நிலையான அமைதிக்கான விதைகள் தூவப்பட வேண்டும் என்ற எமது கருத்தை சர்வதேச மற்றும் உள்நாட்டு அவதானிகளும் பிரதிபலித்திருக் கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் மூலம் உலக நாடுகள் எல்லா மக்களுக்கும் உதவக் கூடியதான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார்.

டொனாஹூ அம்மையாருடன் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்திலிருந்து விசேஷமாக வந்திருந்த அதிகாரி அட்குல் கெஷாப்பும் அமர்ந்திருந்தார். இவர் தென்னாசிய நாடுகள் பலவற்றுக்கான பிரிவின் பணிப்பாளராவார். அப்பிரிவுக்கு தலைமை வகிப்பவரான உதவிச் செயலர் றொபேர்ட்டோ பிளேக்கிற்கு இவர் நேரடியாக தமது அறிக்கைகளை வழங்குவார். ஜெனிவாவுக்கான அமெரிக்க ராஜதந்திர ஆணையத்தின் அரசியல் விவகார பொறுப்பாளர் மிரியம் ஷாஹார்சாத் ஸ்சிவ்டிம் உடன் இருந்தார்.

கெஷாப் சில வார்த்தைகளைத் தெரிவித்த போது; பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இலங்கைக்கு அமெரிக்காவும் உதவி புரிந்துள்ளது என்றார். பிரச்சினையை அணுகுவதில் இலங்கை அரசு நடைமுறைக்கு ஏற்றாற் போல் நடந்து கொள்ளவில்லையென்று அவர் குற்றஞ்சாட்டினார். உதவிச் செயலர் பிளேக் இலங்கையில் தூதுவராக இருந்துள்ளமையால் இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக, அவருக்கு சொந்த முறையில் அனுபவங்கள் உண்டு என்பதை கெஷாப் நினைவு படுத்தினார். அதன் பின்னர் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்து அரசதலைவர்கள், எதிர்க்கட்களுடனும் மற்றும் சிவில் சமூகங்களுடனும் கலந்துரையாடியுள்ளார் என்று அவர் நினைவூட்டினார். பிளேக்கிற்கு இலங்கையின் பின்புல உண்மைகள் நன்றாகத் தெரியும் என்றும் குறிப்பிட்டார். கூட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு மூன்று நிமிடங்கள் கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

இலங்கை அமைச்சர் பீரிஸ் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கையின் நிலைப்பாட்டை பலமாக ஆதரித்துப் பேசினார். மேற்கு நாடுகள் இரட்டை நிலைப்பாட்டை அனுஷ்டிப்பதாகக் குற்றஞ்சாட்டினார். இலங்கை நாடு ஏன் தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று வினவினார். அவருக்களிக்கப்பட்ட நேரம் முடிவடைந்ததால், தீர்மானம் இலங்கை தொடர்பானது என்பதால் அதிக நேரம் தேவையென்று வாதிட்டார். 25 பேராளர்கள் பேசியதன் பின்னர் இன்னும் நேரம் இருந்தமையால் பீரிஸ் பேசும் படி அழைக்கப்பட்டார்.

ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் பிரசன்னமாய் இருந்த போதிலும் உரை ஏதும் நிகழ்த்தவில்லை.

இந்திய பிரதிநிதிகள் வந்திருந்த போதிலும் கருத்துக் கூறவில்லை.

பங்குபற்றிய சில நாடுகளின் பிரதிநிதிகள் கூறியவற்றின் சுருக்கம்.

**இந்தோனேசியா:-** (வாக்களிக்கும் உரிமை உள்ளது) இலங்கைக்கு கால அவ

(15 ஆம் பக்கம் பார்க்க)

## மீள் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்க அவகாசம்

11.03.2012 அன்று சண்டேரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி

“அர்த்தமுள்ளதும் நீடித்து நிலைக்கக் கூடியதுமான நல்லிணக்க ஏற்பாடுகளைச் செய்வதுடன் தமிழ் இனமக்களுக்கு நேசக்கரம் நீட்டி தேசிய பொது வாழ்வில் அவர்களை மீளவும் இணைத்துக் கொள்ள இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து போரின் இறுதியில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு பொறுப்புக் கூறவும் வேண்டும்'' – அமெரிக்காவின் எதிர்பார்ப்பு இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடு

மாவட்ட உதவிப் பணிப்பாளர்,
அனர்த்த முகாமைத்துவ
இணைப்பு அலகு, மாவட்ட
செயலகம், யாழ்ப்பாணம்

“ தெரியாததைத் தெரிந்து கொள்வதும் தவறுகளைத் திருத்திக் கொள்வதும் குறிப்பாக பிரதேசம்சார் திறன்களின் அறிவும் அதனை பிரயோகிக்க கூடிய இயலுமை கொண்ட சமூகத்தை கட்டியெழுப்புவதினூடாகவே நிலையான அனர்த்தங்களிலும் இடர்களிலுமிருந்து விடுபட்ட ஓர் சமுதாயத்தை உருவாக்க முடியும்

கடந்த 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இலங்கையின் கரையோரங்களில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மருதங்கேணி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரையோரப் பகுதிகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு 2005 ஆம் ஆண்டு வைகாசி மாதம் அமைச்சரவை அங்கீரத்துடன் அனர்த்த முகாமைத்துவத்துக்கான ஓர் நிறுவன ஒழுங்கமைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையானது நாட்டின் ஜனாதிபதியை தலைவராக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் வழிப்படுத்தல் நெறிபடுத்தல்களின் கீழ் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் அதன் ஓர் அங்கமாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் இலங்கையின் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் பிரதானமாக அவசர நிலை, அனர்த்த தணிப்பு, அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு தேசிய மட்ட நிறுவன ஒழுங்கமைப்பு மட்டுமன்றி மாவட்ட மட்டத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு தனது செயற்பாடுகளை அனைத்து பங்குதாரர்களின் அனுசரணை, ஆலோசனை, ஒத்துழைப்பு போன்றவற்றுடன் மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களை நினைவு கூரும் முகமாக ஒவ்வொரு வருடமும் மார்கழி 26 ஆம் திகதியை இலங்கையில் தேசிய பாதுகாப்பு தினமாக நினைவு கூரப்பட்டு வருகின்றது.

மாவட்ட மட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் நோக்கில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு அரச அதிபரைத் தலைவராகக் கொள்வதுடன் அனைத்து உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்பு படையினர் போன்றோரை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இதே போன்று பிரதேச மட்டத்தில் பிரதேச அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி சபை தலைவர்கள், செய்லாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களை உள்ளடக்கியுள்ளது.

சமூக மட்டத்தில் சமூக மட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவானது சமூகமட்ட அமைப்புக்களின் உறுப்பினர்களை உள்ளடக்கி ஐந்து பிரதான குழுக்களாக இணைந்து செயற்படக் கூடிய பொறிமுறையானது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் மாவட்ட, பிரதேச, கிராமிய மட்டத்தில் அமைக்கப்பட்டு அனர்த்த குறைப்பு, தணிப்பு அது மட்டுமன்றி அனைத்து பங்குதாரரும் இணைந்து முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளல் அவசர நிலைமைகளில் இணைந்து செயற்படுதல் போன்ற சிறந்த பொறிமுறைகளைக் கொண்டிருக்கின்றது. இது மட்டுமன்றி நோய் பரவல், நீரில் மூழ்குதல் போன்ற ஆபத்துக்களையும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை உரியவர்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் டெங்கு மற்றும் புதிய நோயான தைபஸ் எனும் நோய் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கு அனைவரும் இணைந்து செயற்படல் அத்தியாவசியமாகவுள்ளது.

அதேபோன்று வெள்ளம், சூறாவளி, புயல் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் வழங்கக் கூடிய வகையில் திருநெல்வேலியில் யாழ். மாவட்டத்திற்கான வானிலை அவதான நிலையம் அமைந்துள்ளது.

இதேபோன்று பாடசாலை மட்டத்தில் அனர்த்த பாதுகாப்பு கல்வியை மேற்கொள்ளும் நோக்கில் சர்வதேச நிறுவனங்களில் ஒன்றான GIZ ஆனது DMC இன் ஆலோசனைக்கு அமைவாக பல செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இது மட்டுமன்றி World Vision, Care, ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம்,(UNDP) Caritas, IOM போன்ற சர்வதேச நிறுவனங்களும் SLRC, SOND, TRRO, JSAC, INSGD, HUDEC போன்ற உள்ளூர் அமைப்புக்களும் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளுள் சுனாமிக்கான முன்னாயத்த நடவடிக்கையாக சுனாமி ஒத்திகை, பாசாங்கு நடவடிக்கைகளை சுப்பர் மடம், கட்டைக்காடு, உடுத்துறை, வல்வெட்டித்துறை வடமத்தி, வல்வெட்டித்துறை வடகிழக்கு, பருத்தித்துறை முனைப்பகுதி போன்றவற்றில் மேற்கொண்டுள்ளனர்.

சுனாமி முன்னெச்சரிக்கை செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள் வல்வெட்டித்துறையில் சிதம்பராக் கல்லூரிக்கு முன்பாகவும் மணற்காட்டில் மணற்காடு மகாவித்தியாலத்துக்கு அருகாமையிலும், ஆழியவளையில் ஆழியவளை மீனவர் ஓய்வு அறை அமைந்திருக்கும் இடத்திலும் நெடுந்தீவில் றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியிலும் அமைந்துள்ளன. இவை அனைத்தும் சூரிய மின் கலத்தின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டு தற்போது இயங்கும் நிலையிலுள்ளன. அதே வேளை பருத்தித்துறை சுப்பர் மடத்தில் அமைந்துள்ள சுனாமி எச்சரிக்கை கோபுரம் பழுதடைந்துள்ளமையால் அதனை மீள் ஸ்தாபனம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி நிறுவனங்கள், ஐந்து கல்வி வலயங்கள், விரைவில் பாதிப்படையக் கூடிய கிராமங்கள், பிரதேச செயலகங்கள், சுகாதார திணைக்களம் போன்றவற்றுக்கு அவசர நிலையில் முன்னெச்சரிக்கை செய்திகளை சகல மட்டங்களிலும் அறியப்படுத்தும் நோக்கிலும் முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக திசைநோக்கு ஒலிபரப்பிகள் (Megaphone) வழங்கப்பட்டுள்ளன. இதே போன்று வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளை (Flood Mitigation) மேற்கொள்ளும் முகமாக கோப்பாய், மருதங்கேணி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் வெள்ள நீர் தணிப்பு அணைகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ். மாவட்டத்துக்கான அனர்த்த முகாமைத்துவச் செயற்பாட்டுக்கான தூர இலக்கை அடையும் நோக்கில் கிராமிய மட்ட இடர் வரைபடம் (CBHM), மற்றும் வள வரைபடம் (Resource Map) தயாரித்தலும் அதனூடாக கிராமிய மட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை பெற்றுக் கொள்ளலும் அவ்வாறு பெறப்படுகின்ற கிராமிய மட்டத்தில் அடையாளம் காணப்படுகின்ற இடர்கள், வளவாய்ப்புக்களின் அடிப்படையில் பிரதேச மட்டத்திலான மாதிரிகளையும் திட்டத்தை தயாரிப்பதுடன் இந்த ஒருங்கிணைந்த செயன் முறையூடாக மாவட்டத்துக்கான அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயார்படுத்துவதுடன் அதன் முன்னுரிமைப்படுத்தப்பட்ட முறையூடாக வீண் செலவினங்கள், இழப்புக்கள், ஆபத்துக்களை தவிர்த்தல், தணித்தல், குறைத்தல் போன்றவற்றை இலகு முறையில் மேற்கொள்ளும் போது நிலையானதும் பாதுகாப்பானதும் ஓர் சமுதாயத்தை கட்டி எழுப்புவதனூடாக நாட்டின் முன்னேற்றத்தில் பங்கெடுக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.

குறிப்பாகக் கிராமிய, பிரதேச மட்ட திட்டத் தயாரித்தல் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 435 கிராம சேவையாளர் பிரிவு, 15 பிரதேச செயலகங்களுக்கும் போட்டியினூடாக பூரணப்படுத்தப்பட்ட பிரச்சினைகளை அடையாளம் கண்டு இடஞ்சார், பண்புசார் தகவல்களை வினைத் திறனுடனும், சமூக மட்ட பங்குதாரர்களின் ஒத்துழைப்புடனும் பெறக்கூடியதான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கீழிருந்து மேல் நோக்கிய திட்டமிடற் செயற்பாட்டு அணுகுமுறையுடாக மேற்கொள்வதால் ஓர் சிறந்த பெறுபேற்றை பெற்று திறமையான அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவும் என்பதில் ஐயமில்லை. அது மட்டுமன்றி யாழ். மாவட்டத்துக்கான இடஞ்சார் இடஞ்சாரா / பண்பு சார் தகவல்களை ஒருங்கிணைத்து புவியியல் தகவல் ஒழுங்கு தரவுத் தளத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது.

ஓர் திறன் வாய்ந்த அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனுடனும் மேற்கொள்ள வேண்டுமாயின் நேர்த்தியான மனப்பாங்கும் திறன்களில் தெளிவும் அத்தியவசியமாகவுள்ளன. அது மட்டுமன்றி தெரியாததைத் தெரிந்து கொள்வதும் தவறுகளைத் திருத்திக் கொள்வதும் குறிப்பாக பிரதேசம்சார் திறன்களின் அறிவும் அதனை பிரயோகிக்க கூடிய இயலுமை கொண்ட சமூகத்தை கட்டியெழுப்புவதினூடாகவே நிலையான அனர்த்தங்களிலும் இடர்களிலுமிருந்து விடுபட்ட ஓர் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இந்த ஒருங்கிணைந்த செயற்திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு அரச அதிபர், மேலதிக அரச அதிபர், மாவட்டத் திட்டமிடற் செயலக உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், சகல திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்பு படையினர், பிரதேச செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள், மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினர் போன்றோரின் ஆலோசனையும் ஒத்துழைப்பும் வழங்கப்பட்டு வருகின்றது.

அதற்கு அமைவாக போட்டிகள் பாடசாலை, கிராமிய, பிரதேச மட்ட ரீதியான மூன்று படிமுறைகளை உள்ளடக்கியதாகவும் இவை மூன்றையும் ஒருங்கிணைத்து விழிப்பூட்டல், திறன் வளர்த்தல், அறிவூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகங்கள் ஒருங்கிணைந்த முறையில் மாவட்ட ரீதியில் விழிப்புணர்வூட்டும் செயற்பாட்டையும் மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலை மட்ட போட்டியானது யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உயர் தர வகுப்பில் கல்வி கற்கும் சகதுறை மாணவர்களும் பங்குபற்றக் கூடிய வகையில் வடி

(22 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்மானம் நிறைவேறினால் இலங்கையை ஒரு வருட காலம் பேரவை மேற்பார்வை செய்யும்

(14 பக்கத் தொடர்ச்சி)

காசம் வழங்கப்பட வேண்டும். உள் ளூரில் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுக்கு அவகாசம் தர வேண்டும்.

**ஆஸ்ட்ரியா:-** (வாக்களிக்கும் உறுப்புரிமை உண்டு) சர்வதேசசமூகத்துடன் இணைந்து செயற்படாமல் இருக்க இலங்கை விரும்புவது துரதிஷ்டமாகும்.

**டென்மார்க்:-** (ஐரோப்பிய யூனியன் சார்பில்) அமெரிக்க தீர்மானம் மிதமானது, சமாந்தரமானது, நியாயமானது நாம் வரவேற்கின்றோம்.

**பாகிஸ்தான்:-** இலங்கைக்கு அவகாசம் கொடுக்கப்பட வேண்டும்.

**பிரான்ஸ்:-** தீர்மானத்தை பலமாக ஆதரிக்கிறோம். ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையையும் பரிசீலிக்கும் படி சபையைக் கோருகின்றோம்.

**ரஷ்யா:-** (வாக்களிக்கும் உறுப்பு நாடு) இறைமையுள்ள ஒரு நாட்டின் விவகாரத்தில் வெளியார் தலையிடும் செயலாகும் இது.

**சுவிட்சர்லாந்து:-** (வாக்களிக்கும் உரிமை உள்ளது) தீர்மானத்தைக் கொண்டு வந்தமைக்காக அமெரிக்காவுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். எந்த உணர்வுடன் முன்வைக்கப்படுகிறதோ அந்த உணர்வுடன் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**நோர்வே:-** (வாக்களிக்கும் உறுப்புரிமை உண்டு) தீர்மானத்தை வரவேற்று ஆதரிக்கிறோம். ஆலோசித்து செயற்படும் உணர்வுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கை இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**சீனா:-** (வாக்களிக்கும் உறுப்புரிமை உண்டு) அமெரிக்கா இரட்டை நிலை கொண்டுள்ளது. குறிப்பிட்ட காரணங்களுக்காக நாம் ஆதரிக்கவில்லை.

**கியூபா:-** 20 ஆண்டுகளுக்கு முன் கியூபாவுக்கு எதிராக ஒரு தீர்மானம் வந்தும் ஒன்றும் நடக்கவில்லை.

**ஹங்கேரி:-** (வாக்களிக்கும் நாடு) அரசு சாரா நிறுவனங்கள் அச்சுறுத்தப்படுவது குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம். அது இன்றும் தொடர்கின்றது. முழுமையாக ஆதரிக்கின்றோம்.

**போலந்து:-** (வாக்களிக்கும் நாடு) தீர்மானத்தை [illegible] பூரணமாக [illegible]

**எகிப்து:-** (அணிசேரா நாடுகள் சார்பில்) பலமாக எதிர்க்கிறோம். அணிசேரா நாடுகளின் அறிக்கை வாசிக்கப்பட்டது.

**சுவீடன்:-** வாசகம் சமாந்தரமானதும் பொருந்தமானதும் கூட.

**ஆஸ்திரேலியா:-** நியாயமானது ஆக்கபூர்வமானது.

**தாய்லாந்து:-** (வாக்களிக்கும் நாடு) தீர்மானம் தேவையில்லை.

**பிலிப்பைன்ஸ்:-** (வாக்களிக்கும் நாடு) அணிசேரா நாடுகளின் நிலைப்பாட்டை ஆதரித்து நிற்கின்றோம்.

**ஐக்கிய ராஜ்ஜியம்:-** காலத் [illegible] ஆக்கபூர்வமானது. ஐ.நா.நிபுணர்குழு அறிக்கையும் ஆலோசிக்கப்பட வேண்டும்.

**அல்ஜீரியா:-** இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்க வேண்டும்.

**இந்தோனேஷியா:-** (வாக்களிக்கும் நாடு) இலங்கைக்கு அவகாசம் கொடுக்க வேண்டும்.

**சிம்பாப்வே:-** அணிசேரா நாடுகளின் நிலைப்பாட்டை ஆதரிக்கிறோம்.

**ஜேர்மனி:-** தீர்மானம் முக்கியமானது நிலைத்து நிற்கக் கூடியது.

**போர்த்துக்கல்:-** தீர்மானத்தை வரவேற்கின்றோம்.

தீர்மானத்தின் இறுதிவடிவில் இறுக்கமான சொற்பதங்கள் நீக்கப்பட்டுள்ளன.

தீர்மானம் பேரவையில் நிறைவேறும் பட்சத்தில், இலங்கை அரசுக்கு மனித உரிமைகள் உயர் ஸ்தானிக ஆலோசனைகள் வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்படும். அதன் மீது அடுத்த வருடம் மார்ச்சில் அல்லது ஒரு வருட காலத்தில் பேரவையின் 22ஆவது மாநாடு நடைபெறும் சமயத்தில் தமது அறிக்கையை வழங்கும்படி கட்டளையிடப்படுவார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால்,

✱ இலங்கை அரசாங்கம் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றை செயற்படுத்துகின்றதா?

✱ மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதை மனித உரிமை பேரவையின் ஆணையாளர் பணியகம் அறிந்து பேரவைக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளக்கப்படும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகு வலி

" முதுகு வலிக்கின்றது; என்ன செய்யலாம்?" என்று கேட்டார் ஒருவர்.

" முதுகு என்று ஒன்று இருந்தால் முதுகு வலி என்றும் ஒன்று இருக்கத்தான் செய்யும். அதற்குப் போய் கவலைப் பட்டுக் கொண்டிருக்க முடியாது, அதை விட்டு விடுங்கள்" என்றார் இன்னொருத்தர்.

இவருக்கு என்ன? சுகமாகச் சொல்லிவிட்டுப் போகிறார். வலிப்பது அவரவருக்கு வந்தால்தான் அதனுடைய அவஸ்தை புரியும்.

இந்த முதுகு வலி சாதாரணமாக நடுத்தர வயதில் உள்ளவர்களுக்குத்தான் அதிகமாக வருகிறது.அதேபோன்று வயதானவர்களுக்கும் வருகிறது.

இது ஏன் வருகின்றது? எப்படி வருகின்றது?

இதைப்பற்றி நடத்தப்பட்ட ஓர் ஆராய்ச்சியில்

முதுகு வலிக்கும்- காலுக்கும் சம்பந்தம் உண்டு என்று கண்டு பிடித்திருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

மனிதனுக்கு எத்தனை கால்கள் உண்டு என்று கேள்வி கேட்டால் கொஞ்சம் பொறுங்க.... எண்ணிப் பார்த்து விட்டு சொல்கின்றேன் என்று யாரும் சொல்வதில்லை. மனிதனுக்கு இரண்டுகால்கள் என்று எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் இந்த இரண்டு கால்களின் நீளமும் வித்தியாசமாக இருக்குமா என்றால்.... அதை நம்புவதற்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்? பெரும்பாலானோருக்கு இரண்டு கால்களின் நீளமும் ஒரே அளவாக இருப்பது இல்லை.

இரண்டு கால்களுடைய உயரத்துக்கும் சிறியளவில் வித்தியாசம் இருக்கும்? சிறியளவில் வித்தியாசம் என்றால் எவ்வளவு?அதிக பட்சமாக ஒரு சென்ரிமீற்றர் வரைக்கும் இந்த வித்தியாசம் இருக்கும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஆஸ்திரேலியாவிலே இருக்கின்ற சில விஞ்ஞானிகள் அளந்து பார்த்திருக்கிறார்கள். அவர்கள் இது சம்பந்தமாக சில ஆராய்ச்சியும் செய்து பார்த்திருக்கிறார்கள். அதன் பின்தான் இந்த உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள்.

அது சரி? இரண்டு கால்களின் உயரத்திலே சிறியளவு வித்தியாசம் இருப்பதால் என்ன கஷ்டம்?என்று நினைப்பது தவறு. ஏனென்றால் அதுதான் முதுகு வலிக்கே காரணமாம்.

முதுகு வலிக்கும் - கால் உயரத்துக்கும் முடிச்சுப் போடுறார்கள்.அதற்குக் காரணமும் இருக்கிறது. கால்களுக்கு இடையே உள்ள உயர வித்தியாசம் முதுகுத் தண்டில் ஒரு வளைவை உண்டாக்கி விடுகின்றது. அந்த 'வளைவு' தான் முதுகு வலியை உண்டாக்கி விடுகின்றது.

பொதுவாக அரை வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 'முதுகு வலி' வருவதற்கு இதுதான் காரணமாக இருக்கின்றது. முதுகு வலிக்கான காரணம் தெரிந்துவிட்டது. அப்படியென்றால் இந்த 'முதுகுவலி' வாராமல் தடுப்பதற்கு ஏதாவது வழி உண்டா? வழி உண்டு. கால்கள் இரண்டுக்கும் இடையில் இருக்கிற உயர வித்தியாசத்தைச் சரி செய்துவிட்டால் முதுகு வலியும் சரியாகிப் போய்விடும்!

இந்த வித்தியாசத்தை எப்படிச் சரி செய்வது? உயரமாக இருக்கிற காலை ஒரு சென்ரிமீற்றர் வெட்டி எடுத்து விடலாமா? அப்படிச் செய்தால் முதுகு வலியைவிட கால் வலியே பெரிதாகிப் போய்விடும். அது நடக்கிற காரியம் இல்லை. அப்படியானால் வேறு வழி என்ன? உயரம் குறை வாக உள்ள காலுக்குப் பொருத்தமான ஒரு கட்டையை செருப் போடு சேர்த்துப் பயன்படுத்தலாம். அப்படிப் பயன்படுத்தினால் உயரம் சரியாகிப் போய் விடும்.

சிறுவயதிலேயே இப்படிச் செய்துவிட்டால் வயதான காலத்தில் முதுகுத்தண்டு வளையாது; முதுகு வலியும் வராது. வயதானபின்பு முதுகுவலி வந்தவர்கள் இதைப் போன்று கட்டையும் செருப்பும் பயன்படுத்தி நடந்து பார்த்திருக்கிறார்கள். என்ன நடந்தது தெரியுமா?

படிக்கிறவர்கள் யாருக்காவது முதுகு வலி இருந்து, இது வரைக்கும் என்ன காரணம் என்று தெரியாமல் இருந்தால் அதற்கு நான் சொன்னதுதான் காரணமாக இருக்கும். அப்படி இருந்தால் அதற்கு நீங்களே பரிகாரம் தேடிக் கொள்ளலாம்.

கால் சரியா இருந்தால் முதுகும் சரியாக இருக்கும். நடக்கும் போது நிமிர்ந்து நடக்கவும்.

ஒருவர் அளவுக்கு அதிகமாக எதற்கும் ஆசைப்படுவதே இல்லை. இருக்கிறது போதும் என்று நினைப்பவர்.



ஆண்டவனே அவரிடம் நேரில் வந்து "உங்களுக்கு கால் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்" என்று கேட்டாராம்.

அதற்கு அவர் "அதிகமாக ஒன்றும் வேண்டாம்; என் உடம்பில் இருந்து பூமியைப் போய் தொடும் அளவுக்கு இருந்தால் போதும் " என்றாராம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# யாழ். நகரில் சிறப்புடன் வாழ்ந்து இன்று அருகிப்போன 'பேர்கர்' இனம்

**யாழ்.**.குடாநாடு பல்வேறு இன, மத மக்களைக் கொண்டதாக பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, சமயங்கள் தழைத்தோங்கி நிலைபெற்று தமது விழுமியங்களைப் பறைசாற்றி வருகின்றன. அத்துடன் பௌத்த வழிபாட்டு இடங்களும் காணப்படுகின்றன. அதே போன்று தமிழ், முஸ்லிம் இனங்களுடன் பேர்கர்(பறங்கியர்) மலாயர் போன்ற இனங்களும் தத்தமது மொழி, கலாசார, மத கோட்பாடுகளைப் பின்பற்றி தமது வாழ்வியல் அடையாளங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்த பல்லினங்களில் ஒரு இனம் இன்று அருகி வருவதுடன் தற்கால தலைமுறையினருக்குத் தெரியாத, புரியாத இனமாக மறைந்து வருகின்றது. யாழ்.நகரில் பிரதான வீதி, சின்னக்கடைப் பகுதி, பாங்சால் வீதி, 5ஆம் குறுக்குவீதி, போன்ற சுற்றுச் சூழல்களில் இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வாழ்ந்து வந்த பேர்கர் (பறங்கியர்) இனமே அவ்வினமாகும். இந்தப் பகுதிகள் 'பறங்கித்தெரு' என்று அழைக்கப்பட்டது.

ஆடம்பரமும், கலகலப்பும், களியாட்டங்களும் நிறைந்ததாக விளங்கிய இவர்களது யாழ்.நகரை அண்மித்த பகுதிகள், இன்று இடிபாடுகளுடனும், சோபையிழந்ததாகவும் காணப்படுகின்றன. கலப்புத் திருமணங்கள், நாட்டுப்பிரச்சினைகள் காரணமாகவும் பேர்கர் இனமக்கள் சிதறி, அருகி வாழ்கின்றனர். இந்த பேர்கர் இனம் என்பது இலங்கையில் தோன்றியது அந்நிய ஆக்கிரமிப்புக்களை அடுத்தே என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இலங்கையில் மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், திருமலை, முல்லைத்தீவு, காலி போன்ற பிரதான நகரங்களைச் சார்ந்தே வாழ்கின்றனர்.

இந்த இனம் தொடர்பாக பழைய சரித்திரங்களையும் இன்றும் வாழும் ஒரு சிலரின் கருத்துக்களையும் கேட்டறிந்த போது, பேர்கர் மக்களின் தோற்றுகை தொடர்பாக பல ஆதாரங்களை வெளிக் கொணர முடிகிறது.

15 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் பல பகுதிகளைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தையும் தமது ஆதிக்கத்தில் கொண்டு வந்தனர். அதன் பின்னர் ஒல்லாந்த ரின் நீண்டகால ஆட்சியைத் தொடர்ந்து ஆங்கிலேயர் முழு நாட்டையும் கைப்பற்றினர். ஆங்கில மொழியை ஆட்சி மொழியாகவும், வர்த்தக, நிர்வாக கல்வித் துறைகளுக்கு ஆங்கிலமே பொது மொழியாகவும் பிரகடனப்படுத்தி னர்.

> இன்று இவர்களின் பரம்பரைகள் தாம் வாழ்கின்ற பிரதேச மக்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட போதிலும், பிறப்புச் சான்றிதழ்களில் 'பேர்கர்' என்றே குறிப்பிடப்படுகிறது.

இவர்களின் கட்டுப்பாடுகளையும், மதக் கொள்கைகளையும் ஏற்று வாழ மறுத்த போர்த்துக் கீசர்களில் பலரும், ஒல்லாந்தர்க ளில் பலரும் யாழ்ப்பாணத்தை விட்டு தத்தமது நாட்டுக்குச் சென்றனர். திருமண உறவுகள், தொழில்கள் காரணமாகவும் ஒரு பகுதியினர் இங்கேயே தங்கி விட்டனர். இவ்வாறு தங்கியவர் கள் தமிழ் சிங்கள மக்களைத் திரு மணம் முடித்து வாழ்ந்து வந்தனர்.

இவர்களில் போர்த்துக்கீசர் யார்? ஒல்லாந்தர் யார்? ஆங்கி லேயர் யார்? என இந்த நாட்டு மக்களால் வேறுபடுத்தி காணமுடியாதிருந்தது. இந்த மூவின மக்களின் நடை, உடை, பாவனை, கலாசாரம் என்பன ஒரே மாதிரியாக இருந்தமையே இதற்குக் காரணம்.

இந்த மூன்று நாட்டு மூவின மக்களையும், அவர்கள் வழிப்பரம்பரையையும் இனங் கண்டு கொள்ளும் முகமாக ஆங்கிலத்தில் 'பேர்கர்' எனவும் சிங்களத்தில் 'லன்சி' எனவும் தமிழில் 'பறங்கியர்' எனவும் அழைக்கப்பட்டார்கள். இவர்களை அழைக்கும் சொல் மட்டுமே பழக்கத்தில் உள்ளதாயினும், அப்படி ஒரு இனம் ஆதியில் இருந்து வரவில்லை.

ஏனெனில் போர்த்துக்கீசர் போர்த்துக்கல் மொழியையும், ஒல்லாந்தர் டச்சு மொழியையும் ஆங்கிலேயர் ஆங்கிலமொழியையும் பேசுகின்றனர். இவ்வாறு மூன்று நாட்டையும் மூன்று மொழியையும் பேசும் மக்களின் வழிவந்தவர்களைப் பொதுவாக அழைக்க உருவானதே பேர்கர், லன்சி, பறங்கியர் என்ற சொற்கள்.

ஆனால் இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாத சிலர் கதைகளிலும், வரலாறு, நாடகங்களிலும் ஆங்கிலேயர் எதிர்த்த தமிழ் மன்னர்களின் கதைகளிலும் 'பறங்கியர்' என்று குறிப்பிட்டுள்ளதாகவும், மூவின மக்களுக்குரிய சொல் இன்று கேலி செய்யும் பட்டச் சொல்லாக மாறியுள்ளது கவலை தருவதாகவும் யாழ்ப்பாண பேர்கர் மக்கள் சார்பில் பேசும் ஒருவர் தெரிவித்தார்.

இந்த மக்கள் யாழ்.நகரப்பகுதிகளில் வாசனைத் திரவியங்கள் மற்றும் வியாபாரங்களிலும், கைத் தொழில்களிலும் ஈடுபட்டு வந்தனர். தையல் நிலையங்கள் மூக்குக் கண்ணாடி நிலையங்களை நடத்தி வந்தனர். அக்காலத்தில் ஆட்சி நிர்வாகங்களைச் செய்து வந்த அந்நிய அரசுகளைச் சேர்ந்தவர்கள் பேர்கர் மக்களில் பெருமளவானோர் அரச உத்தியோகங்களில் இணைந்திருந்தனர். இராணுவ, கடற்படை, ஆகாயப்படைகளில் பணியாற்றினர்.

இவர்களின் கல்வி, மற்றும் சமுதாய வளர்ச்சிக்காக வணபிதா லோங் அடிகளார் பெரிதும் முன்னின்று உழைத்தார். புனித பத்திரிசியார் கல்லூரியில் இலவசமாகக் கல்வி கற்க வசதிகள் செய்து கொடுத்தார். இவர்கள் தமக்கென்று தனியான

**யேசுதாஸ்**

மொழிகளைப் பேசி வந்தாலும் அவை எழுத்து வழக்கில் இல்லை. எனவே தமிழையும் ஆங்கிலத்தையும் கற்று யாழ்ப்பாண வாழ்வு முறையுடன் இரண்டறக் கலந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

எனினும் அவர்களின் உடைகள், அலங்காரங்களைக் கொண்டு இன்றும் அடையாளம் காணமுடிகிறது. பெண்கள் எவ்வயதினராயினும் கவுண்களையும் ஆண்கள் சேட், கோட் போன்ற உடைகளையும் அணிவர். இவர்களின் கொண்டாட்டங்கள் களியாட்டம் நிறைந்ததாகக் காணப்படும். திருமணத்தில் தம்பதிகள் உறவினர்கள் சிறிது மது அருந்தி கொண்டாட்டங்களில் மகிழ்ந்திருப்பர். கிறிஸ்மஸ், புத்தாண்டு, ஈஸ்ரர் காலங்களில் பிரதான வீதிப் பகுதிகள் அந்தக் காலத்தில் களைகட்டிக் காணப்படும்.

இவ்வாறு யாழ்.நகருக்கு அண்மையில் வாழ்ந்த நகரின் செல்வாக்கில் பங்களிப்புச் செய்த 'பேர்கர்' இனம் இன்று அடையாளமின்றி மறைந்து வருகிறது. ஓரளவு தொகையாக வசித்து வந்த மக்கள் வாழ்ந்த பகுதிகள் போர்ச்சூழலால் பாதிக்கத் தொடங்கியதும், நாட்டின் வேறுபகுதிகளுக்குச் சென்றுவிட்டனர். ஆயினும் சில குடும்பங்கள் இங்கே வாழ்ந்து வருகின்றனர்.

இன்று இவர்களின் பரம்பரைகள் தாம் வாழ்கின்ற பிரதேச மக்களுடன் இரண்டறக் கலந்து விட்ட போதிலும், பிறப்புச் சான்றிதழ்களில் 'பேர்கர்' என்றே குறிப்பிடப்படுகிறது.

ஆரம்பத்தில் 'போர்த்துக்கல் பேர்கர்' 'டச்பேர்கர்' என்றும் தமிழில் 'பறங்கியர்' என்றும் வழக்கில் இருந்தது. இந்தப் பறங்கியர் என்று அழைப்பது நிறுத்தப்பட வேண்டுமென்று இந்த மக்கள் விரும்புகிறார்கள்.

காலப் போக்கில் 'சிலோன் பேர்கர்' என்றும் பின் ஆங்கிலத்தில் பேர்கர் என்றும் பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டு வந்தது. பின்னர் இலங்கைப் பறங்கியர் என்று வழங்கப்பட்டு வந்ததை முன்னாள் யாழ்.அரச அதிபர் கே.கணேசிடம் எடுத்துக் கூறியதையடுத்து இப்போது பேர்கர் என்றே வழங்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம்கள் , மலையக மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட மறுபெயர்கள் இன்று மறைந்து இவர்களுக்கு நல்ல அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதே போல் இந்த மக்களும் மதிப்பாக 'பேர்கர்' என்று தம்மை அழைப்பதையே விரும்புகிறார்கள். தமிழ் பேசும் பேர்கர் சமூகத்திற்கே இந்தநிலை காணப்படுகிறது. தென்பகுதியில் வாழும் இவர்கள் சிங்கள மொழிபேசும் சமூகமாக இருப்பதனால் பெரும்பான்மை இனத்துக்குக் கிடைக்கும் சகல அங்கீகாரங்கள் சலுகைகளுடன் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

தமிழ் பேசும் 'பேர்கர்' மக்கள் மதிப்பான சொற்பிரயோகத்துடன் ஏனையவர்களைப்போல் மதிக்கப்பட வேண்டுமென ஆதங்கப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் சிறப்புடன் வாழ்ந்த 'பேர்கர்' இனமக்கள் யாழ் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தவர்கள். அவர்களை நாம் மறந்து விட முடியாது. இவர்களும் எம் சமூக உறவுகளே என்ற உணர்வுடன் கைகோர்த்து வாழ்ந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வத்துபட்டிவல ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட அநுர பண்டாரநாயக்க ஞாபகார்த்த சிகிச்சை நிலையம் மற்றும் இரத்த வங்கிக் கட்டடத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்துவைத்தார். அருகில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ உட்பட பல பிரமுகர்கள் காணப்படுகின்றனர்.

## பாடவிதான மாற்றம்: புத்திஜீவிகள் எதிர்ப்பு

கொழும்பு,மார்ச் 12

. உயர்தரப் பாட விதானத்தில் இதுவரை காலமும் உள்ளடக்கப்பட்ட சில விடயங்கள், சாதாரணதரப் பாட விதானத்தில் இணைப்பதற்கு கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளதால், இந்தத் தீர்மானத்துக்கு புத்திஜீவிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சாதாரண தர பாட விதானம் மாற்றியமைத்தல் தொடர்பில் இதுவரையில் சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், உயர்தரப் பாட விதானத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை சாதாரணதர பாடத்திட்டத்தில் இணைப்பதால் அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் பற்றாக்குறை ஏற்படக் கூடும் என்று புத்திஜீவிகள் தெரிவித்தனர்.

புதிய முறையின் கீழ் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆறு பிரதான பாடங்களும், உயர்தரத்தைக் கற்க உதவக் கூடிய வகையில் மூன்று பாடங்களும் கற்பிக்கப்படவுள்ளன.

இலங்கையில் அடிக்கடி கல்விக் கொள்கைகள் மற்றும் பாட விதானங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

# அரசியல் தலையீடு இன்றி வேலைவாய்ப்பு வழங்கவும்

### யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 12

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு, அரசியல் தலையீடு இன்றி வழங்கப்படவேண்டும் . கடந்த போர் சூழ் நிலை காரணமாக எமது மாவட்டத்தில் கல்வியில் ஏற்பட்ட பின்னடைவிலிருந்து தற்போது முன்னேற்றம் ஏற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஐ.நாவில் பேசப்பட்டு வருகின்ற இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணை குறித்து, அரசின் ஆதரவில் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் கையெழுத்துவேட்டைகளும் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்களுக்கு ஆள்களைத் திரட்டுவதற்கு ஆளும் கட்சி அரசியல்வாதி கள் பல்வேறு வாக்குறுதி களை வழமை போல் வழங்கி வருகிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வேலையற்ற பட்டதாரிகள் கடந்த காலங்களில் பல போராட்டங்களை நடத்தினார்கள். மாகாண ஆட்சியிலுள்ள அரசியல்வாதி தொடக்கம் மத்திய அரசிலுள்ள அரசியல்வாதிகள் வரை வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். அது நிறைவேறாத வாக்குறுதிகளாகவே இதுவரையில் உள்ளன.



இவ்வாறான நிலை யில், தற்போது ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பட்டதாரிகளை நோக்கி தமது பார்வையைத் திருப்பி வருகிறார்கள். அண்மையில் வேலையற்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்பு வழங்கப்படுமெனக் கூறி மட்டக்களப்பு நகருக்கு அழைக்கப்பட்டு அரச ஆதரவுப் போராட்டமொன்றில் விருப்பத்துக்கு மாறாக ஈடுபடுத்தப்பட்டார்கள். இதன் காரணமாக குறித்த பட்டதாரிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட அரச ஆதரவு வாசக அட்டைகளினால் தமது முகங்களை மறைத்துச் சென்றதை எம்மால் காணமுடிந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கம் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் பெற்றால்தான் வேலைவாய்ப்பு எனக் கூறி விருப்பத்துக்கு மாறாக பட்டதாரிகளை தமது பக்கம் இணைக்க முற்படுகிறார்கள். இதற்கு பட்டதாரிகள் ஒருபோதும் அடிபணிய மாட்டார்கள். - என்றார். (ச)

## வெள்ளை வான் கடத்தல் குழு; மடக்கிப் பிடித்த பொதுமக்கள்

கொழும்பு,மார்ச் 12

கொலன்னாவை நகர சபைத் தலைவரான ரவீந்திர உதயசாந்தவை வெள்ளை வானில் சென்றோர் கடத்திச் செல்ல மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வெள்ளை வானில் சென்றோர் கொலன் னாவை நகரசபைத் தலைவரைக் கடத்திச் செல்ல முயற்சித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது நகர சபைத் தலைவரின் ஆதரவாளர்களுக்கும் கடத்தல்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இதன் பின்னர் வெள்ளை வானில் சென்றோர் தப்பிச் செல்ல முயற்சித்தனர். இந்த நபர்களைக் கொலன்னாவைச் சந்தியில் வைத்து நகரசபைத் தலைவரின் ஆதரவாளர்கள் சுற்றி வளைத்துப் பிடித்துள்ளனர்.

கொலன்னாவை நகர சபைத் தலைவரைக் கடத்திச்செல்வதற்காக வெள்ளை வானில் சென்றோர் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

**வெள்ளை வானை கொலன்னாவைச் சந்தியில் வைத்து நகரசபைத் தலைவரின் ஆதரவாளர்கள் சுற்றி வளைத்துப் பிடித்துள்ளனர். அத்துடன் வானையும் அடித்து சேதப் படுத்தியுள்ளனர்.**

கடத்தல் முயற்சிக்குப் பயன்படுத்தப்பட்ட வான் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்த நபரைக் கடத்த முற்பட்டவர்கள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயராஜ பக்ஷவின் உத்தரவுக்கு அமைவாகவே செயற்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு

### ஜே.வி.பி. தகவல்

கொழும்பு,மார்ச் 12

அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அரசு அண்மையில் பஸ் கட்டணங்களை உயர்த்தியதாகவும், இந்த நடவடிக்கை சட்ட விதிகளுக்கு முரணான வகையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பஸ் கட்டண அதிகரிப்பு தேசிய கொள்கைகளுக்கு புறம்பான வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 20 வீத கட்டண அதிகரிப்பு, குறைந்தபட்ச கட்டணத்தை 9 ரூபாவாக அதிகரித்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அரச பாடசாலைகளில் 8787 அதிபர் வெற்றிடம்

அரச பாடசாலைகளில் 8787 அதிபர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக பிரதிக் கல்வியமைச்சரான விஜித் காமினி விஜித்தமுனி சொய்சா தெரிவித்தார்.

இந்தப் பதவி வெற்றிடங்கள் திறமைகளின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரால் எழுப்பப்பட்ட வினாவொன்றுக்குப் பதிலளித்த போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிடைத்துள்ள தகவல்களுக்கு அமைய 2011 ஆம் ஆண்டின் ஜூலை 13 ஆம் திகதியளவில் அரச பாடசாலைகளில் பதில் அதிபர்களின் எண்ணிக்கை 2,767 ஆகக் காணப்பட்டது. பாடசாலை அதிபர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தில் பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளுக்கு திறமை வாய்ந்த ஒருவரிடமே பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் நீண்ட காலத்துக்கு சேவையாற்றக் கூடியவர்கள் என்று அவர் தெரிவித்தார். அந்த அடிப்படையில் அவர்களது நியமனங்களை நிரந்தமாக்குவது நியாயமானது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-22)

## இறால் வளர்ப்பாளர் பெரும் நஷ்டத்தில்

கொழும்பு,மார்ச் 12

இறால் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள புத்தளம் இறால் வளர்ப்பாளர்களில் சுமார் 300 பேர் இந்த முறை இறால் வளர்ப்பால் நட்டமடைந்துள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த முறை வளர்த்தெடுக்கப்பட்ட சுமார் 800 மெட்ரிக் தொன் நிறையுடைய இறால்களை உரிய கொள்வனவாளர்கள் இல்லாமையால் தங்களுக்கு விற்பனை செய்ய முடியாதுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்த இறால்களைத் தொடர்ந்தும் குளங்களிலேயே பராமரித்து வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் அவற்றுக்கான பராமரிப்புச் செலவுகளும் அதிகரித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (ச)

## பாவனைக்கு உதவாத பொருள் விற்றோர் மீது பாய்ச்சல்

மஸ்கெலியா மற்றும் நல்லதண்டிய பிரதேசங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட பரிசோதனையின்போது பாவனைக்கு உதவாத பொருள்களை விற்பனை செய்த 30 வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிவனொளிபாத யாத்திரிகர்கள் மற்றும் பிரதேசவாசிகளின் நலன் கருதி தாம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக நுவரெலியா மாவட்ட சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வியாபாரிகள் மீதான வழக்கு எதிர்வரும் 16ஆம் திகதி ஹற்றன் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது. (ச)

## கட்டுநாயக்கா விமான நிலைய பாதுகாப்பு விசேட அதிரடிப் படையிடம் ஒப்படைப்பு

கொழும்பு,மார்ச் 12

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு கடமைகள் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான நிலையத்தின் சரக்கு களஞ்சியப் பிரிவின் பாதுகாப்புப் பொறுப்புக்களை இதுவரை காலமும் இலங்கை விமானப் படையினரே செய்துவந்துள்ளனர்.

களஞ்சியப் பிரிவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விசேட அதிரடிப் படையினர் பொலிஸ் மா அதிபரிடம் ஏற்கனவே அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இதனையடுத்து, விமான நிலையத்தின் பாதுகாப்புக் கடமைகளுக்கு விசேட அதிரடிப்படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர். நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் பல முக்கிய பொருள்கள் கட்டுநாயக்க விமான நிலைய சரக்குக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழில் சார் சர்வதேச கப்பற்றொழில்

ந.சீவரத்தினம்,
சர்வதேச இணைப்பாளர், வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்.

கப்பற்றுறை(Shipping) என்பது கப்பல் சம்பந்தப்பட்ட அனைத்து வணிகத் துறைகளையும் (Ship Owning, Ship Chartering, Import & Export etc. etc)குறிப்பதாகும். கப்பலில் வேலை செய்பவர்களை மாலுமிகள் (merchant Navy)என்ற பொதுவான பெயர் கொண்டு அழைப்பர். முக்கியமாக கப்பலில் அனுபவம் அல்லாதவர்களின் நன்மையைக் கருத்திற் கொண்டும் கப்பலில் அனுபவம் உள்ளவர்களுக்கும் கப்பலில் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு எண்ணம் உள்ள பெற்றோர்களும் கப்பற்றுறை சம்பந்தப்பட்ட அறிவைப் பெற்றிருத்தல் நலமானதாகும்.

ஆங்கிலத்தில் merchant navy என்பது வணிக கப்பலில் வேலை செய்பவரைக் குறிப்பதாகும். Seaman என்பது எந்தவிதமான(Cargo ship, Fishing trawler etc.) கப்பலில் என்றாலும் வேலை செய்யும் ஒருவரைக் குறிப்பதாகும். merchant navy officer என்பது Certificate பெற்ற பின்னர் கப்பலில் பொறுப்பான பதவி வகிக்கும் அதிகாரியைக் குறிக்கும். கப்பல் Deck இல் வேலை செய்யும் அதிகாரியை Deck officer என்றும் Engine room இல் வேலை செய்யும் அதிகாரியை Engineering officer அழைப்பர். கப்பலில் வேலை செய்யும் officer அல்லாதவர்களை merchant navy ratings என்று அழைப்பர்.

merchant navy officer தொழில் மிகவும் நவீன நுட்பம் வாய்ந்தது. வேலை பழகும் பொழுதே ஊதியம் பெறும் வாய்ப்பு உள்ளது. இத் தொழிலில் ஈடுபடுபவர்கள் தொழில் நுட்ப அறிவுடையவர்களாவர்.

இளவயதிலேயே பொறுப்பு வாய்ந்த தொழில் புரிய சந்தர்ப்பம் கிடைக்கும்.

கைநிறையச் சம்பளம் பெறலாம். உதாரணமாக Certificate உடன் வேலை செய்யும் 3rd officer/4th Engineering officer இன் மாத சம்பளம் US$3,500.00 தொடக்கம் US$4,500.00 வரையுள்ளது. சம்பளத்துடன் கூடிய நீண்ட லீவு நாள்களும் கப்பல் இருக்கும் இடத்துக்கு சென்று வேலைக்குச் சேரத் தேவையான போக்குவரத்துச் செலவுகளும் வழங்கப்படும். வேற்று நாட்டவர்களுடன் ஒன்றாக வேலை செய்யும் அனுபவம் கிடைக்கின்றது. உலகம் பூராக சுற்றிப் பார்த்து மற்றைய நாட்டு மக்களின் கலாசாரங்களைப் பற்றி அறிய வாய்ப்பும் உலகம் எங்கும் வேலை செய்யக் கூடிய தராதரத்தை பெற்றிடும் வாய்ப்பும் உள்ளது. கப்பல்களில் திறமை வாய்ந்தவர்களின் தேவை உள்ளதால் வேலை வாய்ப்பு அதிகமுள்ளது.

நவீன கப்பல்கள் பலவிதமான தேவைகளுக்கு ஏற்ப பலவிதமாகக் கட்டப்படுகின்றன. Oil Tanker எண்ணெய் ஏற்றியிறக்கவும் container vessel கொள்கலன்கள் ஏற்றியிறக்கவும் பாவிக்கப்படுகின்றன. வெவ்வேறு கப்பல்களில் வேலை செய்வோர் வேறு விதமாக வேலைகள் செய்தாலும் பொதுவாக கப்பல் தொழில் கீழ்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

Deck officer: Deck rating அல்லது deck cadet இல் இருந்து படிப்படியாக முன்னேற்றம் பெற்று deck officer ஆகி captain வரை உயர்ந்து செல்லக் கூடிய தொழில். கப்பல், அதில் உள்ள பிரயாணிகள், மாலுமிகள் மற்றும் cargo ஆகியவற்றின் பாதுகாப்பு (safety),கப்பற் பயணம் (navigation), கப்பலை துறைமுகத்தினுள் கொண்டு வந்து கட்டுதல் (mooring-&unmooring) தொலைத் தொடர்பு (Communication) மற்றும் கப்பற் சரக்கு ஏற்றியிறக்குதல் (caro handling, loading & unloading) போன்ற வேலைகள் deck officer களினால் நடைமுறைப் படுத்தப் படுகின்றன. Chief officer,மற்றைய junior deck officer களுக்கும் deck crew விற்கும் பொறுப்பானவர். அவர் captain இன் பணிப்பின் கீழ் வேலைகளை deck crew விடம் பகிர்ந்தளிப்பார்.

Engineering officer:-இயந்திரத் துறையில் தொழில் புரிய விரும்புவோருக்கு இது வரப்பிரசாதம். இங்கும் engineering rating இல் இருந்து engineering officer ஆகி chief engineering officer வரை உயர்ந்து செல்ல முடியும். இவர்கள் பாரிய main engine மற்றும் உப இயந்திரங்களாகிய auxilliary engine களை பாதுகாப்புடன் இயக்கும் பொறுப்பு உடையவர்கள். அத்தோடு deck இல்உள்ள மற்றை இயந்திரங்கள் மற்றும் கப்பல் இயந்திரங்களுக்கான எண்ணெய் வகைகள் (bunkers) ஆகியவைகளையும் கையாளுவர்.Chief engineering officer captain இன் பணிப்பின் கீழ் வேலைகளை engine room crew விடம் பகிர்ந்தளிப்பார்.

Electro-technical officer:- நவீன கப்பல்களில் electronic equipment கள் அதிகமாக பாவனையில் உள்ளன. Engine room control system, electronic safety system, satellite navigation, communication controls, remote controls, radar, gyro compass என பல electronic கருவிகள் பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் computer hardware, software போன்றவற்றுக்குப் பொறுப்பாவர்.

Deck ratings:- deck இல் chief officer இன் பணிப்பில் வேலை செய்யும் சாதாரண மாலுமிகள்.

Engine room ratings:-Engine room இல் chief engineer இன் பணிப்பின் கீழ் வேலை செய்யும் சாதாரண மாலுமிகள்.

Hospitality ratings:-cook மற்றும் stewards ஆக வேலை செய்பவர்கள். இவர்கள் chief steward இன் கீழ் வேலை செய்பவர்கள்.

Merchant navy officer ஆக வரவிரும்புவோர் 18 (சில நாடுகளில் 16) வயதுக்கு மேற்பட்ட ஆண் ஆகவோ அல்லது பெண் ஆகவோ இருத்தல் வேண்டும். G.C.E O/L இல் mathematics, physics,English உட்பட 5 திறமைச் சித்தி எய்தியோர்கள் cadet ஆக முடியும்.இச் சித்தி அல்லாதோர் deck அல்லது engine room rating ஆகச் சேர்ந்து 3 தொடக்கம் 4 ஆண்டு அனுபவம் பெற்றவுடன் officer படிப்பிற்காக college இல் சேர்ந்து examination எடுத்து officer certificate பெறமுடியும்.

Merchant navy officer ஆக வர முன்னர் விசேடமான medical test இற்கு உட்படுத்தப்படுவர். முக்கியமாக பார்வை, நிறக்குருடு போன்ற குறை இல்லாமல் பொதுவான நல்ல தேக சுகாதாரம் உள்ளவர்கள் medical test இல் தேர்வடைவர். Merchant navy rating கப்பலில் சேரமுன்னரும் அதன் பின்னர் இருவருடங்களுக்கு ஒரு முறை medical test இற்கு உட்படுத்தப்படுவர்.

(வளரும்)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
24-05-1956

மறைவு
12.02.2012




அமரர்
ரவீந்திரராசா
நாகேஸ்வரி அம்மா

கடந்த (12.02.2012) அன்று இறைபதம் எய்திய இன்பர்சிட்டி, வியாபாரி மூலையை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் ரவீந்திரராசா நாகேஸ்வரி அம்மாவின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.03.2012) ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் இன்பர்சிட்டி அந்தியேட்டிக் கிரியை மண்டபத்தில் நடைபெறும். 13.03.2012 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு அன்னாரது ''கௌரி வாசா'' அல்வாய் தெற்கு, ஓடை இல்லத்தில் சபிண்டீகரண கிரியையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெற உள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் தங்கள் குடும்ப சகிதம் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

''கௌரிவாசா'',
அல்வாய் தெற்கு, ஓடை.
0750388848.

(12693) (6,9,10)

குடும்பத்தினர்,


## சமுர்த்தி நிவாரண விநியோகத்தை பார்வையிடும் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தற்பொழுது வழங்கப்பட்டு வரும் சமுர்த்தி நிவாரண விநியோகத்தை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் நேரடியாகச் சங்கக் கிளைகளுக்கு சென்று மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணம் ஒரே சமயத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிவாரண விநியோகத்தை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தலைமையில் அதிகாரிகள் குழு நேரடியாக திடிரென சங்க கிளைகளுக்கு சென்று பார்வையிட்டு வருகின்றனர் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

சங்க கிளைகளில் இந்த நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் பொருள்களையும் இந்தக் குழு பார்வையிட்டு அதன் தரத்தையும் உறுதி செய்து வருகின்றனர்.

நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் மாதிரிகளும் கிளைகளுக்கு முன்னால் பயனாளிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த நிவாரணம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பதாக விநியோகித்து முடித்துவிட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## ரோந்து நடவடிக்கைகள் மும்முரம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். நகரிலும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதியிலும் இரவு வேளையில் பொலிஸாரின் காவல் ரோந்து பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இரவு வேளையில் இடம்பெறும் குற்றசெயல்கள் போன்றவற்றை தடுக்கும் முகமாக பொலிஸாரின் காவல் பணிகள் தற்போது முடக்கி விடப்பட்டுள்ளன.

வாகனங்களிலும் மற்றும் கால்நடையாகவும் பொலிஸார் தமது ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொது இடங்களில் இருந்து மது அருந்துதல் மற்றும் கோஸ்டி மோதல், திருட்டு சம்பவங்கள் போன்றவற்றை தடுக்கும் முகமாக இந்த காவல் ரோந்து பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இளைஞர்கள் இரவு வேளையில் பொது இடங்களில் இருந்து மதுவை அருந்தி விட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து இந்த ரோந்தப் பணிகள் இடம் பெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-17)


## கண்ணீர் அஞ்சலி



யாழ். மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கத்தின் கௌரவ உறுப்பினர் அ.செ.நிஷாந்தன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி அமலதாஸ்
மேரி றெஜினா

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கௌரவ உறுப்பினர்கள்,
இளைஞர் உருவாக்கல் இயக்கம்,
யாழ். மரியன்னை பேராலயம்.

(15575) (6,9,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தங்கத்தைக் கடத்திய இந்தியர் கைது

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்த இந்தியர் ஒருவர், இலங்கையிலிருந்து தங்கம் கடத்திச் சென்றதாகச் குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை விமானத்தில் தங்கம் கடத்தப்படுவதாக இந்திய சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சோதனையில் 2 பயணிகள் சிக்கியுள்ளனர். திருச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் (வயது 40) என்பவர் கொண்டுவந்த கைப்பையைச் சோதனை செய்ததில் அதில் கறுப்பு நிறப்பொதி இருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தபோது ஒரு சங்கிலி இருந்தது. அது வெள்ளி மூலாம் பூசப்பட்டு இருந்தது. அதிகாரிகள் அந்த சங்கிலியைப் பரி சோதித்தபோது அது தங்கம் என்று தெரியவந்தது.

கடத்தப்பட்ட 341 கிராம் கொண்ட தங்கச் சங்கிலி 20 லட்சம் ரூபா (இலங்கை ரூபா) பெறுமதியானது என்று தெரிவிக்கப்படு கிறது. சுற்றுலா விசாவில் கொழும்புக்குச் சென்று திரும்பிய அவர் தங்கத்தைப் பதுக்கிக் கொண்டு வந்ததால் கைது செய்யப்பட்டார். தங்கச் சங்கிலி பறிமுதல் செய்யப்பட்டது.



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கன்னாதிட்டி காளி அம்மாள் ஆலய தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. தேரில் அம்பாள் வீதியுலா வருகிறார். (வ)

## சுவிஷேச மாநாடு

கொழும்புத்துறை, மார்ச் 12

இயேசு ஜீவிக்கிறார் சபையின் 34 ஆவது வருடாந்த சுவிஷேச மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

ஆசீர்வாதப் பெருவிழா என்னும் தலைப்பில் நடைபெறும் இந்த மாநாடு எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் யாழ். மாநகர சபை பழைய வளாகத்தில் தினமும் மாலை 5 மணிக்கு இடம்பெறும். (வ-135)

## அவசர அம்புலன்ஸ் சேவை அழைப்பு இல. 110 சீராக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

அவசர மருத்துவ அம்புலன்ஸ் சேவையைத் தொடர்பு கொள்ள 110 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்த முடியும். தவறின் 021 222 5555 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

வலையமைப்புக்கள் சிலவற்றில் இருந்த தொழிநுட்பக் கோளாறுகள் சீர் செய்யப்பட்டுள்ளன. தற்போது இந்த இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று மேற்படி பணிமனை அறிவித்துள்ளது.

மேலும் தொழிநுட்பக் கோளாறுகள் காரணமாக சில வலையமைப்புக்களில் 110 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தும் போதும் அநுராதபுரத்துக்கு அழைப்பு செல்வதாக பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதனையடுத்து வலையமைப்பிலிருந்த தொழிநுட்பக் கோளாறுகள் சீர் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சேவைத் தொடர் பாடல்களை ஒருங்கிணைக்க பிராந்திய சுகா தாரசேவைகள் பணிமனையில் அவசர அழைப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

24 மணி நேரமும் சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ-4-9)

## மணியம்தோட்ட மக்களுக்கு இலவச மின் இணைப்பு

கொழும்புத்துறை, மார்ச் 12

மணியந்தோட்டம் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட இலவச மின் இணைப்புப் பணிகளில் முதலாம் ஆம் 2ஆம் குறுக்குப் பகுதி யில் உள்ள வீடுகளுக்கு இலங்கை மின்சார சபையால் இணைப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து ஏனைய குறுக்கு வீதி வீடுகளுக்கும் மின்னிணைப்பு வழங்கப்படவுள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 6 மாதங்கள் வரை இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் படி 6 மாதங்களுக்கு மின்கட்டணம் அறவிடப்படுவதில் சலுகை காட்டப்படும் என்று நம்பப்படுகிறது.

இந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படும் நிலையில் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கல்வி, தொழில், முயற்சிகளில் பயனடையும் நிலை தோன்றியுள்ளதாக அந்தப் பகுதி தெரிவிக்கின்றனர்.(வ-135)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
A.S.நிஷாந்தனின் அன்புத்தாய்
திருமதி மேரி றெஜினா அமலதாஸ்
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
(15568)(6-9-8)

Galaxy Cabs
021 - 3201201

மணமகள் தேவை
யாழ். கௌரவ, அரச பணிபுரியும் அழகிய 36 வயதுடைய R.C. மணமகனுக்கு, அழகிய நற்குணமுள்ள மணமகள் தேவை.
தொடர்பு : 077 6577356
(15537)(6-9-8)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
A.S.நிஷாந்தனின் அன்புத்தாய்
திருமதி மேரி றெஜினா அமலதாஸ்
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
(15569)(6-9-8)

புத்துணர்ச்சியுடன், புதுமையான, இல்லற வாழ்வுக்கு வனாரி கல்பா




நீங்கள் இளமைத் துடிப்புடன் செயற்பட ஒரே தீர்வு

பாவனை முறை:
தினமும் இரு முறை இரண்டு தேக்கரண்டிப் பிரமாணம் பாலுடன் பருகவும்.

சகல முன்னணி பார்மசிகளிலும் கிடைக்கும்.

1. மதுஜன் பார்மசி (நெல்லியடி)
2. ஸ்ரீமுருகன் பார்மசி (நெல்லியடி)
3. ஸ்ரீமுருகன் பார்மசி (பருத்தித்துறை)
4. ஜெகன் பார்மசி (யாழ்ப்பாணம்)
5. சிற்றி மெடிக்கல் (யாழ்ப்பாணம்)
6. ரட்ணம் பார்மசி (யாழ்ப்பாணம்)
7. அம்பிகா பார்மசி (சாவகச்சேரி)
8. சாந்தா பார்மசி (கொடிகாமம்)

SKY PHARMA

இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது.
(03/01/PP / 10239)
SKYPHARMA THE HERBAL PRODUCT COMPANY
# 35 1/1, Hinniappuhamy ,Mawatha, Colombo - 13
TEL. + 94 011 2334193
CEL. 077 7300432, 077 7409918
(12681)(2-6-9)

பெண் வேலையாள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் சைக்கிள் மற்றும் மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்பு : 0770760051
(15570)(6-9-8)

வீடு விற்பனைக்கு
215/1, கச்சேரி நல்லூர் வீதியில், 4 அறைகள் மற்றும் சகல வசதிகளையும் கொண்ட மாடிவீடு.
மேலதிக விவரங்களுக்கு - 077 9810945
(15477)(6-7-8)

வீட்டுக்கு, ஹோட்டலுக்கு
நாடு முழுவதும் போக்குவரத்து
மொத்தத்துக்காக விஷேட விலைக்கழிவு




www.titusstores.com
டயிடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை 2439122 லிபர்டி ப்ளாஸா

## மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தானம் பங்குனித்திங்கள் உற்சவ தினங்கள்

19.03.2012, 26.03.2012, 02.04.2012, 09.04.2012 ஆகிய தினங்களில் நடைபெற உள்ளதால், உற்சவ காலக்கடைகள் 16.03.2012 வெள்ளிக்கிழமை பி.பகல் 2 மணிக்கு, அர்ச்சனை கடை உட்பட சகல கடைகளும் ஏலத்தில் வழங்கப்படும். கடையை ஏலத்தில் எடுப்பவர்கள் முழுப்பணத்தையும் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

## முக்கிய அறிவித்தல்

திருப்பணி, அன்னதானத்துக்கு நிதி அன்பளிப்புச் செய்வோர் ஆலய அலுவலகத்தில் மாத்திரம் நிதியை செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

தர்மகர்த்தா
பன்றிதலைச்சி கண்ணகை அம்மன்
தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குழந்தைகள் வழியில் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி நடக்கலாம். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று கிடைக்கலாம். உறவினர்கள் உபசரிப்புக்காக கணிசமான தொகையைச் செலவிடலாம். அயலாரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களின் வீடு தேடி வரலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். நண்பர்களுடன் சேர்ந்து சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். இரண்டு நாள்களாக மனதைக் குடைந்து கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். ஆறுதலான அனுபவம் உண்டு. பணவரவுகளைப் பெறலாம்.

**மிதுனம்:** தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் ஓய்வெடுக்கலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப்பெற, மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உங்களின் பிரச்சினை ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லிப் புலம்புவீர்கள். சில விடயங்களை நினைத்து பயம், கவலை, பீதி அடைவீர்கள்.

**கடகம்:** வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து, விட்டுக்கொடுத்துச் செல்ல வேண் டிய நாள். உங்களின் உதவியுடன் சிலர் காரியம் சாதிக்க நினைப்பர். உறவினர்கள் தொடர் பான விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. எதிர்பார்த்த ஒன்று ஏமாற்றத்தைத் தந்தாலும், எதிர்பாராத ஒன்று நல்ல விதமாக நடக்கலாம். பயணங்கள் சந்தோஷம் தரும்.

**சிங்கம்:** தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். உங்களை நம்பி, மற்றவர்கள் ஒப்படைத்த வேலைகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். குடும்பப் பெரியவர்கள் சிலர், உங்க ளுக்கு நல்ல ஆலோசனை சொல்லலாம். சொத்து கொடுக்கல், வாங்கல் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரை, திடீரெனப் பார்க்கும் வாய்ப்பு கிட்டும்.

**கன்னி:** பெண்கள் வழியில், எதிர்பாராத செலவுகள் மற்றும் சிரமங்களைச் சந்திக்கலாம். பயணங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். குறுக்கு வழியில் சில வேலைகளைச் செய்ய நினைத்து, அதனால் அவதிப்படலாம். நீங்கள் சொல்வதே சரியென சிலரிடம் வாக்குவாதம் செய்வீர்கள்.

**நாளை**

மாசி 30 செவ்வாய்க்கிழமை 13.03.2012
திதி: ஷஷ்டி பி.இ 02.49வரை
நட்சத்திரம்: விசாகம்
சுபநேரம்: 10.51- 12.21 வரை,
ராகு காலம்: 03.21 - 04.51 வரை

**துலாம்:** நினைத்தது நினைத்தபடி நடக் கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி சந்தோஷம் அதிகரிக்கும். உங்களிடம் சண்டை போட்ட சிலர், இன்று சமாதானமாகப் பேசலாம். உற வினர்கள், சிலர் வழியில் பெருமைப்படும் வகையி லான உதவிகள் கிடைக்கும். தந்தை வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். புதுமையான அனுபவங்களைப் பெறலாம்.

**விருச்சிகம்:** கடந்தகாலத்தில் உங்க ளால் பாதிக்கப்பட்ட சிலர், இதுதான் நேரம் என்று தற்போது விமர்சிக்கலாம். நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். விவசாயிகள் கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். வீட்டுக்குத் தேவையானதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**தனுசு:** உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களை மற்றவர்கள் பாராட்டும் வகையில் செய்து முடிப்பீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்ச ரிக்கை அவசியம். பெரிய பிரச்சினையாகி விடுமோ என்று பயந்த விடயம், ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். நண்பர்கள் சிலர், உங் களுக்காக செலவு செய்யலாம். ஆசைப்பட்டது நடக்கும் நாள்.

**மகரம்:** நாலுபேருக்கு பலன் தரக்கூடிய காரியங்களைச் செய்வீர்கள். நேற்று உங் களை விமர்சித்த ஒருவரை, இன்று நீங்கள் பதிலுக்கு விமர்சிக்கலாம். நோய் உபாதைகள் நீங்கி, தெம்பு உற்சாகமாகச் செயற்படுவீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். அரசியல்வாதிகளுக்கு மதிப்பு, செல்வாக்குக் கூடும்.

**கும்பம்:** முக்கிய வேலையாக, வெளியூர் பயணங்கள் செல்லலாம். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். ஒவ்வாத உணவு வகைகளை சாப்பிட்டு வாயு உபாதைகளுக்கு ஆளாகலாம். மற்றவர்கள், உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். சில விடயங்கள் குறித்து பெரியளவில் மனக்கோட்டை கட்டுவீர்கள்.

**மீனம்:** சில வேலைகளுக்காக நீண்டநேரம் காத்திருக்கலாம். கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்யலாம். சபலங்களால் சிரமங்களுக்கு ஆளாகலாம். வெறுப்பு, விரக்தி ஆள் கொள்ளும் நாள். தண்டச் செலவுகள் நேரும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 5 | 1 | | | 2 | | |
| 9 | 6 | | | | 5 | 1 | 7 | |
| 1 | | | 6 | | 9 | | | |
| 8 | | | | | | 4 | | 2 |
| | 5 | | | 3 | | | 9 | |
| 2 | | 4 | | | | | | 1 |
| | | | 2 | | 4 | | | 3 |
| | 1 | 3 | 5 | | | | 2 | 6 |
| | | 9 | | | 3 | 5 | 4 | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 3 | 2 | 5 | 7 | 1 | 9 | 6 |
| 9 | 5 | 1 | 6 | 8 | 3 | 2 | 7 | 4 |
| 2 | 6 | 7 | 4 | 1 | 9 | 3 | 5 | 8 |
| 3 | 2 | 6 | 9 | 4 | 5 | 8 | 1 | 7 |
| 5 | 1 | 9 | 8 | 7 | 6 | 4 | 2 | 3 |
| 8 | 7 | 4 | 3 | 2 | 1 | 5 | 6 | 9 |
| 7 | 9 | 2 | 5 | 3 | 8 | 6 | 4 | 1 |
| 1 | 4 | 8 | 7 | 6 | 2 | 9 | 3 | 5 |
| 6 | 3 | 5 | 1 | 9 | 4 | 7 | 8 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1−9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1−9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1−9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## சுப்பையா ஐயாத்துரை

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா ஐயாத்துரை அவர்கள் (09.03.2012) வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மகுலதேவி, விக்னேஸ்வரன், சிவசுப்பிரமணியம், வாசுகி, சந்திரவதனி, ஜெகசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அன்னமுத்து மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரன், சரோசாதேவி, கருணாகரன் ஆகியோரின் சிறிய தந்தையும், கந்தசாமி, மாலினி, நளினி, கதிர்காமஈஸ்வரன், கணேஸ்வரன், ஆரணி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான நடராசா, இரத்தினபூபதி மற்றும் இராசகோபாலசிங்கம், அன்னலட்சுமி, சந்திரவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும், துஷ்யந்தினி முஜீபன், ரவீந்திரன், கம்ஷத்வனி, விதுஜனன், நிறேகா, பிரணவன், கபிதாஸ், சங்கீர்த்தா, செல்வதாஸ், யாழினி, தனுஷா, வினுஷா, விபூஷன், அபிஷா, அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும், கவினேஷின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

[illegible],
இணுவில்.

(15573)(2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகர்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லை

## மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கவலை

சாவகச்சேரி, மார்ச் 12

21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யக் கூடாது என்ற விழிப்புணர்வை விதிமுறை வர்த்தகர்கள் மத்தியில் இன்னமும் ஏற்படுத்தவில்லை.

இந்த நீதிமன்றில் தென்மராட்சி பிரதேசத்தில் இவ்வாறான குற்றச் செயல்களுக்காக 50 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட போதிலும் ஏனைய வர்த்தகர்கள் இதனை பொருட்படுத்தாதது வேதனையளிக்கிறது.

இளஞ் சமுதாயத்தினரை தீய வழிகளில் கொண்டு செல்ல வர்த்தகர்கள் காரணமாக அமைகிறார்கள் போல் தெரிகிறது.

இவ்வாறு சாவகச்சேரி மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி நீதி மன்றில் 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள், விற்பனை செய்த பத்து வர்த்தகர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைகள் அண்மையில் இடம்பெற்றன.

இந்த வழக்குகளில் பத்து வர்த்தகர்களுக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் பதில் நீதிவான் சு.கந்தசாமியால் அபராதம் விதிக்கப்பட்டு அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத் தண்டணை அனுபவிக்குமாறு உத்தர விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்தே அவர்கள் இந்தக் கவலையை வெளியிட்டுள்ளனர். (ம-9)

# அம்பிகை நகர் அம்மன் ஆலய புனரமைப்பு

வடமராட்சி, மார்ச் 12

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மிகப் பழமை வாய்ந்த அம்பிகை நகர் மகேஸ்வரி அம்மன் ஆலய வசந்த மண்டப புனரமைப்புக்கு அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. ஆலய பரிபாலன சபை தலைவர் ச.முத்துக்குமார் வரவேற்புரை வழங்கினார்.

பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு அடிக் கல்லை நட்டு வைத்தார். அத்துடன் ஆலயப் புனரமைப்புக்கென 5 லட்சம் ரூபா நிதியையும் வழங்கியுள்ளார்.

(ம)

# நயினையில் தெய்வீக அதிசயம்



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் அம்பாளின் அருட்கடாச்சத்தால் இளைஞன் ஒருவன் தனது வாயால் இரத்தின கல்லை கொப்பளித்த தெய்வீக அதிசயம் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து ஆலய வழிபாட்டுக்கு வந்த அந்த இளைஞன் தன்னை அறியாமல் திடீரென உருக்கொண்டுள்ளார். அம்பாளின் தெய்வீகத்தால் அந்த இளைஞன் பல்வேறு வடிவிலும் மற்றும் நாகபாம்பு போன்றும் உருக்கொண்டு ஆடியுள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை நிகழ்ந்த இந்தச் சம்பவத்தில் சுமார் இரண்டு மணி நேரம் நாகபாம்பு போன்று அசைத்து வாயில் இருந்து நாகரத்தினக் கல்லை எடுத்து பட்டுத் துணி ஒன்றில் வைத்து ஆலய அறங்காவல் சபைத் தலைவரிடம் கையளித்ததாக அறங்காவல் சபைத்தலைவர் ஆ.தியாகராஜாவே உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தக் கல்லை உடனடியாக பார்க்கக் கூடாது என்றும் பார்த்தால் கண்ணுக்கு தீங்கு ஏற்பட்டுவிடும் எனவும் ஆகையால் சிறிது காலம் செல்ல பார்க்கலாம் என்றும் அந்த இளைஞன் உருக்கொண்டு கூறினான். கடல் கடந்த அன்னையின் அருட் தெய்வீக அற்புதங்களை எடுத்துரைக்க மட்டு நகரில் இருந்து விரைவில் அம்மன் ஒருவாரம் இங்கே வருகை தரு வாள் எனவும் அந்த இளைஞன் கூறியுள்ளார்.

இளைஞனின் இந்த தெய்வீக அருளை பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடிப் பார்த்ததாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ம-7-17)

# குன்றும் குழியுமாக வீதிகள் சிரமத்தின் மத்தியில் மக்கள்

யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள், மாணவர்களால் நாளாந்தம் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் பல வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இந்த வீதிகளால் பயணிக்கும் பொதுமக்களும் மாணவர்களும் போக்குவரத்துக் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

யாழ். ஆஸ்பத்திரி வீதி, யாழ். குறுக்கு வீதியில் இருந்து யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயளர் பகுதி வாசல்வரை பல இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

யாழ். மணிக்கூட்டு வீதி, யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம் அமைந்துள்ள பகுதியில் இருந்து யாழ். ஸ்ரான்லி வீதிச் சந்திவரை குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

யாழ். பொலிஸ் நிலையம் அமைந்துள்ள யாழ். மணிக்கூட்டு வீதி, யாழ். மணிக்கூட்டு கோபுரப் பகுதியில் இருந்து யாழ். ஆஸ்பத்திரி வீதிச் சந்திவரையில் பல இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. கன்னாதிட்டி வீதி, யாழ். கஸ்தூரியார் வீதிச் சந்தியில் இருந்து யாழ். மணிக்கூட்டு வீதிவரை பல இடங்களிலும் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

குறித்த வீதிகளில் நாளாந்தம் மக்கள் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில் இந்த வீதிகளை விரைந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (ம-51)

# கருணை கிழங்கு வர்க்கத்திலா? மனித வர்க்கத்திலா?

ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவன். இதனால்தான் "மனிதன் தெய்வமாகலாம்" என்று கூறுவர். இறைவனுக்கே உரித்தான சில பண்புகளை மனிதன் தன்னகத்தே கொண்டுள்ளான் என்பதே கடவுளின் சாயலில் படைக்கப்பட்டுள்ளான் என்பதன் அர்த்தமாகும். அழிகின்ற உடலையும், அழியாத ஆன்மாவையும் ஒருங்கே கொண்டு வாழ்பவன் தான் மனிதன். அதேவேளையில் தத்துவவியலாளர் 'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்று கூறுவர். 'அன்பே இறைவன், அன்பே சிவம்' என்று மதங்கள் போதிக்கின்றன. இன்று மனிதமும் புனிதமும் அருகிவரும் காலம்! பொருளும் அருளும் இல்லாமல் வாழ விரும்பும் காலமிது! உள்ளத் தேவைகளை விட, உடல் தேவைகளைப் பூர்த்தி செய்து இன்பமாக வாழ்வதே வாழ்க்கை என்று நினைக்கும் காலமாகும். இதனால் மனிதன் தன் மனிதத் தன்மையை இழந்து வாழ்வதினால் மிருகமாகின்றான். இறைவனை மையப்படுத்தி வாழாமல் உலகத்தையும், உலகம் தரும் மகிழ்ச்சியைப் பெற்று அனுபவித்து வாழத் துடிக்கின்ற கால கட்டத்தில் வாழுகின்றோம். பொருளை ஆதாரமாக்கிக்கொண்டு கடவுளை மறந்து மனிதர்களைக் கூட பொருள்களாகப் பயன்படுத்தும் ஒரு வாழ்க்கை முறைக்கு தள்ளப்பட்டுள்ளோம். உறவுகளைவிட, உயர்ந்த மனிதப் பண்புகளை விட, பணத்தையும் ஆடம்பரத்தையும் புகழையும் ஆதாயமாக்கி வாழ எத்தனையோ மனிதர்கள் முயற்சி செய்கின்றனர். ஆனால் பணமும் புகழும் வசதிகளும் ஒரு மனிதனுக்கு அமைதியை மகிழ்ச்சியை நிறைவாக கொடுக்க முடியாது என்பது அனுபவ உண்மையாகும். உண்மையான மகிழ்ச்சி, நிறைவு எதில் தங்கியுள்ளது என்ற கேள்வி எழுகின்றது. உண்மையான மகிழ்ச்சி கொடுப்பதில் பகிர்வ தில் மனிதத்துடன் வாழ்வதில் தான் தங்கியுள்ளது என்ற உண்மையை உணரமறுக்கின்றோம். தியாக வேள்வியில் தோய்ந்து போன அன்பும், இரக்க சிந்தையும் கருணையுமே எமக்கு நிறைவாழ்வை அளிக்கக் கூடியது. நான் எனது என்ற வட்டத் துக்குள் வாழும் வாழ்க்கை மனிதனை தெய்வமாக்காது. இன்று எமது சமூகத்தில் அருகிவரும் மனிதநேயம், கருணை, இரக்கம் போன்ற மதிப்பீடுகள் எமது முகவரியை அடையாளத்தை இருப்பை இழக்கச் செய்துவிடும். கருணை கிழங்கு வர்க்கத்துக்கு உரித்தானதல்ல. மனித வர்க்கத்துக்கே உரித்தானது.




பிரிவினை, சுயநலச் சுவர்களை தகர்த்தெறிந்து உறவின் பாலங்களைக் கட்டியெழுப்ப அகத்தில், மனநிலையில் மாற்றம் வேண்டும். இத்தகைய மாற்று கலாசாரத்தை உருவாக்க நல்ல மனம் படைத்தவர்கள் முன்வர வேண்டும். இறை நம்பிக்கை, இறைப்பற்று உள்ளவர்களே தெய்வமாகின்றனர். ஒவ்வொரு மனிதனிலும் இறைவனைக் கண்டு கொள்கின்றனர். புதிய பார்வை பெற்று புது மனிதர்களாக வாழ்வதே தவக்காலத்தின் நோக்கமாகும்.

அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.


# மரண அறிவித்தல்

## செல்லையா கிருஸ்ணபிள்ளை (S.K.S)



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கிருஷ்ணபிள்ளை (10.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை -தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற தங்கப் பாக்கியத்தின் அன்புக் கணவரும், சக்திவேல் (கொலண்ட்), பத்மலோசினி, நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சற்குணதேவி மற்றும் பரஞ்சோதி, கலைமகள் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற தங்கப்பொன்னு மற்றும் இராசரத்தினம், காலஞ்சென்ற ஆறுமுகநாதன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிங்கரத்தினம், கந்தசாமி மற்றும் தங்கத்திரவியம், ரஞ்சினி, காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும், துஸ்யந்தன் (கொலண்ட்), துவாரகா (கொலண்ட்), அனுசன் (கொலண்ட்), துர்க்கா (பட்டதாரி), கலையரசன் (கொலண்ட்), சற்சபீசன் (மாணவன்), நிவேஜன் (லண்டன்), தர்நேசன் (லண்டன்), துர்க்கா (கொலண்ட்) ஆகியோரின் பேரனும், பேரமகனான துஸ்யந்தனின் குழந்தையின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.03.2012 புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருநாதர் கோயிலடி,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

தகவல்:
[illegible]
(மருமகன்)

(12692) (6,9,10)



# மரண அறிவித்தல்

## திருமதி அமலதாஸ் மேரி றெஜினா (சந்திரா)



இல.35/2 பழைய பூங்கா வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமலதாஸ் மேரி றெஜினா 09.03.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசேஸ் எட்வேட் (அரியகுட்டி) - விக்ரோறியா (பாக்கியம்), தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுவக்கீன் மோசஸ் - மேரியோசபின் தம்பதியரினதும் சிப்றியன் அவர்களதும் அன்பு மருமகளும், மோசஸ் அமலதாஸின் (ஓய்வுபெற்ற வன பரிபாலன உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், நினோன் அனுசியா (ஆசிரியர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செறேனஸ் நிஷாந்தன் (ஆசிரியர் சென். பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், எட்வேட் ஜோர்ஜ் (நொதர்ன் இன்டர்ஸ்ரீஸ்) அவர்களின் அன்புச் சகோதரியும், ஜேம்ஸ் செல்வகுமார் (Appolo Tyre House), கிறிஷாந்தி (ஜீன்) (உதயன் பணிமனை), ஷியான் (மேற்பார்வை யாளர், யாழ். மாநகர சபை), ஜெகான், டிசான், சகானா, ஆகியோரின் அன்பு மாமியாரும் கமில்ஜோயல், சிமித்செனாரி, ஹரின்எட்றியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சகாயமலர் (பவா), சிசிலியா, கிறிஸ்ரியன், M.F. யோசப், அலோசியஸ், கிறேஸ்மணி, மொனிக்கா, அக்னெஸ், கொன்சி, றெஜினா, லூமினா, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.03.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங் கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.35/2, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மோ.அமலதாஸ் (கணவர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில ஆசிரியர் தேவை

G.P.S. வீதி, கல்வியங்காடு எனும் இடத்தில் வீட்டிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை.

(15572)(6-9-8) தொடர்புகட்கு : 075 5680228

## மனமார வாழ்த்துகின்றோம்



தொல்புரம் கிழக்கு,
விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின்
முன்னாள் கௌரவ செயலாளரும்,
இந்நாள் கௌரவ உபதலைவரும்,
இம்மண்ணின் மைந்தனுமாகிய

**சற்குணானந்தன் கைலாசநாதன்**

அவர்கள் தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளராக அரும்பெரும் சேவையாற்றி தற்போது வலிகாமம் கல்வி வலயத்தின் மாணவர் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளமையையிட்டு மனதார பெருமிதத்துடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் எதிர்காலத்தில் மேலும் பதவி உயர்வுகளைப் பெற்று கல்வி உலகம் மேம்பட உழைக்க இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

தொல்புரம், சுழிபுரம்.

தொல்புரம் கிழக்கு,
விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையனார் சிவகோசரியார்**
(உதவிக் கல்விப் பணிப்பளார் - உடற்கல்வி, தென்மராட்சி)

தோற்றம்
23.03.1963

மறைவு
04.03.2010

திதி:பஞ்சமி
(12.03.2012)

எம் குல விளக்கு இடையிலே
எம்மை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் ஆனதே!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எம் நெஞ்சில் நினைவிருக்கும் தெய்வத்துக்கு
எமது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

அம்மா, மனைவி, பிள்ளைகள்.

சிவபுரம், கொடிகாமம். (15566) (2-6-9)

## மரண அறிவித்தல்

### ஷலோம் நீல் வொஷிங்ரன்

டென்மார்க் ராம் நகரத்தை வசிப்பிடமாகவும், தற்போது சில்காபோ நகரில் வசித்தவருமான ஷலோம் நீல் வொஷிங்ரன் (06.03.2012) செவ்வாய்க்கிழமை அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.



அன்னார் சில்காபோ நகரில் வாழும் சுகந்தி நனா நீல் வொஷிங்ரன் தம்பதியரின் அருந்தவப் புதல்வனும், திரு.திருமதி தளையசிங்கம் தம்பதியர் (டென்மார்க்), திரு.திருமதி டொரின் துரைநாயகம் தம்பதியர் (நோர்வே) அகியோரின் பேரனும், டென்மார்க்கைச் சேர்ந்த சங்கர், தவா, நோர் வேயைச் சேர்ந்த மஞ்சு, சர்மிளா ஆகியோரின் மருமகனும், டென்மார்க்கைச் சேர்ந்த சுபா, பாமா, சாந்தி, நோர்வேயைச் சேர்ந்த நிமால்,நிரஞ்சன் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (14.03.2012) புதன்கிழமை பி.ப13.00 மணியளவில் Anderlystkirke, Tulipan,Vej -13, 8660 Silkeborg என்னும் முகவரியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புக்கு:

| | | |
|---|---|---|
| நீல் வொஷிங்ரன் | - | 004571675250 |
| மஞ்சு நோர்வே | - | 004745807192 |
| | - | 004792690607 |

டொரின் துரைநாயகம்,
53,டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். (15576)(6-9-12)

தகவல்: பி.றெக்ஸ்

# யாழ்.மாவட்ட...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வமைக்கப்பட்டுள்ளது. அண்ணளவாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 13000 மாணவர்கள் இப் பரீட்சையில் தோற்றக்கூடிய வகையில் ஏற்பாடுகளை மாகாணக் கல்விப் பணிமனையும், யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

இப் பரீட்சையில் பிரதேசம் சார்ந்த (யாழ். மாவட்டம்) திறன், அறிவு போன்றவற்றை பரி சீல்த்தலும் அதனூடாக விழிப்புணர்வை ஏற்படுத்தலும் முக்கிய நோக்கமாகவுள்ளது. ஏனெனில் உயர்தர மாணவர்கள் அடுத்து தமது உயர் கல்விக்காகவோ, வேலைக்காகவோ, சமுதாயத் தொண்டர்களாகவோ இணைய வுள்ளவர்களாவர்.

இந்த நிலையில் அவர்கள் இவ்வாறான ஓர் விழிப்புணர்வினைப் பெறுதல் நமது மாவட்டத்தின் எதிர்கால அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் மட்டுமன்றி அபிவிருத்தி வேலைத் திட்டங்களிலும் தூரநோக்குடன் செயற்பட தூண்டுவதற்கு நாட்டுக்கு பொருத்தமான மாணவர்களை பிரதேசம் சார் அறிவுத் திறனுடன் வளர்த்தெடுக்க உதவுமென நம்பப்படுகின்றது. அத்துடன் பரீட்சை முடிவுற்றதும் வினாக்களும் விடைகளும் அனைவரும் அறியக் கூடிய வகையில் உள்ளூர் பத்திரிகைகளில் பிரசுரிப்பதாக ஏற்கனவே பலரால் ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. அதற்கமைவாக சகலவினாக்களும் விடைகளும் யாழ். மாவட்ட உள்ளூர் பத்திரிகைகளில் பிரசுரிக்கப் படும். இப் போட்டியானது பிரதேசம் சார் அறிவு, திறன் சார் தகவல்களை பரிமாற்றுகின்ற ஊடகமாகவும் அமைந்துள்ளது.

கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட வுள்ள போட்டி மிலேனியம் அபிவிருத்தி இலக்கை அடைவதற்கும், அரசால் குறிப்பிடப் படுகின்ற தூர நோக்கான கிராமிய அபி விருத்தியை திறனாலும், அனுபவத்தாலும் மேம்படுத்தக்கூடிய இயலுமையும் ஆற்றலும் கொண்ட எமது கிராம சேவையாளர்கள் தமது அறிவு, திறன், அனுபவம் ஆற்றல் போன்றவற்றை ஒருமுகப்படுத்தி வெளிப் படுத்தக் கூடிய இடர் மற்றும் வள வரைபடம் தயாரித்தலானது கிராமிய ரீதியிலான அனர்த்த முகாமைத்துவ திறன்களையும், மனப்பாங்கு தெளிவுகளையும் வழங்கக் கூடியதாக அமையும் என்பது தெளிவாகின்றது.

கிராமிய மட்டப் போட்டிக்கான திகதி, வழிகாட்டல் விடயங்கள் இம்மாத இறுதிக்குள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவின் ஆலோசனைக்கு அமைவாக சகல உள்ளூர் பத்திரிகைகளிலும் வெளியிடப் படுவதோடு கிராம சேவையாளர்களுக்கான இரண்டாவது முழுநாள் பயிற்சி பட்டறை சித்திரை மாதப் பிற் பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் செயற்பாடுகளில் டெங்கு நோய் பரவல், நீரில் மூழ்கி இறத்தல் போன்றவற்றை குறைப்பதற்கும், தவிர்ப்பதற்குமான விழிப்புணர்வுகள், சிரமதான வேலைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயற் படுத்தி வருகின்றது.

அதுமட்டுமன்றி பாடசாலைகள், முன் பள்ளிகள், தனியார் கல்வி நிறுவனங்கள், வியாபார நடவடிக்கைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற வற்றில் அனர்த்தம், இடர் ஏற்படின் வெளி யேறக் கூடிய திட்டம் , பாதுகாப்பான இடங்களை அடையாளப்படுத்தல் போன்ற நடவடிக் கைகளையும் மிக விரைவில் நடைமுறைப் படுத்தவுள்ளது. ✱

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரில் உள்ள கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக ஏ-9 வீதியில் இருந்து இரண்டு பக்கங்களும் பிரதான வீதிகளுடன் இணைந்த வீட்டுக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779781223, 0715867756

## வேலை ஆள்கள் தேவை

கேபிள் T.V. வயறிங்,
வேலைகள் தெரிந்த,
அனுபவமுள்ளவர்கள் மற்றும்
உழவு இயந்திர சாரதி
ஆகியோர் தேவை.
தொடர்பு: 077 4766965

(15572)(6-9-8)

## பண்ணை பராமரிப்பு முகாமையாளர் தேவை

இருக்கவேண்டிய தகுதிகள்

1. முக்கியமாக மோட்டார் பைக் இருக்கவேண்டும்
2. சொந்த கையடக்க தொலைபேசி வைத்திருக்கவேண்டும்
3. ஈமெயில், இன்டர்நெட் பாவிக்க தெரிந்தவராக இருக்கவேண்டும்
4. தங்கும் இடவசதி உண்டு அல்லது காலை ஆறு மணியில் இருந்து இரவு ஆறு மணி வரைக்கும் வேலை செய்யக்கூடியராக இருக்க வேண்டும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: றமேஸ்

1. Go - ram@hotmail.com
2. Rameshrasa59 (skype)

(15577)(7-9-8)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





ஜெயராசா தங்கராணி
பிறப்பு: 27★ 08 ★1960
இறப்பு: 13★ 02 ★2009

ஜெயமனோகரன் அற்புதராணி
பிறப்பு: 07★ 05★1962
இறப்பு: 13★ 02★2009

மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எம் இதயத்தில் எப்போதும் நீங்கா நினைவுகளுடன்
உள்ள எம் மாதர்சங்கத்தின் முன்னாள் பொருளாளருமாகிய
ஜெயராசா தங்கராணியினதும் அவருடைய சகோதரியினதும்
ஆத்ம சாந்திக்காக அன்புடன் பிரார்த்திக்கின்றோம்.

(14062) (6,9,12)

முகவரி:
711,சிவிச்சென்ரர்,
வட்டக்கச்சி, கிளிநொச்சி

தகவல்:
மாதர்சங்கம்,
மருதநகர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**சரவணமுத்து பழனிவேல்**
(ஓய்வுபெற்ற சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)


தோற்றம்
17 ★ 11★ 1938

மறைவு
11 ★ 02★ 2012

எமது குடும்பத் தலைவர் அமரர் சரவணமுத்து பழனிவேல் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.03.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (15561) (2-7-9) - குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



அமரர்
**கிருஷ்ணபிள்ளை பாக்கியம்**
(கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை)

தோற்றம்
15★08★1922

மறைவு
11★02★2012

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த - நீவிர்
மண் விட்டு சென்று சிவன் பதம் கண்டீர்
நீவிர் விட்ட விழுதுகள் நாம் இங்கே
உன் பாசம் தேடிக் கண்ணீர் சொரிவதை
உமை அழைத்த காலன் அறிவானோ?

(15563) (2-6-9)

(11.02.2012) அன்று கிருஷ்ணபிள்ளை பாக்கியம் அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்த அன்புள்ளங்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் பிரசுரித்தவர்களுக்கும் மலர் மாலை, மலர் வளையம் அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.03.2012) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோயில் வீதி,
மாகியம்பதி, சண்டிலிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசரென்கா அசத்தல்



அமெரிக்காவில் நடைபெற்று வரும் இண்டியன் வெல்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள விக்டோரியா அசரென்கா இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றார்.

இண்டியன் வெல்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டியின் இரண்டாவது சுற்றில் சர்வதேச தரவரிசையில் முதலிடத்தில் உள்ள பெலாரஸை சேர்ந்த விக்டோரியா அசரென்காவும், தரவரிசையில் 37 வது இடத்தில் உள்ள ஜேர்மனியின் மோனா பார்தெல் இருவரும் மோதினர்.

இப்போட்டியில் ஜேர்மனியின் மோனா பார்தெல், அசரென்காவுக்கு சுமார் 3 மணி நேரம் கடும் நெருக்கடியை அளித்தார். இறுதியில் 6-4, 6-7(4-7), 7-6,(8-6) என்ற கணக்கில் அசரென்கா வெற்றி பெற்றார்.

அசரென்காவுக்கு கடும் நெருக்கடி அளித்தது குறித்துப் மோனா கூறுகையில், இப்போட்டிக்காக கடுமையாகப் பயிற்சி மேற்கொண்டேன். எனினும் முதல் நிலை வீராங்கனைக்கு எதிரான போட்டி என்பதால் கடினமாக இருந்தது.

இப்போட்டியில் வெற்றி பெற முடியாதது எனக்கு வருத்தம்தான். ஆனால் மீண்டும் இதேபோன்ற ஒரு வாய்ப்பு கிடைக்கும். இந்த ஆண்டு இறுதிக்குள் ரென்னிஸில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடிப்பேன் என்று கூறினார்.

இதற்கு முன்பு கடந்த மாதம் டுபாயில் நடைபெற்ற ரென்னிஸ் போட்டியின்போது காயம் காரணமாக பாதியிலேயே அசரென்கா வெளியேறினார். அதன் பின்பு இந்தப் போட்டியில்தான் மீண்டும் கலந்து கொண்டார்.

வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த அசரென்கா, இந்தப் போட்டியில் எனது ஆட்டம் சிறப்பாக இல்லை. எனினும் வெற்றி பெறுவது முக்கியமானது. என்னை எதிர்த்து விளையாடிய மோனா சிறப்பாக செயல்பட்டார் என்றார்.

மற்றொரு போட்டியில் ஸ்பெயினைச் சேர்ந்த அனபெல் மெடினா 2,6, 5,7 என்ற நேர் செற்களில் இந்தியாவின் சானியா மிர்சாவை வீழ்த்தினார்.

மேலும் முன்னணி வீராங்கனைகளான செக் குடியரசைச் சேர்ந்த பெத்ரா குவித்தோவா, சீனாவைச் சேர்ந்த நா லி, ரஷ்யாவைச் சேர்ந்த கஸ்னட்சோவா, ஸ்வோனரேவா, அமெரிக்காவைச் சேர்ந்த வானியா கிங் ஆகியோரும் மூன்றாவது சுற்றுக்கு முன்னே றியுள்ளனர்.

# 2010 உலகக் கிண்ண அரையிறுதியில் சூதாட்டம்?

## இந்திய தரகர் தகவல்

**டெல்லியைச் சேர்ந்த விக்ரம் செத் என்ற சூதாட்டக்காரர் மூலமே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன**

இந்திய, பாகிஸ்தான் அணிகள் பங்குபற்றிய கடந்த ஆண்டின் உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் சூதாட்டம் இடம்பெற்றுள்ளதாக பிரிட்டனின் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டுள்ள செய்தியின் படி, இந்தியாவைச் சேர்ந்த சூதாட்டக்காரர்கள் பிரிட்டனின் பிராந்தியப் போட்டியிலும், சர்வதேசப் போட்டியிலும் இலகுவாக சூதாட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும், சர்வதேச கிரிக்கெட் சபை இதுகுறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வழங்கப்படும் ஏராளமான பணத்தின் காரணமாக போட்டியின் முடிவுகளை முன்னரே தீர்மானிப்பது இலகுவாக உள்ளதாகத் தெரிவித்த குறித்த பத்திரிகை, வீரர்களுக்கு ஏராளமான ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது. வீரர்களை சூதாட்டத்தின் பக்கம் இழுப்பதற்கு பொலிவுட் நடிகையொருவரைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கைகளில் இந்தியச் சூதாட்டக்காரர்கள் முயன்று வருவதாக அந்தப் பத்திரிகை தனது நேற்றைய செய்தியில் தெரிவித்துள்ளது.

'சண்டே ரைம்ஸின்' செய்திகளின்படி தங்கள் விசாரணைகளில் துடுப்பாட்ட வீரரொருவர் மெதுவாகத் துடுப்பெடுத்தாட 44,000ஸ்ரேலிங்பவுண்ட்ஸ்களும், அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுக்க பந்துவீச்சாளர்களுக்கு 50,000 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ்களையும், போட்டியின் முடிவுகளை மாற்றுவதாக உறுதிப்படுத்தும் வீரருக்கு 750,000 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ்களும் வழங்கப்படுவதாக கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளது.

டெல்லியைச் சேர்ந்த விக்ரம் செத் என்ற சூதாட்டக்காரர் ஒருவரே குறித்த பத்திரிகையிடம் சிக்கியுள்ளதாகவும், அவர் மூலமே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சூதாட்ட குற்றச்சாட்டு தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபை செய்தி தொடர்பாளர் கூறுகையில், 'சண்டே ரைம்ஸ்' என்ற பிரிட்டன் நாளிதழ் எங்களுக்கு பல தகவல்களை தந்துள்ளது. இந்த சூதாட்ட குற்றச்சாட்டு உண்மையிலேயே கவலை அளிக்கிறது. இதுகுறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது என்று கூறினார். (5)

# மகளிர் கிரிக்கெட் தரவரிசை; ஆஸி. முன்னணி

ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான ஐ.சி.சி வெளியிட்டுள்ள மகளிர் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணி வீராங்கனைகள் முதலிடத்தில் உள்ளனர்.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான மகளிர் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி நேற்று வெளியிட்டது. இதில் துடுப்பாட்டத்தில் 752 புள்ளிகளுடன் மேற்கிந்திய தீவுகள் அணியின் ஸ்டெபானி டெய்லர் முதலிடத்தில் உள்ளார்.

இந்திய வீராங்கனை மிதாலி ராஜ் 727 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்து இரண்டாம் இடத்துக்குப் பின் தங்கியுள்ளார். இங்கிலாந்து அணியைச் சேர்ந்த சார்லட் எட்வர்ட்ஸ் 679 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார்.

பந்துவீச்சில் 751 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த லிசா சிதாலேகர் முதலிடத்தில் உள்ளார். 743 புள்ளிகளுடன் இந்தியாவைச் சேர்ந்த ஜுலான் கோஸ்வாமி முதலிடத்தில் இருந்து இரண்டாம் இடத்திற்குப் பின் தங்கியுள்ளார். இங்கிலாந்தின் கேத்ரீன் புருன்ட் 694 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார்.

இந்திய வீராங்கனைகள் மேற்கிந்திய தீவுகளுடன் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் இருந்து இரண்டாம் இடத்திற்குப் பின் தங்கியுள்ளனர்.

# சந்தர்ப்பத்தை தவறவிட்ட சச்சின்

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்த இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் அங்கு கிடைக்க இருந்த நினைவுப் பரிசு ஒன்றை தவறவிட்டுள்ளார்.

சச்சின் ஆஸ்திரேலிய மண்ணில் தனது 100 வது சதத்தை எடுத்தால் அவருக்கு நினைவுப் பரிசு ஒன்றை வழங்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை மிகுந்த எதிர்பார்ப்புடனும், அதிக அக்கறையுடனும் இருந்தது.

ஆனால் சச்சின் சதம் அடிக்காததால் அந்தப் பரிசை பெற முடியாமல் தவற விட்டுள்ளார்.

அந்த நினைவுப் பரிசில் சச்சின் அடித்த 100 சதத்துக்குப் பாராட்டு என்று பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், டான் பிராட்மேனின் மார்பளவு சிலையையும் பரிசாக அளிக்கலாம் என்றும் நினைத்திருந்தனர்.

எப்படியும் சதம் அடித்து விடுவார் என்ற எதிர்பார்ப்பில் சச்சின் பங்கேற்ற டெஸ்ட், ஒரு நாள் போட்டிகள் நடைபெற்ற நகரங்களுக்கெல்லாம் அந்த நினைவுப் பரிசை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கையோடு எடுத்து வந்திருந்தனர். ஆனால் அது இறுதிவரை நடக்கவில்லை என்று ஆஸ்திரேலியன் பத்திரிகை சற்று நகைச்சுவையாக கூறியிருந்தது.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரில் சச்சின் டெண்டுல்கர் பங்கேற்ற மொத்தம் 7 ஆட்டங்களில் 143 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். பேர்த்தில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான போட்டியில் மட்டுமே அதிகபட்சமாக 48 ஓட்டங்கள் எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பார்வையற்றோருக்கான கிரிக்கெட் பாக். அணியை வீழ்த்தியது இந்தியா



பார்வையற்றோருக்கான கிரிக்கெட் போட்டியில், பாகிஸ்தானை 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபாரமாக வெற்றி பெற்றது.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளை சேர்ந்த பார்வையற்றோர் கிரிக்கெட் அணிகள் மோதும் போட்டிகள் சென்னையில் 10ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை நடக்கின்றன.

முதல் போட்டி ஐ.ஐ.டி மைதானத்தில் நேற்று நடந்தது. இந்திய அணி தெரிவுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் போட்டியை தொடக்கி வைத்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 200 ஓட்டங்கள் குவித்தது. அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் 18.5 ஓவரில் 147 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

எனவே இந்தியா 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. அதிகபட்சமாக 84 ஓட்டங்கள் விளாசிய(59 பந்து, 10 பவுண்டரி) பாகிஸ்தான் வீரர் முகமது ஜமில் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

# காயம் காரணமாக ஓய்வு

ஆஸ்திரேலிய அணியின் தலைவர் கிளார்க் தொடைப் பகுதியில் ஏற்பட்ட தசைப் பிடிப்புக் காரணமாக அவதிப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் நான்கு வாரங்களுக்கு ஓய்வு எடுக்குமாறு கிளார்க்கை மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதனால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக எதிர்வரும் 16ஆம் திகதி தொடங்கும் ஒருநாள் போட்டித் தொடரில் கிளார்க் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.


# மரண அறிவித்தல்

## திருமதி சிவக்கொழுந்து குமாரசாமி



வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து குமாரசாமி நேற்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் விமலேந்திரன், காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் இராசாம்பிகை, தெய்வேந்திரம் ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரமதி, சறோஜினிதேவி, மகாலிங்கம், அன்னலக்சுமி, காலஞ்சென்ற தெய்வநாயகி ஆகியோரின் மாமியும் சசிகலா, சசிகரன், தர்ஷினி (ஜேர்மனி), கிருஷ்ணரூபன் (ஜேர்மனி), ஆனந்தரூபன் (நெதர்லாந்), இராஜசுரேஸ் (லண்டன்), இராஜரமேஸ் (ஜேர்மனி), அனுசாந்தன் (ஜேர்மனி), சசித்திரா (கனடா), மயூரன் (கனடா), காலஞ்சென்ற வஜிதா, நிரூபா மற்றும் ஜெயரூபன், ஜெயதீஷன், ஜெயபாலன், ஜெயசாந்தன், ஜெயசுதன், ஜெயறஞ்சன், ஜெயந்தினி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சிவபாக்கியம், கந்தையா, சின்னையா மற்றும் இரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, இராசம்மா, தங்கம்மா, சின்னம்மா, கைலாயபிள்ளை, அருளம்பலம் மற்றும் கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாதரவத்தை,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் புவனசுந்தரம்

*(உரிமையாளர், P.R.P. அன் சன்ஸ், நெஷனல் லேத்சென்ரர் வவுனியா)*



யாழ்ப்பாணம், கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் இல 395/131, ஜோசப்வாஸ் லேன், இறம்பைக் குளத்தை வாழ்விடமாகவும் கொண்ட இராமலிங்கம் - புவனசுந்தரம் கடந்த (10.03.2012) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராசநாயகம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் வளர்மதியின் அன்புக் கணவரும் காயத்திரி, கஸ்தூரி, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானசீலன், நிஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரீதேவி, ஜெயதேவி, சிவதேவி, குருநாதன், சபேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கலாமதி, சுடர்மதி, மனோராஜ், சந்திரராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல 395/131, ஜோசப்வாஸ் லேனில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இறம்பைக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஜோசப்வாஸ் லேன்'
இறம்பைக்குளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கத்தை வென்றது வட்மோர் படை

வங்கப் புலிகளுடனான மோதலில் உமர் குல் சகலதுறைகளிலும் ஜொலிக்க பாகிஸ்தான் அணி 21 ஓட்டங்களால் வெற்றியை தனதாக்கியது. வட்மோர் பயிற்சியாளராகப் பொறுப்பேற்ற பின்னர் பாகிஸ்தான் அணி தனது முதலாவது ஆட்டத்திலேயே வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் நேற்று ஆரம்பமானது. இதில் பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் முஷ்பிகுர் ரகிம் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ஹபீஸ் மற்றும் நஷீர் இருவரும் நிதானமாகவே ஓட்டங்களைச் சேர்த்தனர். ஆட்டத்தின் 8.2 ஆவது பந்தை மோட்ரசா வீச ஹபீஸ் எதிர்கொண்டு ஓட்டம் பெற முற்பட்ட சமயத்தில் நஷீர் 'ரன்அவுட்டாகும்' வாய்பிருந்தும் வீணாக்கப்பட்டது.

மெதுவாக நகர்ந்த பாகிஸ்தானின் ஓட்ட எண்ணிக்கை முதலாவது பவர்பிளே முடிவில் 36 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. 13 ஆவது பந்து பரிமாற்றத்தில் கிடைத்த 'பிரீ ஹிட்டையும்' இந்த ஜோடி உரிய வகையில் பயன்படுத்தவில்லை. இருப்பினும் பந்து வீச்சு பவர்பிளேயில் மீண்டெழுந்த பாகிஸ்தான் அணி 5 பந்து பரிமாற்றங்களில் 37 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. 27 ஆவது பந்து பரிமாற்றத்தில் நஷீரை ஆட்டமிழக்கச் செய்ய கிடைத்த 'ரன் அவுட்டை'யும் பங்களாதேஷ் வீணாக்கியது. மெதுவாக ஆடிய போதும் ஹபீஸ் 72 பந்துகளில் தனது 13 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

தொடர்ந்தும் கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்த தவறிய நஷீர் தனது 5 ஆவது அரைச்சதம் கடந்த சிறிது நேரத்தில் 'ரன்அவுட்டானார்'. தொடர்ந்து நுழைந்த யுனிஸ்கான் சிறிது நேரத்திலேயே ஆட்டமிழந்தார். ஆரம்பத்திலிருந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ஹபீஸ் 11 ஓட்டங்களால் தனது 47 ஆவது சதத்தை தவறவிட்டார். பாகிஸ்தான் அணி துடுப்பாட்ட பவர்பிளேயை தெரிவு செய்ததும் பாகிஸ்தானின் சரிவு ஆரம்பமாகியது. அதிரடியாக ஓட்டங்கள் குவிக்க முயன்று உமர் அக்மல், அஷாட் சபிக், பூம் பூம் அப்ரிடி ஆகியோரை இழந்தது. துடுப்பாட்ட பவர்பிளேயில் பாகிஸ்தான் அணி 3 இலக்குகளை இழந்து 22 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இருப்பினும் களத்தில் மிஷ்பா உல் ஹக் இருந்ததால் பாகிஸ்தான் ஓட்டங்களை குவிக்கும் என்று எதிர்பார்த்த போதும் மிஷ்பாவும் ஏமாற்ற 198 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தடுமாறியது.

அதன் பின்னர் இணைந்த உமர்குல், அஹமட்டுடன் இணைந்து பாகிஸ்தானின் ஓட்ட எண்ணிக்கையை சடுதியாக உயர்த்தினார். பாகிஸ்தான் அணி 50 பந்து பரிமாற்றங்களில் 262 ஓட்டங்களை 8 இலக்குகளை இழந்து எட்டியது.

பதிலுக்கு கடின இலக்கை விரட்டத் தொடங்கிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால், நஷிமுதீன் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். முதலாவது பந்து பரிமாற்றம் ஓட்டமற்றதாக ஆரம்பிக்கப்பட்டாலும் பின்னர் சுதாகரித்து முதல் பத்து பரிமாற்றங்களில் 43 ஓட்டங்களைப் பெற்றனர். அதிரடியில் முனைப்புக் காட்டிய நஷிமுதீன் அதிரடிக்கு தொடர்ந்தும் முயற்சிக்கையில் ஷீமாவின் வேகத்தில் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து நுழைந்த ஜகருல் ஸ்லாம், இக்பாலுடன் இணைந்து பங்களாதேஷின் ஓட்ட வேகத்தை சரிய விடாது போராடினார். இவர்களது இணைப்பினை பிரிக்க அப்ரிடி அழைக்கப்பட்டார். அப்ரிடியின் சுழலில் அடுத்தடுத்து பங்களாதேஷின் இலக்குகள் சரிந்தன. இருந்தும் மறுமுனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கி நிலைத்து நின்ற இக்பால் 75 பந்துகளில் தனது 20 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். ஹபீஸின் சுழலில் சிறப்பாக ஆடிய இக்பாலும் அடுத்து களமிறங்கிய மகமதுல்லாவும் ஆட்டமிழந்தனர். மகமதுல்லாவின் எல்.பி. டபிள்யூ ஆட்டமிழப்பு எனினும் 'ரீ.வி ரீப்பிளேயில்' ஆட்டமிழப்பில்லை என்று தெரிந்தது. ஆனாலும் மேன்முறையீடு இல்லாததால் அவர் வெளியேற வேண்டி வந்தது.

அதன் பின்னர் பாகிஸ்தான் அணிக்கு சனியன் பிடித்தது. சகிப் அல் ஹசன், நஷார் ஹொசைன் இருவரும் இணைந்து ஓட்டங்களைக் குவித்தனர். ஆரம்பத்தில் அடுத்தடுத்து இலக்குகளை இழந்ததால் தடுமாறியபோதும் துடுப்பாட்ட பவர்பிளேயினை எடுத்த பின்னர் வெளுத்து வாங்கினர். இவர்களின் அதிரடியில் பங்களாதேஷ் அணி வெற்றியின் பாதையில் பயணிக்கத் தொடங்கியது.

வேகமாக வெற்றியை நோக்கி முன்னேறிய பங்களாதேஷ் அணிக்கு 'ஸ்பீட் பிரேக்கர்' போட்டார் உமர் குல். 44 ஆவது பந்து பரிமாற்றத்தில் நஷார் ஹொசைனை வெளியேற்ற பங்களாதேஷ் ரசிகர்களின் உற்சாகம் அடங்கியது. மறுமுனையில் சகிப் போராடிய போதும் சயிட் அஜ்மலும் பங்களாதேஷின் இலக்குகளை கொய்து எடுக்க பாகிஸ்தானின் வெற்றி உறுதியானது. தனித்து போராடிய சகிப் 51 பந்துகளில் தனது 23 ஆவது அரைச்சதத்தை கடந்தார்.

இறுதியில் பங்களாதேஷ் அணி 11 பந்துகள் மீதமிருக்கையில் 21 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் மொஹமட் ஹபீஸ் தெரிவானார். (5)



மொஹமட் ஹபீஸ்

## பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்

மிர்பூர் மைதானம்

பாகிஸ்தான் 262/8 (50) பங்களாதேஷ் 241 (48.1)

பாகிஸ்தான் அணிக்கு 21 ஓட்டங்களால் வெற்றி

ஆட்ட நாயகன்: மொஹமட் ஹபீஸ்

### பாகிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | c சபியுல் இஸ்லாம் b ஹுசைன் | 89 | 126 | 7 | 0 |
| நசீர் ஜேம்ஸ்ட் | run out (சஹீப் அல்ஹசன்) | 54 | 64 | 5 | 1 |
| யூனிஸ்கான் | c அப்துர் ரசாக் b ஹுசைன் | 12 | 15 | 1 | 0 |
| உமர் அக்மல் | c அப்துர் ரசாக் b சஹீப் அல்ஹசன் | 21 | 20 | 2 | 0 |
| அசாட் சபீக் | c மோட்ரசா b ஹுசைன் | 4 | 6 | 0 | 0 |
| மிஸ்பா உல்ஹக் | b அப்துர் ரசாக் | 8 | 13 | 0 | 0 |
| சயீட் அப்ரிடி | c&b சஹீப் அல்ஹசன் | 0 | 1 | 0 | 0 |
| சர்ப்ராஸ் அஹ்மட் | (ஆட்டமிழக்காமல்) | 19 | 28 | 0 | 0 |
| உமர் குல் | b மோட்ரசா | 39 | 25 | 5 | 1 |
| சயீட் அஜ்மல் | (ஆட்டமிழக்காமல்) | 8 | 3 | 1 | 0 |

உதிரிகள் 8

மொத்த ஓட்டங்கள் 262

இலக்கு இழப்பு: 1-135, 2-160, 3-169, 4-175, 5-192, 6-193, 7-198, 8-251

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மோட் ரசா | 10 | 0 | 55 | 1 |
| சபியுல் இஸ்லாம் | 8 | 0 | 49 | 0 |
| சஹீப் அல்ஹசன் | 10 | 0 | 41 | 2 |
| சஹ்தட் ஹுசைன் | 8 | 0 | 53 | 3 |
| அப்துர் ரசாக் | 10 | 0 | 43 | 1 |
| மஹமதுல்லா | 4 | 0 | 19 | 0 |

### பங்களாதேஷ்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தமீம் இக்பால் | b மொஹமட் ஹபீஸ் | 64 | 89 | 6 | 1 |
| நசீமுடின் | c உமர்குல் b ஐசஸ் சீமா | 30 | 33 | 4 | 1 |
| யாஹூரூல் இஸ்லாம் | b அப்ரிடி | 23 | 31 | 3 | 0 |
| முஸ்பிஹூர் ரஹீம் | b அப்ரிடி | 3 | 5 | 0 | 0 |
| சஹீப் அல்ஹசன் | b உமர்குல் | 64 | 66 | 4 | 0 |
| மஹமதுல்லா | lbw மொஹமட் ஹபீஸ் | 0 | 1 | 0 | 0 |
| நசீர் ஹுசைன் | b உமர்குல் | 47 | 49 | 3 | 1 |
| அப்துர் ரசாக் | b சயீட் அஜ்மல் | 1 | 3 | 0 | 0 |
| மோட் ரசா | b சயீட் அஜ்மல் | 1 | 3 | 0 | 0 |
| சபியுல் இஸ்லாம் | lbw உமர்குல் | 1 | 2 | 0 | 0 |
| சஹ்தட் ஹுசைன் | (ஆட்டமிழக்காமல்) | 0 | 7 | 0 | 0 |

உதிரிகள் 7

மொத்த ஓட்டங்கள் 241

இலக்கு இழப்பு: 1-45, 2-90, 3-100, 4-135, 5-135, 6-224, 7-228, 8-230, 9-235, 10-241

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | 10 | 1 | 40 | 2 |
| உமர்குல் | 9.1 | 0 | 58 | 3 |
| சயீட் அஜ்மல் | 10 | 0 | 45 | 2 |
| ஐசஸ்ஷீமா | 9 | 0 | 47 | 1 |
| சயீட் அப்ரிடி | 10 | 0 | 49 | 2 |





# மழை பறித்தது வெற்றியை

நியுஸிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் நியுஸிலாந்து அணிக்கும் இடையிலான மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

நியுஸிலாந்தின் டனேடனில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் ஐந்தாம் நாளான நேற்று, மழை காரணமாக எந்தவொரு பந்து பரிமாற்றங்களும் வீசப்படாது ஆட்டம் கைவிடப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 238 ஓட்டங்களையும், பதிலளித்தாடிய நியுஸிலாந்து அணி 273 ஓட்டங்களையும் பெற்றது. தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்ஸில் 5 இலக்குகளை இழந்து 435 ஓட்டங்களைப் பெற்று தனது இனிங்ஸை இடைநிறுத்தி நியுஸிலாந்து அணிக்கு 401 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

401 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியுஸிலாந்து அணி நேற்று முன்தினம் ஆட்டமுடிவில் 2 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்த நிலையில் நேற்றைய ஆட்டம் மழை காரணமாக இடம்பெறாததால் முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரேம் ஸ்மித் தெரிவானார். (5)




# எனது ஓய்வு இப்போதில்லை

இந்தியாவின் கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் மிகவும் எதிர்பார்க்கப்படும் 100 ஆவது சர்வதேச சதத்தைப் பெற்றதும் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக வெளியான செய்திகளை மறுத்துள்ளார்.

இந்திய செய்தி அலைவரிசை ஒன்றிற்கு அனுப்பி வைத்த குறுஞ்செய்தி ஒன்றில் அவர் இத்தகைய ஓய்வு பற்றிய செய்திகளை மறுத்துள்ளதாக குறித்த செய்தி அலைவரிசை குறிப்பிட்டது.

இந்திய அணியின் சிரேஷ்ட வீரர்கள் மீது காணப்படும் அழுத்தங்கள் காரணமாக அந்த வீரர்களின் ஓய்வு குறித்த செய்திகளுக்கு ஊடகங்களில் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அணியின் மற்றுமொரு நட்சத்திர வீரரான ராகுல் ட்ராவிட் தனது ஓய்வை [illegible]யில் ஏனைய சிரேஷ்ட வீரர்களின் நிலை குறித்து ஆர்வம் காணப்படுகிறது. [illegible]க்கு முன் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் போட்டியிலிருந்து விரைவில் ஓய்வுபெறவுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் சில வெளியாகியிருந்தன. அவற்றையே டெண்டுல்கர் மறுத்துள்ளதாக குறித்த செய்தி அலைவரிசை தெரிவித்துள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி படைப்பிரிவால் பாடசாலைகளிடையே உதைபந்து



பருத்தித்துறை, மார்ச் 12
வடமராட்சியில் நிலை கொண்டுள்ள 521 ஆவது பிரிகேட் படைப்பிரிவினால் வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையே உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டி ஆண்களுக்கான 17 வயதுப் பிரிவுப் பிரிவு, 19 வயதுப் பிரிவுகளுக்கே நடத்தப்படவுள்ளது. கோட்ட மட்டம், வலய மட்டங்களில் விலகல் முறையிலேயே இந்தப் போட்டி நடத்தப்படவிருக்கிறது. கோட்ட மட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பாடசாலைகள் வலய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், இறுதிப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பாடசாலைகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளன.



இந்தப் போட்டியில் பங்குபெறவுள்ள பாடசாலைகள் வடமராட்சிக் கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில்விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-190)

## மறவன்புலோ அம்பிகா வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென்கிழக்கு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின் ஒளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மறவன் புலோ அம்பிகா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. மறவன்புலோ அம்பிகா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி வளர்மதி 'ஏ' அணி மோதிக்கொண்டது.

இதில் மறவன்புலோ அம்பிகா வி.க. அணி 6:5 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## 17 வயதுப் பிரிவு வலைப்பந்து இராமநாதன் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு, மார்ச் 12
உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் இராமநாதன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சமநிலை பெற்ற அணிகளாகக் காணப்பட்ட போதிலும் இராமநாதன் கல்லூரி தனது மதிநுட்பத்தைப் பயன்படுத்தி வெற்றி வாய்ப்பைத் தனதாக்கிக்கொண்டது.

முதல்பாதி ஆட்டத்தில் 09:06 புள்ளிகள் என்ற நிலையில் இராமநாதன் கல்லூரி முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றி வாய்ப்பைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி கடுமையாக மோதிக்கொண்டமை ரசிகர்களை உற்சாகப் படுத்தியது.

ஆட்ட முடிவில் இராமநாதன் கல்லூரி மீண்டும் 11:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் இரண்டாம் பாதியையும் வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி 20: 16 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரியை வெற்றி கொண்டு கோட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (ம-86)

## வவுனியா வலயப் போட்டிகள்

வவுனியா வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்திலும் உள்ளக விளையாட்டான மேசைப் பந்தாட்டம் நகரசபை ஆடுகளத்திலும் இடம்பெறவுள்ளது என்று வவுனியா தெற்கு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். சுபைர் தெரிவித்துள்ளார். (ம-400)

## மெய்வன்மைப்போட்டிகள்

சாவகச்சேரி, மார்ச் 12
சரசாலை சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திருமதி ஜெ.தேவேஸ் வரன் தலைமையில் நடைபெறும். இந்தப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் த.ஸ்ரீகாந்தரூபன், தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. சிவகுமாரும் கலந்துகொள்வர்.(வ-9)

* * *

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு விநாயகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தியும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உத விக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, வித்தியாலய முன்னாள் அதிபர் செ.சிவஞானம் ஆகியோரும் கலந்துகொள்வர். (வ-9)


## வடமராட்சி வலய மாணவரின் வலைப்பந்தாட்டப்போட்டி முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 12
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு,

15 வயதுப் பிரிவு - மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வடஇந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. 17 வயதுப் பிரிவு - வட இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வல்வை மகளிர் வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வடஇந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். (ம-23

# அகில இலங்கை கூடைப்பந்தாட்டம் யாழ். மாவட்ட அணி சம்பியன்



வலி.வடக்கு, மார்ச் 12
இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கம் அகில இலங்கை ரீதியில் நடத்திய 'பி' பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி முதல் தடவையாகச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பொலிஸ் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கண்டி மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

நான்கு கால் பாதி ஆட்டங்களைக்கொண்ட இந்தப் போட்டியில் முதல் கால் பாதி ஆட்டத்தில் கண்டி மாவட்ட அணி 15:09 என்ற புள்ளி அடிப்படையில் இருந்தது.

இரண்டாம் கால்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வேகமாக விளையாடிய போதிலும் மீண்டும் கண்டி மாவட்ட அணி கடும் எதிர்ப்பை வெளியிட்டது. இருந்த போதும் போட்டியில் யாழ். மாவட்ட அணி இறுதி செக்கனில் பெற்ற இரண்டு புள்ளிகளுடன் 29:29 புள்ளிகள் என சம நிலையில் காணப்பட்டது.

மூன்றாம் கால்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் களத்தில் தமது திறனை வெளிப்படுத்தி விளையாடுவது என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக்கொண்டன. இரு அணிகளும் மற்றைய அணி புள்ளிகள் பெறும் வாய்ப்பை தடுத்து விளையாடிய நிலையில் யாழ். மாவட்ட அணி 22:05 புள்ளிகள் என்று முன்னிலை பெற்றது.

இறுதி கால்பாதி ஆட்டத்தை இரு அணிகளும் சவாலுடன் ஆடினர்.

இரு அணிகளும் வாழ்வா சாவா என்ற மன நிலையில் மோதிக் கொண்டமை ரசிகர்களை மிகவும் உற்சாகப்படுத்தியது.

இந்த நிலையில் யாழ். மாவட்ட அணி 15:08 புள்ளிகள் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அணி 75: 57 புள்ளிகள் என்ற அடிப்படையில் கண்டி மாவட்ட அணியை வெற்றி பெற்று 'பி' பிரிவில் அகில இலங்கை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ம-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென்கிழக்கு சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் உதயசூரியன் 'ஏ' அணியை எதிர்த்து வளர்மதி 'பி' அணி மோதவுள்ளது. (ம-23)

***

யாழ்ப்பாணம், மார்ச் 12
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இன்று மேசைப்பந்தாட்டப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

வல்வை மகளிர் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டியில் 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

நாளை ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியில் ஆண்களுக்கான போட்டி மனோகர விளையாட்டுக்கழக மைதானத்திலும் பெண்களுக்கான போட்டி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

14 ஆம் திகதி 15 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## மைக்கல், ஞானம்ஸ் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தெரிவு



வடமராட்சி, மார்ச் 12
வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்திய இருபதுக்கு இருபது கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு மாலுசந்தி மைக்கேல் அணியும், கரவெட்டி ஞானம்ஸ் அணியும் தெரிவாகியுள்ளன.

வடமராட்சி பிரசேத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட 32 விளையாட்டுக் கழகங்கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டன. போட்டிகள் யாவும் நெற்கொழுவில் கொலின்ஸ் கழக மைதானத்தில் நடைபெற்றன.

இச்சுற்றுப்போட்டியில் அரை இறுதி ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மோதி ஞானம்ஸ் அணி வெற்றிபெற்றது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் மாலிசந்தி மைக்கல் அணியும் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிட்டு மைக்கல் அணி வெற்றி பெற்றது. விரைவில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில்கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மாலுசந்தி மைக்கல் அணியும் மோதவுள்ளன. (ம-8)

## சதுரங்கப் போட்டி முடிவு

வவுனியா, மார்ச் 12
வவுனியா தெற்கு கல்வி வலய சதுரங்கச் சுற்றுப்போட்டி வவுனியா திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள் விவரம் வருமாறு:-

**15 வயதுக்குக் கீழ் ஆண்கள்**

முதலாமிடம் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - வவுனியா விபுலாணந்தாக்கல்லூரி, மூன்றாமிடம் - வெளிக்குளம் கனிஷ்ட இடைநிலை பாடசாலை.

**19 வயதுக்குக்கீழ் ஆண்கள்**

முதலாமிடம் - வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், இரண்டாமிடம் - வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை.

**15 வயதுக்குக்கீழ் பெண்கள்**

முதலாமிடம் - இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் - வவுனியா சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம், மூன்றாமிடம் வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்.

**19 வயதுக்குக் கீழ் பெண்கள்**

முதலாமிடம் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம். (ம-23)

# கரப்பந்து அரையிறுதியில் ஐக்கிய வி.க. வெற்றி

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் இளவாலை இளம்சுடர் விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி நிறைவடையும் வரை காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழத்தின் கைகளே மேலோங்கிக் காணப்பட்டது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

முதல் இரண்டு சுற்றுக்களையும் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:10, 25:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் இளவாலை இளம்சுடர் விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்று இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. பிரேரணையை ஆதரித்து இந்தியா தனது இருப்பைப் பலப்படுத்த வேண்டும்

### வாய்ப்பைத் தவறவிடக் கூடாது என்கிறது இந்திய ஊடகம்

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மிகப்பெரிய நாடான இந்தியா, ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்து தனது இருப்பை மேலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான நல்வாய்ப்பை இந்தியா தவறவிடக் கூடாது.

- இவ்வாறு இந்தியாவில் இருந்து வெளிவரும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேட்டில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இந்தியாவானது தனது தலைமைத்துவத்தை மிகச் சரியாக, உறுதியாகப் பிரயோகிப்பதுடன், இலங்கை விவகாரம் தொடர்பில் உறுதியான தீர்வையும் நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

மனித உரிமை விவகாரம் தொடர்பில் இந்தியாவானது அனைத்துலக மட்டத்தில் துணிச்சல் மிக்க, மிக நம்பிக்கையான நிலைப்பாட்டை எடுப்பதற்கான தகுந்த நேரம் வந்துவிட்டது.

அனைத்துலக விவகாரங்களில் இந்தியாவின் தலையீடு செய்வதானது அதிகரித்து வரும் நிலையில், இலங்கையின் மனித உரிமை விவகாரங்களிலும் இந்தியா தனது தலைமைத்துவ அதிகாரத்தைக்கொண்டு கோரிக்கையை விடுக்கவேண்டும்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றான இந்தியாவானது தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் தனது வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் முன்னேற்றத்தைக் காண்பிப்பதற்கான சிறந்த நல்வாய்ப்பைக் கொண்டுள்ளது. ஆகவே, இந்தியாவானது இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் முன்வைக்கப்படவுள்ள பிரேரணையை ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.

**மனித உரிமை விவகாரம் தொடர்பில் இந்தியாவானது அனைத்துலக மட்டத்தில் துணிச்சல் மிக்க, மிக நம்பிக்கையான நிலைப்பாட்டை எடுப்பதற்கான தகுந்த நேரம் வந்துவிட்டது.**

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் விவகாரம் தொடர்பாக விவாதிப்பதற்காக 2009 இல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அவசர கூட்டத் தொடர் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தொடரில், இந்தியாவானது இலங்கை மீதான அனைத்துலக குற்றச்சாட்டுகள் மற்றும் அதன் மீதான அனைத்துலக விசாரணைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாத்தது.

ஆனால், இக்கூட்டத் தொடர் இடம்பெற்று மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில், இலங்கையானது தனது நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதி நாட்களில் மேற்கொள்ளப்பட்ட யுத்த மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான மீறல்களை வெளிக்கொணர்வதில் மிகச் சிறியளவிலான நகர்வை எடுத்துள்ள நிலையிலேயே தற்போது மீண்டும் அடுத்த கூட்டத் தொடர் இடம்பெறுகின்றது.

இலங்கை அரசானது தனது நாட்டில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் போதுமான அளவு பொறுப்பைக் கூறவில்லை என்பதையும், அது தொடர்பில் அனைத்துலக சட்டங்களை மீறியுள்ளதுடன், சுயாதீன அனைத்துலக விசாரணை ஒன்றுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டும் விதமாகவே மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்று முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பில் இலங்கையானது செயற்றிட்டம் ஒன்றை வரைந்து அதனை மனித உரிமைகள் பேரவையிடம் அறிக்கையிடுவதுடன் அதனைச் செயற்படுத்த வேண்டும் எனவும் இப்பிரேரணை மூலம் இலங்கையிடம் கோரிக்கை விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. வேறு வழியில் கூறுவதானால், இலங்கையானது தனது நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதில் மேலும் பல சிறந்த நகர்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான நகர்வுகளை உலக நாடுகள் கண்காணிக்கும்.

கெடுவிளைவாக, தற்போது இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ள பிரேரணையானது உண்மையில் போதியளவானதாக இருக்கவில்லை. இலங்கையில் அனைத்துலக விசாரணைகள் மிக வேகமாக மேற்கொள்ளப்படவேண்டும் என இப்பிரேரணை மூலம் அழைப்பு விடுக்கப்படாமையானது அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில், இனி வருங்காலங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் எடுக்கப்படும் முயற்சிகளில் இலங்கையில் இடம்பெற்ற யுத்த கால மீறல்கள் தொடர்பில் நீதி, பொறுப்பளித்தல், அனைத்துலக விசாரணை போன்றவை உள்ளடக்கப்பட வேண்டும். ஆகவே, இலங்கைக்கு எதிராக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இப்பிரேரணைக்கு சார்பாக வாக்களிக்க வேண்டும்.

இது இலங்கை விவகாரம் தொடர்பில் சரியான திசை நோக்கி நகர்வதை எடுத்துக் காட்டும். ஆனால் இலங்கை விவகாரத்தில் உடனடியாகத் தேவைப்படும் நீதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமிடத்தே அது இறுதியான, உறுதியான நகர்வாக இருக்க முடியும்.

இந்தியாவானது இலங்கையிடம் தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது வெளிப்படையாகவோ அதன் மீறல் விவகாரங்களில் எதனையும் கேட்டுக்கொள்வதற்கேற்ற முறையில் இப்பிரேரணை தயாரிக்கப்படவில்லை என்பதே இந்தியாவின் கருத்தாகும். இந்தியாவானது தனது பிராந்திய நலனையே அதிகம் கருத்திற் கொள்கின்றது.

இந்தியா உட்பட உலக நாடுகள் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆதரவாக இருக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மிகப் பெரிய நாடான இந்தியா தற்போது முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கு சார்பாக வாக்களித்து தனது இருப்பை மேலும் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கான நல்வாய்ப்பை இந்தியா தவறவிடக் கூடாது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்

(சிறுகதை எழுத்தாளர், கவிஞர், ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், கல்வித்திணைக்களம்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாவும் கொண்ட தம்பிப்பிள்ளை - ஆனந்தமயில் நேற்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திருமேனிப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும் நகுலேஸ்வரியின் பாசமிகு கணவரும் பூபதி, சின்னமணி, நல்லம்மா ஆகியோரின் சகோதரனும், தீபவர்ணன், தாமரைவர்ணன், காலஞ்சென்ற நிரூபவர்ணன் மற்றும் நித்தியவர்ணன் (விரிவுரையாளர்-கல்வியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்), ரூபவர்ணன், ஜீவவர்ணன், முல்லைத்திவ்வியன் (மாணவன்-யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), வர்ணாம்பால் (ஆசிரிய மாணவி-கோப்பாய், கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஸ்யந்தி, ரஞ்சினிமாலா, நிசாந்தினி (ஆசிரியை-யா/கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி) ஆகியோரின் மாமனும், இசைக்கோ, தக்ஷனா, கிருஜன் ஆகியோரின் பேரனும், கார்த்திகா, பாஸ்கரன், ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2012) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் பொலிகண்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்தன்தறை, பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

### செபஸ்ரியன் செபமாலை



முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் செபமாலை நேற்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியன் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லபிள்ளை மற்றும் மேரிஇமெல்டா ஆகியோரின் அன்புக் கணவரும் பிறின்ஸ் செல்லகுமார், சாள்ஸ் சாந்திகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும் பத்மாதேவி, சுகுணா ஆகியோரின் அன்பு மாமனும் ராஜ்குமார், மேனகா, குமாரி எமில்டா, ஜெயசீலன், ரஜீவ்குமார், ஜெசிந்தா, சஸ்மினி, கேமன், சதீஸ், சகிதா, சாந்தினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (12.03.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நீர்வேலி பரலோக மாதா ஆலயத்தில் நடைபெற்று, நல்லடக்கத்துக்காக பூதவுடல் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்

(பி/9109)

## ஏரிக்குள் பாய்ந்தது பஸ் 22 கடற்படையினர் காயம்

### மூதூர், பச்சனூரில் சம்பவம்

மூதூர், மார்ச் 12

மூதூர், பச்சனூர் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற பஸ் விபத்தில் கடற்படையினர் 22 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சேருநுவரப் பகுதியில் இருந்து நிலாவெளி நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த கடற்படைக்குச் சொந்தமான பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே உள்ள ஏரிக்குள் பாய்ந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோகண நேற்றிரவு தெரிவித்தார்.

பஸ்ஸிலிருந்து காயங்களுடன் மீட்கப்பட்ட கடற்படையினர் அவசர அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவத்தில் காயமடைந்த 22 கடற்படையினரும் மூதூர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவர்களில் 9 பேர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## இளைஞர்களிடம் கையெழுத்து

நெடுங்கேணி,மார்ச்12

ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராக வவுனியா வடக்கு இளைஞர்களிடம் கையெழுத்துச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியா மாவட்டம் முழுவதும் இளைஞர் சேவை மன்றங்கள் மூலமாக இளைஞர்களிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக வவுனியா இளைஞர் சேவை மன்றத்தினருக்குக் கையெழுத்துப் பெறு [illegible]

(க-435)

## மரண அறிவித்தல்கள்

### சின்னராசா கந்தசாமி



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னராசா கந்தசாமி நேற்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை.

தகவல்:
நா.சிவசுப்பிரமணியம்
(மருமகன்).

### பூதப்பிள்ளை பொன்னம்பலம்

(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர் - கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்)



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை பொன்னம்பலம் நேற்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் மருமகனும் மற்றும் ஞானமணியின் அன்புக் கணவரும் தர்மலிங்கம், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயமனோகரி, ஜெயவதனா (ஆசிரியர், இணுவில் இந்துக்கல்லூரி), சோபனா (U.K.), தவலோகநாயகி (பிரான்ஸ்), ஜெனார்த்தனன் (விரிவுரையாளர், தொழில் நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்), சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைரவநாதன், கங்காதரன், சிவபாஸ்கரன் (U.K.), சர்வானந்தன் (பிரான்ஸ்), சியானா ஆகியோரின் அன்பு மாமனும் தமிழினி, விஷ்ணுப்பிரியன், யதுர்ஷிகா, பானுஜன், பியானி, தனோஜி, மாயவன், ஜனகன், கிருஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2012) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கந்தசாமி
கோயிலடி, இணுவில்.

(15584)

தகவல் :
பொ.ஜனார்த்தனன் (மகன்)
(விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆதரவாகப் பிரேரணை ஜெனிவாவில் கொண்டுவர சீனா முயற்சி

## கொழும்பு மண்டியிட்டதால் பீஜிங் தீவிர ஆலோசனை

01↘ ருந்து தெரிய வருகின்றது.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தாக்கல் செய்துள்ள பிரேரணை எதிர்வரும் 22 ஆம் அல்லது 23 ஆம் திகதிகளில் வாக்கெடுப்புக்கு விடப்படலாம் என்பதால் அதற்கு முன்னர் இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்து இலங்கைக்கு ஆதரவைத் தேடிக் கொடுக்கும் முயற்சியிலேயே சீனா இறங்கும் எனக் கூறப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடொன்று சபை அமர்வில் பிரேரணை ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டுமாயின் மாநாடு நிறைவடைவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னரே அறிவிக்கவேண்டும். அந்த அடிப்படையில் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னரே இலங்கைக்குச் சார்பான பிரேரணையை சபையில் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்நாட்டு போரின் பின்னர் இலங்கை அரசு முன்னெடுத்துவரும் நல்லிணக்க செயற்பாடுகள், மனித உரிமைகள் மேம்பாட்டுத்திட்டம் உள்ளிட்ட கொழும்பு அரசுக்குச் சார்பான பல விடயங்களை பீஜிங் அந்தப் பிரேரணையில் முன்வைப்பதற்கு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

அதேவேளை, ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கடந்த புதன்கிழமை அமெரிக்கா சமர்ப்பித்தமை தெரிந்ததே. (ஒ-சி)

## அடுத்த 'கொலைக்களம்' புதனிரவு 10.55 மணிக்கு





*தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயதைக் கொண்ட கடைசி மகனும் வன்னி இறுதிக் கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டு விட்டார் என்ற தகவலை பிரிட்டிஷ் சனல்-4 தொலைக்காட்சி தயாரித் துள்ள புதிய காணொலியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.*

*பிரபாகரனின் 12 வயதான மகன் பாலச்சந்திரனின் மார்புப் பகுதியை ஐந்து துப்பாக்கி ரவைகள் துளைத்துள்ளன. அத்துடன் அவருக்கு அருகில் ஐவரின் சடலங்களும் காணப்படுவதாக அந்தக் காணொலியில் காட்சியும் உள்ளது.*

*கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற யுத்தத்தின் போது இலங்கை இராணுவம் புரிந்த மனித உரிமை மீறல்கள் குறித்து இந்த காணொலியில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.இலங்கையின் கொலைக்களங்கள் தண்டிக்கப்படாத குற்றங்கள் என்ற தலைப்பைக் கொண்ட இந்தக் காணொலி சனல் 4 தொலைக்காட்சியில் எதிர்வரும் புதன்கிழமை (14) இரவு இலங்கை நேரப்படி இரவு 10.55க்கு ஒளிபரப்பப்படவுள்ளது. (ஒ-15)*

## கிளிநொச்சி புதிய செயலகம் அடிக்கல் நட்டார் பஸில்



01↘ தினராக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். இதன்போது மாவட்ட செயலகத்துக்கான நினைவுக் கல்லும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் அமைச்சர்களான றிஷாட் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் லியனகே, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்பின் கிளிநொச்சிக் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்மடுக்குளத்துக்குச் சென்ற அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட அந்தக் குளத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் பஸில், றிஷாத் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வின் இறுதியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தெளிகருவிகள், சூரிய மின்கலத் தொகுதிகள் என்பன வழங்கப்பட்டன.

இதேவேளை தற்போது புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட குளம் ஏற்கனவே இருந்த குளத்தோடு ஒப்பிடுகையில் கொள்ளளவில் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15-6)

## பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த விடோம் ஜெனிவா மாநாடு முடிந்ததும் போராட்டம்

01↘ கூறப்படும் பிரேரணை ஜெனிவா மாநாட்டில் நிறைவேறும் பட்சத்தில் அதற்குக் கண்டனம் தெரிவித்து மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனக் கூறப்படுகின்றது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும், அதனைச் சார்ந்த சில அமைப்புகளும் இணைந்து எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பில் விசேட மாநாடொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

அதற்கு அடுத்தபடியாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட தேசிய அமைப்புகள் ஒன்றியம் முதற்கட்டமாக அநுராதபுரத்தில் தமது பரப்புரைகளை ஆரம்பிக்கவுள்ளன. சிங்கள மக்கள் கணிசமாக வாழும் பிரதேசங்களை இலக்கு வைத்தே தெளிவுபடுத்தல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் முக்கிய பிரமுகரொருவர் தெரிவிக்கையில்;

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தக் கூடாது என்பதுதான் எமது நிலைப்பாடு. இருப்பினும், சர்வதேசத்துக்கு அரசு உறுதியளித்துள்ளதால் ஒருசில சிபாரிசுகளையாவது நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும்.

அதனால்தான் நாம் கூறுகின்றோம், அதிகாரப்பரவலாக்கல், போர்க்குற்றம் சம்பந்தமான உள்ளக விசாரணை போன்ற நாட்டுக்குப் பாதகமான பரிந்துரைகளைத் தவிர்த்து செய்யக் கூடியவற்றைச் செய்யுங்கள் என்று.

அரசு முழுமையான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக்கூடாது என சிங்கள மக்களை ஒன்றுதிரட்டி நாம் வலியுறுத்துவோம். முதற்கட்டமாக அமைச்சர் விமல் வீரவன்ஸ விசேட வேலைத் திட்டமொன்றை எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிப்பார்.

அதனைத் தொடர்ந்து சில சிங்கள அமைப்புகள் நாடளாவிய ரீதியில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கும். ஜெனிவா மாநாடு நிறைவடையும் கையோடு நாம் இதனை ஆரம்பிப்போம். ஜாதிக ஹெல உறுமயவும் எமக்கு ஒத்துழைப்பு வழங்க இணங்கியுள்ளது எனக் கூறினார் அந்தப் பிரமுகர். (ஒ-சி)

## முஸ்லிம் நாடுகளை நம்பியிருந்த இலங்கையின் தலையில் பேரிடி

01↘ நாடுகளாகவுள்ளன. இவற்றுள் கட்டார், சவூதி அரேபியா மற்றும் மலேஷியா ஆகிய நாடுகள் மாத்திரமே இலங்கைக்கு எதிரான பிரேரணையை எதிர்க்குமெனக் கூறியிருந்தன.

ஆனாலும், மேற்படி நாடுகளும் இறுதிவேளையில் தமது முடிவை மாற்றிக் கொள்ளக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என ஜெனிவாத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஜோர்தான் நாட்டின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முகமாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டுக்கு விஜயம் செய்யவிருந்த வேளையிலேயே இந்த நம்பகரமான தகவல் கிடைக்கப்பெற்றிருக்கிறது என அரச பிரமுகர் ஒருவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

பங்களாதேஷ், இந்தோனேஷியா, குவைத், லிபியா, மாலைதீவு, நைஜீரியா ஆகிய மீதமுள்ள முஸ்லிம் நாடுகள் இதுவரை எவ்வித கருத்துகளையும் கூறாது மௌனம் காத்து வருகின்றன.

மேற்படி நாடுகளின் பிரதிநிதிகளை ஜெனிவாவில் வைத்து இலங்கை அமைச்சர்கள் குழு சந்தித்து கலந்துரையாடியிருந்தபோதிலும், அந்நாடுகளின் மௌனம் இலங்கையை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது எனவும் குறிப்பிடப்படுகின்றது. (ஒ-சி)

## மருத்துவ உதவியாளர்கள் நாளை முதல் வேலை நிறுத்தம்

01↘ கவியலாளர்கள், இயன் மருத்துவர்கள், தொழில் வழிச் சிகிச்சையாளர்கள் ஆகியோர் தொழில் சங்க நடவடிக்கையில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து அதனை உடனடியாக நடைமுறைப்படுத்தக் கோரி இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

* அண்மையில் சுகாதாரத்துறையில் ஏனைய பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்.
* பட்டதாரிகளாக வெளியேற்றப்பட்டுள்ள மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களின் நியமனத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தல்.
* கடந்த 6 வருடங்களாக வழங்கப்படாதுள்ள வகுப்பு-1 இற்கான நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல்.
* 15 வருடங்களாக வழங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ள விசேட தரத்திற்கான நியமனங்களை உடனடியாக வழங்குதல்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தொழிற்சங்கம் அறிவித்துள்ளது என யாழ். மாவட்ட நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் தலைவர் என்.ஜெயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் நடைபெறும் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களும் இணைந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த ஜனவரி 18ஆம் திகதி இந்த ஒன்றியம் நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறைப் போராட்டம் ஒன்றையும் ஒருநாள் அடையாளப் போராட்டமாக நடத்தியது. எனினும் அதற்கு அரசு உரிய பதில் தராததால் நாளை 13ஆம் திகதிமுதல் காலவரையறையற்ற போராட்டமாக விரிவுபடுத்தப் பட்டுள்ளதாக ஒன்றியம் அறிவித்துள்ளது. (ஒ-10-149)

## ஹட்டனில் எதிர்க்கட்சிகள் போராட்டம்

01↘ சதாசிவம் ஆகியோர் தலைமையில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் எதிரணியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தலைநகர் கொழும்பிலும், களுத்துறையிலும் நடைபெற்றன.

ஹட்டன் நகரில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, நவ சமசமாஜ கட்சி, ஐக்கிய சோஷலிச கட்சி, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் மற்றும் இக்கட்சிகளின் கீழ் செயற்படும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும் கலந்து கொள்வார்கள்.

அரசின் தவறான பொருளாதார கொள்கைகளினால் நடைமுறையாகியுள்ள எரிபொருள் விலை உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத்தொழிலாளர்கள், ஓட்டோ ஓட்டுநர்கள்,பஸ் மற்றும் வாடகை வாகன உரிமையாளர்கள், சிறு வர்த்தகர்கள் உட்பட அனைத்து பிரிவினரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என பொது எதிரணியின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

## வடக்கில் தாய், தந்தை இருவரையும் இழந்த சிறார் எண்ணிக்கை 2,087

01↘ மாகவே அதிகமான சிறார்கள் தமது பெற்றோரை இழந்துள்ளனர். தவிர வறுமை விபத்து மரணங்கள், இயற்கை மரணங்களும் இதற்குக் காரணமாக உள்ளன.

இவை பெற்றோர் இருவரையும் இழந்த நிலையில் யாழ்ப்பாணச் சிறுவர் இல்லங்களில் 127 பேரும், வவுனியா சிறுவர் இல்லங்களில் 120 பேரும், மன்னார் சிறுவர் இல்லங்களில் 99 பேரும், கிளிநொச்சி சிறுவர் இல்லங்களில் 41 பேரும், முல்லைத்தீவு சிறுவர் இல்லங்களில் 31 பேரும் தங்கியுள்ளனர்.

பெற்றோர் இருவரையும் இழந்த நிலையில் சிறுவர் இல்லங்களுக்கு வெளியே யாழ்ப்பாணத்தில் 413 பேரும், வவுனியாவில் 360 பேரும், முல்லைத்தீவில் 357 பேரும், கிளிநொச்சியில் 334 பேரும், மன்னாரில் 205 பேரும் உறவினர்களுடன் தங்கியுள்ளனர்.

பெற்றோரில் ஒருவரை மட்டும் இழந்த நிலையில் யாழ்ப்பாண சிறுவர் இல்லங்களில் 563 பேரும், கிளிநொச்சி சிறுவர் இல்லங்களில் 232 பேரும், வவுனியா சிறுவர் இல்லங்களில் 223 பேரும், மன்னார் சிறுவர் இல்லங்களில் 120 பேரும், முல்லைத்தீவு சிறுவர் இல்லங்களில் 57 பேரும் தங்கியுள்ளனர்.

பெற்றோரில் ஒருவரை மட்டும் இழந்த நிலையில் சிறுவர் இல்லங்களுக்கு வெளியே யாழ்ப்பாணத்தில் 439 பேரும், மன்னாரில் இரண்டாயிரத்து 387 பேரும், முல்லைத்தீவில் இரண்டாயிரத்து 61 பேரும், கிளிநொச்சியில் இரண்டாயிரத்து 61 பேரும், வவுனியாவில் 261 பேரும் உறவினர்களுடன் தங்கியுள்ளனர்.

சிறுவர் இல்லங்களுக்கு வெளியே உள்ள இந்தச் சிறார்களில் பெற்றோரில் ஒருவரை மட்டும் இழந்த நிலையிலேயே அதிக சிறுவர்கள் உள்ளனர்.

இவ்வாறு 9 ஆயிரத்து 209 சிறார்கள் தங்கியிருக்கின்றனர். இவ்வாறுபதிவுகள் உறுதிப்படுத்துகின்றன என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்திய சக்தியை விரட்ட வேண்டுமானால் மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

## லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

ஏகாதிபத்திய சக்திகளின் ஆதிக்கத்தை நாட்டிலிருந்து விரட்டியடிக்க வேண்டுமானால், முதலில் மஹிந்த அரசை ஆட்சியிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவருமான கே.டீ.லால்காந்த தெரிவித்தார்.

மஹிந்த தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காக, ஏகாதிபத்திய சக்திகளின் நாடகங்களை அரங்கேற்றுவதற்காக நாட்டில் களம் அமைத்துக் கொடுத்துள்ளார். அவர்களின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து, ஆமாம் சாமி போட்டுக் கொண்டு தான் நினைத்ததை நிறைவேற்ற எத்தனித்துக் கொண்டிருக்கும் அரசிற்கு நாம் இனியும் இடமளிக்கமாட்டோம். ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராகப் போராடுவதற்கு நாம் தயாராக உள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசு கூட்டு நாடகமொன்றை நடத்திவருகின்றது. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துமாறு மேற்குலகம் இலங்கையை வலியுறுத்தி வருகின்றது.

இந்நிலையில், ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவோம் என அரசும் சர்வதேசத்திடம் உறுதியளித்துள்ளது. ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தமது முழு ஆதரவையும் மஹிந்த அரசு கூட்டு நாடகம் ஒன்றை நடத்திவருகின்றது. ஏகாதிபத்திய சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து அவை சொல்வதைச் செய்வோம் என அரசு செயற்படுகின்றது.

நமது நாட்டை ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து மீட்கவேண்டும். மஹிந்த ஆட்சி இருக்கும்வரை இது நடைபெறாது. அதனால் முதலில் மஹிந்தவை ஆட்சியிலிருந்து விரட்டியடித்து, தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஏகமனதுடனான விருப்பத்திற்கிணங்க ஓர் ஆட்சியை நாட்டில் நிலை நிறுத்த வேண்டும்.- என்றார்.

(ஒ-சி)

# அமெரிக்கப் பிரேரணை கண்துடைப்பு தமிழருக்கு எந்த நன்மையும் இல்லை

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

இலங்கையில் இடம்பெறும் தமிழின அழிப்பு தொடர்பில் விசாரணை நடத்தி அதன் அடிப்படையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா ஜெனிவாவில் சமர்ப்பித்திருக்கவேண்டும். அவ்வாறில்லாது, முறையற்ற விதத்தில் தயாரிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பிரேரணையைச் சமர்ப்பித்திருப்பது இலங்கைத் தமிழர்களுக்கு எதுவித நன்மையையும் அளிக்கப்போவதில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையை ஆட்சி செய்த பிரிட்டிஷார் எப்போது இந்த நாட்டை விட்டு வெளியேறினார்களோ அன்றிலிருந்து இன்றுவரை தமிழின ஒழிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில்தான் தமிழின அழிப்பு உச்சத்தை அடைந்தது. இன்னும் தொடர்கிறது. அப்படிப்பட்ட ஆட்சியாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சர்வதேசம் எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இலங்கைக்கு எதிராக அமெரிக்கா இப்போது எடுத்திருக்கும் நடவடிக்கையும் பிரயோசனமற்றது. தமிழர்களுக்கு எந்த விதத்திலும் நன்மையளிக்காது.

தமிழர்களுக்கு உதவுவதுபோல் காட்டிக்கொண்டு இலங்கை தயாரித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஜெனிவா மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் அமெரிக்கா பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்கு சர்வதேச மட்டத்தில் நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் தமிழர்களின் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அதன் அடிப்படையில் தான் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனவே, இதனைப் பார்க்கும்போது அமெரிக்கா எடுத்திருக்கும் நடவடிக்கை தமிழர்களுக்கு நன்மையளிக்காது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை என்பது தமிழர்களின் பிரச்சினைகளை அரைகுறையாக ஆராய்ந்து தயாரிக்கப்பட்ட அறிக்கை. அந்த ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாதமையால் அதிகமானவர்கள் பயத்தின் காரணமாக ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கவில்லை. இதனால், தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் கொடுமைகள் பதிவுசெய்யப்படவில்லை.

இவ்வாறு தமிழர்களின் பிரச்சினைகளை முழுமையாக ஆராயாது ஒருசிலவற்றை மாத்திரம் ஆராய்ந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா சமர்ப்பித்திருப்பது வெறும் கண்துடைப்புத்தான்.

தமிழர்களுக்கு உதவும் எண்ணம் அமெரிக்காவுக்கு இருந்திருந்தால் இலங்கையை ஆட்சிசெய்த பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறியது முதல் இப்போதுவரை இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான அனைத்து கொடுமைகளையும் ஆராய்ந்து அதன் அடிப்படையில் பிரேரணையை சமர்ப்பித்திருக்க வேண்டும். இல்லையேல், ஆகக்குறைந்தது ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டாவது இப்பிரேரணையை சமர்ப்பித்திருக்கவேண்டும் - என்றார்.

(ஒ-சி)

# எஸ்.பியின் சகோதரரின் மனைவிக்குச் சொந்தமான இரு பஸ்கள் தீக்கிரை



கண்டி, மார்ச் 12

அமைச்சர் எஸ்.பி திஸ்ஸாநாயக்கவின் சகோர்தரரும் மத்திய மாகாண சபையின் தலைவருமான சாலிய திஸ்ஸா நாயக்கவின் மனைவிக்குச் சொந்தமான இரு பஸ்களே இனந்தெரியாத நபர்களால் தீ வைத்து நாசப்படுத்தப்பட்டது.

அங்குரான்கெத்த, மாதன்வலவிலுள்ள அவரது வீட்டுக்கு முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வேளையில் பஸ்களுக்கு தீ வைக்கப்பட்டது. மத்திய மாகாணத்தில் தனியார் பஸ்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்காத காரணத்தாலேயே இந்தத் தீ வைப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-15)

# கொலன்னாவையில் நேற்றுமுன்தினம் இராணுவம் –பொதுமக்கள் மோதல்

## வெள்ளை வானில் தன்னைக் கடத்த முயற்சித்ததாக கூறுகிறார் நகரசபைத் தலைவர்

கொழும்பு, மார்ச் 12

தலைநகர் கொழும்பின் புறநகரான கொலன்னாவையில்நேற்றுமுன்தினம் மாலை வெள்ளை வான் ஒன்றில் சென்ற இராணுவத்தினருக்கும் பிரதேச மக்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

வெள்ளை வானில் வந்து தன்னைக் கடத்த முயன்றவர்களை பிரதேச மக்கள் தாக்கினர் என்று கொலன்னாவை நகரசபைத்தலைவர் ரவீந்திர உதயஷாந்த பி.பி. சி.யிடம் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் தனது சகோதரனைக் கடத்திச் சென்று கொன்ற வெள்ளை வான் குழுவினரே இம்முறை தன்னையும் கடத்திச் செல்ல முயற்சித்தனர் என்று கூறிய அவர் தன்னைக் கடத்த வந்த குழுவில் வஷனியா இராணுவ சிறப்பு அதிரடிப் படையில் கப்டன் தரத்தில் உள்ள இராணுவ அதிகாரியும் இருந்தார் என்றும் வானில் வந்தவர்களைப்பிடிக்க முயன்ற போது, தன்னை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் அதன்பின்னர், தானும் பதிலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் ரவீந்திர உதயஷாந்த தெரிவித்தார்.

பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சிலர் போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் இணைந்து, இராணுவத்தைப் பயன்படுத்தி அரசியல் பழிவாங்கலுக்காக தன்னைக் கொல்ல முயற்சிப்பதாகவும் அவர் பி.பி.சியிடம் மேலும் கூறினார்.

குற்றவாளிகளைக் கொல்லும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளவெள்ளைவான்குழுவொன்று தவறு புரியாதவர்களைக் கூட பணத்திற்காககடத்திச்சென்றுகொன்றுவிடும்அபாயம்இருப்பதாகவும், தனக்கு நேர்ந்துள்ள அச்சுறுத்தல் குறித்து இராணுவ உயர்மட்டத்திற்கு அறிவித்துள்ளதாகவும் கொலன்னாவை நகரசபைத் தலைவர் தமிழோசையிடம் தெரிவித்தார்.

### இராணுவம் மறுக்கிறது

இதேவேளை, கொலன்னாவை நகரசபைத் தலைவரின் குற்றச்சாட்டை இலங்கை இராணுவத் தரப்பு மறுத்துள்ளது.

இராணுவத்தினர்சென்றவான்ஒன்று கொழும்பின் புறநகர்ப் பகுதியான வெல்லம்பிட்டியில், தனிப்பட்ட தேவைக்காகத் தரித்து நின்ற போதே, அங்கிருந்த மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாக இலங்கை இராணுவம் சார்பில் பேச வல்ல அதிகாரி பிரிகேடியர் ஜீ.வி.ரவிப்பிரிய தமிழோசையிடம் கூறினார்.

ஆட்கடத்தல் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டனர் எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டில் உண்மையில்லை என்றும் பிரிகேடியர் ஜீ.வி. ரவிப்பிரிய சுட்டிக்காட்டினார்.

(ஒ-15)

(முற்கொண்டு கிடைத்த செய்தி 17ஆம் பக்கத்தில்)

# “விருட்சம்” இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் விருட்சம் 2012 சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஒ-15)

# எழுத்தாளர் காலமானார்

ஈழத்தின் பிரபல சிறுகதை எழுத்தாளரான தம்பிப்பிள்ளை ஆனந்தமயில் நேற்றுப் பிற்பகல் அவரது ஊரான பொலிகண்டியில் காலமானார்.

இவர்சிறுகதைகள், கவிதைகளைப் படைத்து நாடறிந்த எழுத்தாளராக விளங்கினார். 2010 ஆம் ஆண்டு வடமாகாண சிறந்த சிறுகதை எழுத்தாளருக்கான விருதை 'ஓர் எழுது வினைஞனின் டயறி' என்ற நூலுக்காகப் பெற்றுக் கொண்டார். (ஒ-15)

விசா ஆலோசனைத் துறையில் முன்னிலை வகிக்கும் உறுதியான, திடமான நிலையிலுள்ள முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்றட்டில் மேற்படி ஆள்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

1) வெளிக்கள உத்தியோகத்தர்
[தற்காலிகம்] A/L சித்தியடைந்த இருபாலாரும்.
மாதாந்த அடிப்படை வேதனத்துடன் மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் சேவைக்கேற்றவாறு வழங்கப்படும்.
2) அலுவலக சிற்றூழியர் (பியோன்)
-(அமைய அடிப்படை) இருபாலாரும்.
3) கணக்குப் பதியுனர்-
(அமைய அடிப்படை) இருபாலாரும்.
A/L சித்தி, மேற்படித் துறையில் முன்னனுபவம்.
தலைமைக் காரியாலயத்துக்கு நேரில் வரவும்.
தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் விண்ணப்பதாரி சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

பிரதம நிறைவேற்று அதிகாரி,
தலைமைக் காரியாலயம்,
திசைகாட்டி
(பிறைவேற்) லிமிற்றட்,
37,சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.
021 221 9016

கிளைகள்
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
021 228 5544
மெல்பேர்ண், ஆஸ்திரேலியா
லான்ட் லைன்
0061390437100
23, 1/3, மகேஸ்வரி வீதி, கொழும்பு-06
0112366925

விநியோகஸ்தர் தேவை

தண்ணீர்ப் போத்தல், பழச்சாறுக் கலவை, நூடில்ஸ், சோஸ் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் கம்பனிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர் தேவை.
மேலதிக விபரங்களுக்கு :
B. யோகேஸ்வரன், (R.S.M.)
077-4334727

அரிய சந்தர்ப்பம்! தபால் மூலம் ஆங்கிலம்!

- வீட்டில் இருந்தவாறே ஆங்கிலம் பேச இலகுவாக கற்கலாம்.
- 30 வருடகால அனுபவம் மிக்க பல சிறந்த ஆசிரியர்களால் நவீன அமெரிக்க முறையில் தயாரிக்கப்பட்ட பாடங்கள்.
- ஒவ்வொரு "போயா" விடுமுறையிலும் யாழ்ப்பாணத்தில் இலவச கருத்தரங்கும் - விளக்கங்களும் - நேரடிஉரையாடல்.
- வெளிநாடு செல்வோர் — உத்தியோகம் பார்ப்போர் - நேர்முகப்பரீட்சைக்கு செல்வோருக்கு ஓர் வரப்பிரசாதம்
- ஆங்கிலம் பேசும் போது கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய 100 கருத்துக்கள் அடங்கிய, யாழில் உள்ள ஒரே ஒரு "Etiquette" என்ற கைநூல் உள்ளடங்கும்.
- பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற "சான்றிதழ்"
- முழு விபரங்களும் அறிய, ரூபா 15/= முத்திரை ஒட்டிய தெளிவாக சுயமுகவரி எழுதிய தபாலுறையை உள்ளே வைத்து, விண்ணப்பம் அனுப்பவும். Mobile - 0778501333

Apollo Academy (Correspondence Course)
No. 4 - New Housing Scheme - Kurunagar, Jaffna.

அலுவலக உதவியாளர் / எழுதுனர்கள் தேவை

கணித அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
வேலை இடம்:- யாழ் நகர்.
தொ.இல.:- 0772174751

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.